
பக்கங்கள்: 14


Registered as a Newspaper

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்

நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை
ரூ. 5-00

PUMP
With
Standard Accessories
Select

NEWTONE
Water Pumps

மலை: 5 சுக்கில ஸ்ரீ பங்குனி 18 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 றம்ழான் பிறை 3 (31—03—1990) SANJEAVY REGENERATIVE T'MIL WEEKLY சிகரம்: 8

### சுவீடன் உதவியுடன்

# வடக்கு - கிழக்கிற்கு

# நேரடித் தொலைபேசி

## பாரிய திட்டம் தயாராகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 31

சுவீடன் நாட்டின் உதவியுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதேசங்களுக்கு நேரடித் தொலைபேசிச் சேவை ஏற்படுத்திக் கொடுக்கப்பட இருக்கிறது.

இதற்கான பாரிய திட்டம் ஒன்று செயற் படுத்தப்படவிருக்கிறது.

இத்திட்டத்திற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை சுவீடன் வழங்கும்.

இத்திட்டம் தொடர்பான பூர்வாங்க வேலைகளைச் செய்வதற்காக டென்மார்க் நிபுணர்கள் குழு ஒன்று இரண்டொரு வாரங்களில் இங்கு வர இருக்கிறது.

டென்மார்க் நிபுணர்கள் குழுநேரடித் தொலைபேசிச் சேவைக்கான தொழில்நுட்பத் தேவைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள சுவீடன் தூதரகத்தைச் சேர்ந்த செல்வி. மேஜ்பிரிட் ஆமர் இந்தத் தகவல்களை சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

சஞ்சீவிக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ் மக்கள் அனுபவித்த கஷ்டங்களில் இருந்து மீண்டுள்ள இந்நேரத்தில் இங்கு வந்துள்ளேன்: சுவீடன் உலகில் உள்ள பல நாடுகளுக்கும் உதவி வருகிறது. அந்த வகையில் இங்கு வாழும் மக்களுக்கு எவ்வகையில் உதவலாம் என்ற விடயம் குறித்து ஆய்வு செய்யவே இங்கு வந்துள்ளேன்.

முதன்முதலாக மன்னார் மாவட்டத்தில் பாடசாலைக் கட்டடங்களை அமைக்கவும், ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கவும் உதவிகள்வழங்கினோம்.

சுவீடிஷ் அரசின் உதவிகளை வழங்க உருவாக்கப்பட்ட அமைப்புமூலமே உதவிகளை வழங்குகின்றோம். ''சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்தி அதிகாரசபை'' என்ற அந்த அமைப்பின் மூலம் உதவிகளை வழங்குகிறோம்.

கடந்த காலங்களில் ஐ.நா.

(3ஆம் பக்கம் பார்க்க)

## இன்பருட்டி மீனவர் மீது கடற்படையினர் தாக்குதல்!

யாழ்ப்பாணம், மார்ச் 31

இன்பருட்டிப் பகுதி மீனவர்கள் சிலர் நேற்றுக் காலை கடலில் வைத்து இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் அரசாங்கத்துக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்திருப்பதாக புலிகள் இயக்கப் பிரமுகர் ஒருவர் சஞ்சீவிக்குத் தெரிவித்தார். [உ-9]

## வல்வை முகாம் மூடுவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 31

வல்வெட்டித்துறை ஸ்ரீ லங்கா இராணுவ முகாம் நேற்று முற்று முழுதாக மூடப்பட்டு விட்டது.

கடந்த புதன்கிழமை பலாலியில் இடம் பெற்ற புலிகள் - அரச தரப்பு பேச்சுவார்த்தையின் போது இம் முகாமை 48 மணி நேரத்தில் மூடிவிடுவதென முடிவானது என்பது தெரித்ததே.

முப்பது ஆண்டு காலமாக இந்த முகாம் இங்கு இயங்கி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-9-160)

### சுப நேரம்

31- 3 -1990

சனிக்கிழமை பங்குனி 18

சுபநேரம்:

03- 12முதல் 04-42 வரை

இராகுகாலம்

09-12 முதல் 10-42வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## வாகன வரித் தண்டம் திங்கள் அமுலுக்கு வராது

### அரச அபதிர் முயற்சியால் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

முதல் காலாண்டுக்குள் வாகன வரிப்பத்திரம் பெறுவதற்குத் தவறி இப்போது விண்ணப்பிப்போருக்கு அபராதம் அறவிடும் விதிமுறை திங்கள் முதல் அமுலுக்குவர மாட்டாது.

முதல் காலண்டுக்குள் வாகன வரிப்பத்திரம் பெறாதவர்களுக்கு அதனை இனிமேல் வழங்குவதற்கு 10 வீத தண்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் அறவிடப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இவ்விடயம் தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கொழும்பில் உள்ள சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிளுடன் தொடர்பு கொண்டதன் பயனாக ஏப்பரல் 30 ஆம் திகதிக்குப் பின்னரே அபராதம் விதிக்கும் முடிவு நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-3)

# புனரமைப்புக் கடன் பெற கட்டுப்பாடுகள் தளர்வு!

## இலங்கை வங்கி அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 31

புனரமைப்புக் கடன்களை வழங்குவதற்காக இலங்கை வங்கி விதித்திருந்த கடன் வழங்கு நிபந்தனைகள் தளர்த்தப்பட்டிருப்பதாக வங்கி அதிகாரி ஒருவர் சஞ்சீவிக்குத்தெரிவித்தார்.

குடும்ப அட்டையில் 4-ஆம் இலக்கம் நீக்கப்படாதவர்களுக்கு ஆகக்கூடிய கடன் தொகையாக 50ஆயிரம் ரூபா வரையும்—

5ஆம் இலக்கம் நீக்கப்படாதவர்களுக்கு சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க ஆகக்கூடிய கடன் தொகையாக ஒருலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வரையும்—

7ஆம் இலக்கம் நீக்கப்படாதவர்களுக்கு வியாபார நிலைய புனரமைப்புக்கு ஆகக்கூடிய கடன் தொகையாக இரண்டு லட்சம் ரூபா வரையும் புனரமைப்புக் கடனாக இலங்கை வங்கியால் வழங்கப்பட்டு வருகிறது-

இந்தக் கடன்களைப் பெறுவதற்கு விதிக்கப்பட்டிருந்த

(3ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர்கள் விவரம் நேற்று வெளியானது!

# திட்ட, துணை அமைச்சர்களும் நியமனம்!!

கொழும்பு, மார்ச்31

பிரதம மந்திரி உட்பட அமைச்சரவையில் இடம் பெறும் 25 அமைச்சர்கள் மற்றும் 29 துணைஅமைச்சர்கள், 23 திட்ட அமைச்சர்கள் ஆகியோரின் பெயர் விவரங்களை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா நேற்று வெளியிட்டார்.

இதனையடுத்து நேற்றுக் காலையிலும் நண்பகலிலும் ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாஸா முன்னிலையில் அவர்கள் அனைவரும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

எதிர்பார்க்கப்பட்டபடியே பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் பதவிகள் மீண்டும் திரு. டி. பி. விஜேதுங்கவிற்கே வழங்கப்பட்டன. திரு. காமினி திஸாநாயக்காவும் அமைச்சர் பதவியை இழந்தார்.

அதேவேளை பாதுகாப்பு மற்றும் பௌத்த சாசன அமைச்சுக்களை ஜனாதிபதி தொடர்ந்தும் தமது வசமே வைத்துக்கொண்டார்.

திரு. ரஞ்சன் விஜேரத்னாவுக்கு வெளிவிவகார அமைச்சுக்குப்பதிலாக பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சு வழங்கப்பட்டது. அதே வேளை தொடர்ந்தும் பாதுகாப்பு துணைஅமைச்சர் பதவியை அவரே வகிப்பார்.

வெளிவிவகார அமைச்சர் பதவி ஹரோல்ட் ஹேரத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

அமைச்சரவையின் முக்கிய உறுப்பினரான ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீதுவுக்கு நீதி அமைச்சு ஒப்படைக்கப்பட்டது. அவர் முன்னர் பதவி வகித்த உயர்கல்வித்துறைக்கு அவர் திட்ட அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

திரு லலித் அத்துலத்முதலி கல்வி, உயர்கல்வி அமைச்சைப் பொறுப்பேற்றார். (உ)

> **அமைச்சரவை**
>
> துணை அமைச்சர்கள்
>
> திட்ட அமைச்சர்கள்
>
> முழு விவரம்
>
> 3 ஆம் பக்கத்தில்...!

## அமைச்சர் பதவிகளில் தமிழர், முஸ்லிம்கள்!

கொழும்பு, மார்ச் 31

அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும் ஒரே ஒரு தமிழ் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் ஆவார்.

ஜனாப்.ஏ.ஸி.எஸ் ஹமீத், ஜனாப். ஏ. ஆர். மன்சூர் ஆகிய இருவருமே அமைச்சரவையில் இடம்பெறும் முஸ்லிம்களாவர்.

துணைஅமைச்சர் பதவி

(3ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் 125 எம்.பிக்களில் 75 பேருக்கு அமைச்சர் பதவி!

கொழும்பு, மார்ச் 31

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் 125 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 75 பேருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

26 அமைச்சர்கள், 29 துணை அமைச்சர்கள், 23 திட்ட அமைச்சர்கள் என மொத்தம் 78 துறைகளில் அமைச்சர்பதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இரண்டொரு அமைச்சர்களுக்கு துணை, மற்றும் திட்ட அமைச்சர்கள் பதவி மேலதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது.

அதனால் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்டோரின் மொத்த எண்ணிக்கை 75.

நாடாளுமன்றத்தில் உள்ள ஐக்கிய கட்சி உறுப்பினர்களில் 60 வீதமானோருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது. (உ)

## யாழ். உ. அ. பிரிவுகளில் அடுத்தவாரம் காணிக்கச்சேரி

யாழ்ப்பாணம், மார்ச் 31

காணியற்றவர்களுக்குக் காணிவழங்கும் ஜனாதிபதியின் திட்டத்தின்கீழ் ஆறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் அடுத்த வாரத்தில் காணிக்கச்சேரிகள் நடத்தப்பட இருக்கின்றன.

காணியற்றவர்களுக்கு 500 ஏக்கர் அரச காணிகளைப் பகிர்ந்தளிப்பதுதொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவே காணிக் கச்சேரிகள் நடத்தப்பட உள்ளன.

ஏப்ரல் மாதத்துக்குமுன் காணிகளை வழங்கவேண்டும் என்ற ஜனாதிபதியின் பணிப்புரையை அடுத்து விரைவாக வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

தெல்லிப்பளை, மருதங்கேணி, ஊர்காவற்றுறை, வேலணை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலேயே இந்தக் காணிக்கச்சேரி நடைபெறுகிறது. (ஓ-3)

## அறுவர் புதிய முகங்கள்

ஆறு துணை அமைச்சர்கள் முழு அமைச்சர்கள் பதவிக்கு நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

சந்திரா பண்டார, ஹரோல்ட் ஹேரத், வீரசிங்க மல்லிமாராச்சி, ரூபா கருணாதிலக, தர்மதாச பண்டா, ஜி. எம். பிரேமச்சந்திரா ஆகியோரே அந்த அறுவருமாவர்.

வர்த்தகம், சுற்றாடல், கைத்தறி. தொழிற் பயிற்சி ஆகிய புதிய துறைகளும் அமைச்சுக்களில் இடம் பெற்றன.

திருவாளர்கள் டி. பி.விஜேதுங்கா, விஜேபாலமென்டிஸ், எம். வின்சென்ட் பெரேரா, எஸ். தொண்டமான், ரணில் விக்கிரமசிங்கா, பி. தயாரத்ன, அலிக் அலுவிகார, நந்தா மத்தியூ, ஏ ஆர். மன்சூர், ரேணுகாஹேரத் பி. சிறிசேன கூரே ஆகியோருக்கு முன்னர் வகித்த அமைச்சுக்களே மீண்டும் வழங்கப்பட்டுள்ளன. (உ-எ)

## தொடர்ந்தும் காமினி ஐ. தே. க வில் இருப்பாராம்

கொழும்பு, மார்ச் 32

என்னதான் நடந்தாலும் நான் கட்சியில் இருந்து விலகப்போவது இல்லை.

முன்னாள் பெருந்தோட்டத் துறை அமைச்சர் காமினி திஸாநாயக்கா முன் கண்டவாறு செபன்னார்.

மீண்டும் அவர் அமைச்சராக நியமிக்கப்படமாட்டார் என்ற செய்தி பற்றி செய்தியாளர்கள். திரு. காமினி திஸாநாயக்காவிடம் கருத்துக் கேட்டனர்.

அப்போதே திரு. திஸாநாயக்கா முன்கண்டவாறு சொன்னார்.

நான் தொடர்ந்து கட்சியில் இருந்து பணிபுரிவேன்'' என்றும் திரு. திஸாநாயக்கா சொன்னார். [ஓ- எ]

## சிங்களக் குடியேற்றம் பற்றி பிரேமா-புலிகள் பேச்சுவார்த்தை

திருகோணமலை, மார்ச் 31

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எதிர் வரும் 4ஆம் திகதி முக்கிய பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

இத்தகவலை திருகோணமலை மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. ரூபன் தெரிவித்தார்.

நாமல்வத்த, தெகிவத்த, மிகிந்துபுர உட்பட அம் மாவட்டத்தில் ஏனைய பகுதிகளின் சிங்களக் குடியேற்றம் தொடர்பாக இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது விரிவாக ஆராயப்படும் என நம்பகமாகத் தெரியவந்தது.

### நோன்பு திறக்கும்நேரம்

31 — 03 — 90

ஸஹர் முடிவு — 4.36

நோன்பு திறக்கும் நேரம் 6.21

### அத்துமீறியதற்காகத் தடுத்து வைக்கப்பட்ட

# தமிழக மீனவர் விடுவிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 31

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறிப் புகுந்து வட பகுதி மீனவர்களின் வலைகளை அறுத்து மீன்பிடித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் 316 தமிழக மீனவர்களும் இன்பருட்டிக் கடற்கரையில் தடுத்து வைக்கப்பட்டபின்னர் நேற்று விடுவிக்கப்பட்டனர். தத்தமது படகுகளிலேயே அவர்கள் திரும்பிச் சென்றனர்.

நயினாதீவுப் பகுதியில் இதேபோன்று அத்துமீறிச் செயற்பட்டதற்காக இவர்கள் ஏறகனவே எச்சரிக்கை செய்யப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாகவும்—

மீண்டும் அவர்கள் அதே செயலில் ஈடுபட்டதை அடுத்து கடந்த புதனன்று இன்பருட்டிப் பகுதிக்கு பலவந்தமாக அழைத்து வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக தமிழக முதல்வர் கருணாநிதி தலையிட்டதை அடுத்து மீனவரும், படகுகளும் நேற்றுவிடுவிக்கப்பட்டதாக ரூபவாகினி நேற்று தனது செய்திக்குறிப்பில் தெரிவித்தது.

நேற்றுக் காலையில் முதல்வர் கருணாநிதி தொலைபேசிமூலம் ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் இது விடயமாக தொடர்பு கொண்டார் என்றும்—

அதனை அடுத்து ஜனாதி

(3ஆம் பக்கம் பார்க்க )

### மீனவர்கள் சேர்ந்தனர்

சென்னை, மார்ச் 31

இன்பருட்டியில் இருந்து நேற்று நண்பகல் புறப்பட்ட 316 தமிழக மீனவர்களும் நேற்றிரவு பத்திரமாக நாகப் பட்டனம் போய்ச் சேர்ந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ)

## கல்கத் அடைக்கலத்தில் கல்கத்தாவில் வரதர்!

### சென்னைப் பத்திரிகை தகவல்

சென்னை, மார்ச் 31

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த திரு. அ.வரதராஜப்பெருமாள் இப்போது எங்கே இருக்கிறார்?

அவர் இந்தியாவில் ஒரிஸ்ஸாவில் இருப்பதாக முதலில் கூறப்பட்டது. அவர் சென்னையில் இருப்பதாகவும் வதந்திகள் வந்ததுண்டு.

அவர் மொரிஷியஸ் நாட்டுக்குச் சென்றுவிட்டதாக நம்பிக்கையாகச் சொல்லப்பட்டது.

இந்திய அமைதிப் படைத்

(3 ஆம்பக்கம் பார்க்க)

## யாழ் இரவு ரயிலில் மீண்டும் "மெயில்" சேவை

யாழ்ப்பாணம் மார்ச் 31

யாழ் - கொழும்பு இரவு ரயிலில் மீண்டும் தபால் பிரிக்கும் இணைப்பு மெயில் சேவை ஆரம்பமாகவுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை (2 ஆம் திகதி) முதல் இச்சேவை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும் ரயிலில் ஆரம்பித்து வைக்கப்படும் என்று யாழ் பிரதம தபாலக தபாலதிபர் திரு. எஸ். பரராஜசிங்கம் சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து இச்சேவை நாளாந்தம் தடையின்றி நடைபெறும்.

மேலும் காங்கேசன்துறையிலிருந்து இந்திய அமைதிப் படையினர் நீங்கியதைத் தொடர்த்து தபால் ஊழியர்

(3-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Honda C 70 ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு மு. விமலேசன், அரசடி லேன், திருநெல்வேலி, கிழக்கு, யாழ்ப்பாணம். (3054)

உரும்பிராய் சந்தியில் மானிப்பாய் வீதியை முகப் பாக்க நாலு பரப்பு வரும் படிக்காணி, கிணற்றுடன் சிறந்த தண்ணீர், குடியிருப்புக்கும் வியாபாரத்திற்கும் தகுந்த இடம். கடிதம் மூலம் உடன் தொடர்பு கொள்ளவும். No. 665, C/o உதயன். (3050)

பாவித்த நல்ல நிலையிலுள்ள ஹொண்டா பென்லி சுப்பர் மோட்டர் சைக்கிள் விற்பனைக்குண்டு வார நாட்களில் காலையில் பார்வையிலாம். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி 19, மூத்ததம்பி வீதி, மானிப்பாய். (3043)

Bangkok giant gauras பாங்கொக் கொய்யாக்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. தாய் மரத்தை பழங்களுடன் பார்க்கலாம். பழம் ஒவ்வொன்றும் 1 கிலோ நிறைக்குக் கூடுதலானது. பழம் இனிமையானது. 18 மாதத்தில் பலன் தரக் கூடியது. யோ. பத்திநாதன், டச்வீதி, உடுவில். (3042)

அரசாங்க அனுமதி பெற்று இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள புதிய பம்பாய் வெண்காய விதைகள் கீழ்வரும் இடங்களில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. நா. சின்னத்துரை, மே/பா C.O. சிங்கராசா, அராலி தெற்கு, சிவஐங்கரன் ஸ்ரோர்ஸ், (மருந்துக்கடை) கொட்டைக்காடு, அராலி. (3045)

புதிய தமிழ் Standard, தட்டச்சு இயந்திரம் மற்றும் ஆங்கிலம் Portable, Standards, Typewriters விற்பனைக்கு உண்டு. Fudo, 39/17, மின்சாரநிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (Shabara-Samy &Co) அருகாமையில்). (சி/4191)

### தேவை

கௌரவமான இருவரைக் கொண்ட இளம் குடும்பம் ஒன்றுக்கு சகல வசதிகளுடனும் வீடு தேவை. நல்லூர், திருநெல்வேலி, கல்வியன்காடு, இருபாலை, கலட்டி, விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும். No 667, C/o உதயன். (3053)

பிடவை வியாபாரத்தில் நன்கு அனுபவமிக்க ஒருவர் தேவை. கடைக் கணக்கும் எழுதக் கூடியவராக இருந்தால் நன்று. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும். கவிதா ரெக்ஸ்ரைல்ஸ், 21, பெரியகடை, யாழ்ப்பாணம். (3044)

### மணமகன் தேவை

28 வயது நிரம்பிய A/L படித்த அழகிய பிராமண குலப்பெண்ணுக்கு அதே குலத்தைச் சேர்ந்த 30-35 வயதுடைய நல்லொழுக்கமும் நிரந்தர உத்தியோகமுடைய மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். தகுதிக்கேற்ப சீதனம் கொடுக்கப்படும். விளம்பர இலக்கம் 113, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (12219)

### மணமகள் தேவை

யாழ் இந்து வேளாள குலப் பெற்றோர் விரைவில் இங்கு வரவுள்ள B. com பட்டதாரியும், I. C. M. A சித்தியெய்தி Accountant ஆக லண்டனில் தொழில் புரியும், 32 வயதும், 5' 6'' உயரமும், உள்ள அழகிய மகனுக்கு பட்டதாரி டாக்டர், Accountant Computer அல்லது A/L சித்தி எய்திய அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். மணமகள் லண்டனில் இருப்பின் விரும்பத்தக்கது. 655, C/o உதயன். (3009)

யாழ் இந்து வேளாள குலப் பெற்றோர் கொழும்பிலுள்ள வங்கியில் தொழில் புரியும் 4000/- வரை சம்பளம் பெறும் 33 வயதுடைய மகனுக்கு படித்த அழகிய மணப் பெண்ணை எதிர்பார்க்கிறார்கள். முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 657, C/o Uthayan. (3013)

### வான் தேவை

டீசல் டெலிக்கா அல்லது டொயட்டா டிலிவரி வான் தேவை. விலை விபரம் தொடர் இலக்கத்துடன் அறிவிக்கவும். இல. 661, C/o உதயன் யாழ்ப்பாணம். (3034)

### மணமகன் தேவை

யாழ் இந்து உயர் வேளாள குலப்பெற்றோர் தமது 30 வயது நிரம்பிய 8ல் செவ்வாய் தோஷமுள்ள B. A. பட்டதாரி ஆசிரியை மகளுக்கு மணமகன் தேடுகிறார்கள். ஆசிரியர், வங்கி, அரசாங்க உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. சீதனம் கொடுக்கப்படும். சகல விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இலக்கம் – 114, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (12245)

### தவறிவிட்டது

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீளெடுத்து வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து குட்லக் எம்போறியம் 300, K. K. S. வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (12140)

### Numerology Centre

நியூமரோலொஜி கலையின் அதிஷ்ட இரகசியங்களை அறிந்து கொண்டு நீங்களும் அதிஷ்டசாலிகள் ஆகலாம். உங்கள் சகல பிரச்சினைகளும் நீக்கி வைக்கப்படும். உங்கள் பிரச்சினைகள் என்ன? பேரத்திற்கு சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். Numerology Master, C. K. Srirajarajeaswaran Vaitheeswara Veethi, Valvettiturai. (2887)

### சோதிட மாந்திரிக நிபுணர்

உங்கள் எவ்வகையான பிரச்சினைகளையும் உன்னதமான மட்டக்களப்பு ஆருடமாந்திரீகமுறைப்படிஅரசஅங்கீகாரம்பெற்றுள்ள பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரால் வெற்றிகரமாய் தீர்வு காணப்படும். தொடர்பு கொள்ளுங்கள்: ''சக்தி சரவணா 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ் இந்துக் கல்லூரிமைதானம் முன்பாக) வியாழன் விடுமுறை. (3022)

### புத்தகங்கள்

முத்து, லயன், ராணி, இதில் வெளியீடுகளின் சித்திரக் கதைகள் (காமிக்ஸ்) மார்ச், ஏப்பிரல் அம்புலிமாமா, கண்ணதாசன் எழுதிய நூல்களும் எண்சோதிட புத்தகங்களும் பஞ்சாங்க வகைகளும் விற்பனையாகின்றன. ராஜன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (3052)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சனி, ஞாயிறு காலை 9 00 மாலை 4.00 மணிக்கு ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றது. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். எஸ். ஜெயராஜா, கல்யாணி ஆங்கில கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (2583)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி/3451)

### 90 ஆம் ஆண்டுப் பஞ்சாங்கம்

இரகுநாதையர் வாக்கிய, திருக்கணிதபஞ்சாங்கம் வியாபாரிகட்கு தொகையாக விசேட கழிவுடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீ காந் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். (சி/3487)

### றோனியோ

றோனியோ தட்டச்சு மற்றும் சகல அச்சு வேலைகளும் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொள்ள தயா அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா சந்தி) (4133)

### Marriage Centre

Master Numerology Marriage Centre திருமணம் ஆகாத ஆண், பெண் இருபாலாரும் சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். நியூமரோலஜி சோதிட முறையில் பொருத்தம் பார்த்து அதிஷ்டகரமான திருமணம் செய்து வைக்கப்படும். Numerology Master, C. K. Srirajarajeaswaran Vaitheeswaran, Veethi, Valvettiturai [2888]

## பிறந்த நாள் வாழ்த்து

(31 - 03 - 1990)



### ★ த. தெய்வேந்திரன் ★

மன்னாரைச் சேர்ந்த தங்கராசா சின்னபிள்ளை தம்பதிகளின் செல்வப் புதல்வன் த. தெய்வேந்திரன் (சித்தி) இன்று (31-03-90) தனது பத்தொன்பதாவது பிறந்த தினத்தை அவர் இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அண்ணன்மார், அக்காமார், அத்தான்மார், தம்பிமார், தங்கைமார், மருமக்கள், நண்பர்கள், ராஜன், ஜெயபால், ஜோன்சன், ஜெகதீஸ், சுரேஷ் மற்றும் உள்ளூர் உறவினர்கள் அம்பாள் அருள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

T. P. ராஜன்
பிள்ளையார் கோயிலடி
மன்னார்.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம்சந்தி — யாழ்ப்பாணம்.

**AL/90**

மீட்டல் வினா - விடை

**புவியியல் - குணராஜா**

02-04-90 (2.00 மணி)

(சி/4171)

உ
கோண்டாவில்

## நாகபூசணி அம்மன் ஆலயம்
### 2ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

நிகழும் சுக்கில வருடம் பங்குனி மீ 18 ஆம் திகதி (31-03-90) சனிக்கிழமை நடைபெறும். பகல் விசேட மேளக்கச்சேரி நடைபெற்று அபிஷேக ஆராதனை நிகழ்ந்து அம்பாள் வீதிவலம் வருவார்.

இரவு சுவாமி கயிலாய வாகனத்தில் அமர்ந்து வீதியுலாவருவார்.

இரவு அச்சுவேலி சின்னமணி கோஷ்டியின் வில்லிசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

மேளக்கச்சேரி:

அளவெட்டி பத்மநாதன் கோஷ்டி, கோண்டாவில் கானமூர்த்தி கோஷ்டி.

2 ஆம் திருவிழா உபயகாரர்.
(12246)

## வீடு தேவை

சகல வசதிகளும் அடங்கிய நல்ல சூழலில் அமைந்த வீடு யாழ் நகருக்குள் உடன் தேவை.

தொடர்பு:-

தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்:
(யாழ் பிரிவு).

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4404)

### A/L விஞ்ஞான மாணவர்களுக்கு

★ அசேதன இரசாயனம் ★
இன்று ஆரம்பம்: Sat & Sun 12.30 → 1.30 p.m
ஆசிரியர்: Mr. நாகரட்ணம் B. Sc.

★ வட்ட இயக்கம் ★
ஆரம்பம்: 03-04-90 Mon, Wed & Fri 1.30→3.00p.m

தொகையீட்டின் பிரயோகம்
ஆரம்பம்: 03 - 04 - 90
Mon, Wed & Fri — 3.00 — 4 30 P.m
ஆசிரியர்: Mr. கணேசன் B. Sc.

**3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.**

[சி-4192]

## நாவலர் சித்தன்கேணி

### A/L DAY CLASS

கலை, வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

காலை 8.30 மணிமுதல் 12.00 மணி வரை

[சி-4193]

''எனது ஆங்கில அறிவை வளர்ப்பதற்காக நான் தினசரி ஆங்கிலப் புத்தகங்களைப் படிப்பது வழக்கம். புதிய சொற்கள் வரும்போது என்னிடமுள்ள ஒரு ஆங்கில - தமிழ் அகராதியில் பார்த்துக் கொள்வேன். ஆனால், பல சொற்களுக்கு அந்த அகராதியில் தமிழ் கருத்து இருப்பதில்லை. 'வரதர் மாணவர் அகராதி' வெளிவந்திருப்பதை அறிந்ததும் அதில் ஒரு பிரதி வாங்கினேன். என்ன ஆச்சரியம்! இப்பொழுது நான் தேடும் எல்லாச் சொற்களுக்கும் அதில் தமிழ் கருத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது. இந்நூலைத் தொகுத்த ஆசிரியருக்கும், வெளியிட்ட உங்களுக்கும் எனது நன்றி'' — என்று எழுதுகிறார் பெயர் குறிப்பிடுவதை விரும்பாத ஒரு வாசகர்.

**ஆம். 18,400 ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ்க் கருத்துக்கள் கொண்ட ஒரு ஒப்பற்ற அகராதி.**

### வரதர் மாணவர் அகராதி (ஆங்கிலம்-தமிழ்)

### Varathar Students Dictionary

அறிமுக விலை ரூபா. 95/- மட்டும்:

எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும்

தொகையாகப் பெறுவதற்கு:

ஆனந்தா புத்தகசாலை,
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை,
பஸ்நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4157)

## வெளிநிலை விரிவுரைகள்
### 1990/91

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வெளி நிலைப் பட்டப் பாட நெறிகளான

- ✶ கலை மாணி B. A.
- ✶ விஞ்ஞான மாணி B. Sc. (புள்ளிவிபரவியல்)
- ★ க பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

விபரங்களுக்கு:

உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புக்கள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

● இதுவரை பதியத் தவறிய மாணவர்கள் இடநெருக்கடியை எதிர் நோக்காது உடன் பதிவு செய்து கொள்ளவும்.

[சி-4195]

## ஓராண்டு நினைவஞ்சலி



உயர்திரு
**விஸ்வலிங்கம்- இராமலிங்கம்**
அவர்கள்

மலர்வு:- 02- 06- 1921 உதிர்வு:- 11- 04- 1989

திதி: 31- 03- 1990

''ஆண்டொன்று சென்றதையா
அருமை முகம் காணாமல்
நீண்டதுயி லுற்றனையோ
நீள் புவியி லெமை மறந்து
மீண்டு மொரு பிறப்பிருந்தால்
அதிலும் அருந் தந்தையுனை
வேண்டுகிறோ மப் பிறவி
யதிற் தொடர்பு மிருந்திடவே''

பிரிவால் துயருறும்!
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

உபயகதிர்காமம்,
புலோலி தெற்கு,
புலோலி.

(2997)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி செல்லத்துரை நல்லம்மா**

மலர்வு: 01 - 11 - 1925 உதிர்வு: 23 - 03 - 1988

திதி. 31 - 03 - 1990

ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி விட்டு துயில் கொண்ட எங்கள் அன்பு அம்மாவே! அன்பின் திருவுருவாய், அறிவின் சிகரமாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், வாழ்வின் வழிகாட்டியாய், தாங்கள் வாழ்ந்து மறைந்து இரண்டு ஆண்டுகளாகியும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டுப் பிரியவில்லை. இனி வாழும் காலம் யாவும் அந்நினைவுகள் எங்களை விட்டு நீங்காது.

உங்கள் பிரிவால் வாடும்
கணவர், மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், சகோதரி.

''தர்மகிரி''
அராலி கிழக்கு

(2995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மண்ணுலகில்:

08-05-1922

விண்ணுலகில்:

01-03-1990

**உயர்திரு சிவரத்தினம் குலசேகரசிங்கம்**
[ஓய்வுபெற்ற விரிவுரையாளர், பல்தொழில்நுட்பக் கல்லூரி
கொக்குவில் - பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை]

நாட்கள்தான் மறைந்தோடினாலும்
உங்கள் நினைவுகள் நம்மை வாட்டுதே
பாசமலர் என்னும் சோலையிலே வளர்ந்தநாம்
இன்று தனிமரமாய் தவிக்கின்றோம்
கன்னமில்லா உங்கள் சொற்சிலம்பம்
எம்மை எல்லாம் சிந்திக்க வைத்தது
கல்லறையின் நினைவுகள்
காலமெல்லாம் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும்.


01-03-1990 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்க்கும் அனுதாபச் செய்தி தெரிவித்தோர்க்கும் மேலும் பல விதத்தில் உதவிகள் பல புரிந்தோர்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
**மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.**

மரியநாயகம் போல்,
இல. 14, 3-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். [12145]


## மாபெரும் விற்பனை



## மோட்டார் சைக்கிள்கள்

1000க்கு மேல் கையிருப்பில் உண்டு

**25% கழிவு**

**ஹொண்டா**

| | ரூபா |
|---|---|
| ★ C50, C70, C90 டவுண்சொக் சென்டர் சொக் சிடிஐ கஸ்டம் | 10,500க்கு மேல் |
| ★ CD50, CD90 பிறவுண் கோல்ட் பென்ட்லி | 12,500 ,, ,, |
| ★ CD 125 T பிறவுண் கோல்ட் லைன் பென்ட்லி | 22,500 ,, ,, |
| ★ CD 125 JC 06 எலோய்வீல் | 20,000 ,, ,, |
| ★ CM 125 ஸ்குயர் றவுண்ட் மீட்டர் கஸ்டம் | 22,500 ,, ,, |
| ★ XL 125 எஸ் | 22,500 ,, ,, |
| ★ MD 90 | 19,500 ,, ,, |
| ★ சாளி — ஸ்டீல் | 5,000 ,, ,, |
| — பிளாஸ்டிக் | 7,000 ,, ,, |
| — ஸ்குயர் லைட் | 8,750 ,, ,, |
| ★ MT 50 MB 50 | 10,000 ,, ,, |

**யமஹா**

| | ரூபா |
|---|---|
| ★ V 50 T, V 90 T போஸ்ட் ஆபீஸ்மொடல் | 11,000க்கு மேல் |
| ★ YB 50, YB 90 பொயின்ட் CDI | 10,000 ,, ,, |
| ★ YB 125 CDI | 11,000 ,, ,, |
| ★ V 50, V 70 பொயின்ட் | 6950 ,, ,, |
| ★ V 50, V 80 CDI | 7250 ,, ,, |
| ★ DT 50 | 15,000 ,, ,, |
| ★ MR 50 | 10,000 ,, ,, |
| ★ RX 50 | 10,000 ,, ,, |
| ★ சப்பி | 6,000 ,, ,, |

சகல வகையான ஸ்கூட்டர்கள்
நல்ல நிலையில் ரூ 5000க்கு மேல்

மொத்த விற்பனைக் கழிவு வழங்கப்படும். தேவையான அளவுகளுக்கு ஏற்ப கொள்கலன் போக்குவரத்து சேவையும் வழங்கப்படும். சிறு ஆரம்ப கொடுப்பனவை செய்து உங்கள் தேவைகளை பதிவு செய்யுங்கள்.

## பினான்ஸ் அன்ட் லாண்ட் சேல்ஸ் லிமிட்டெட்

**15, செல்லமுத்து அவெனியூ, கொள்ளுப்பிட்டி, கொழும்பு - 03.**

(காலி வீதி, கடற்கரைப் பக்கமாக, ரேணுகா ஹோட்டலுக்கு பின்புறம்)

தொலைபேசி: — 573660, 574525
(F)பக்ஸ் — 574782


# அமைச்சரவை

| | | |
|---|---|---|
| 1. | ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா | — பௌத்த சாசன, கொள்கை திட்டமிடல், அமுலாக்கல், பாதுகாப்பு. |
| 2. | டி. பி. விஜேதுங்க | — பிரதமர், நீதி. |
| 3. | விஜேபால மென்டிஸ் | — போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைப்பு. |
| 4. | ஏ. ஸி. எஸ். ஹமீத் | — நீதி |
| 5. | எம். வின்சென்ட் பெரேரா | — சுற்றாடல், நாடாளுமன்ற விவகாரம். |
| 6. | லலித் அத்துலத்முதலி | — கல்வி, உயர்கல்வி. |
| 7. | பெஸ்டஸ் பெரேரா | — பொதுநிர்வாகம், மாகாணசபைகள், உள்நாட்டலுவல்கள், |
| 8. | எஸ். தொண்டமான் | — சுற்றுலா, கிராமிய தொழில் அபிவிருத்தி. |
| 9. | ரணில் விக்கிரமசிங்க | — கைத்தொழில், விஞ்ஞானம், தொழில் நுட்பம். |
| 10. | பி. தயாரத்ன | — காணி, நீர்ப்பாசனம், மகாவலி அபிவிருத்தி. |
| 11. | ஜோசப் மைக்கல் பெரேரா | — கடற்றொழில், நீரக வளமுலம். |
| 12. | டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார | — பண்பாட்டு அலுவல்கள், தகவல். |
| 13. | அலிக் அலுவிகார | — அஞ்சல், தொலைத் தொடர்பு. |
| 14. | நந்தா மத்தியூ | — இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை, |
| 15. | ஏ. ஆர். மன்சூர் | — வியாபாரம், வர்த்தகம். |
| 16. | யூ. பி. விஜேக்கோன் | — கைத்தறி, புடவைக்கைத்தொழில். |
| 17. | ரேணுகா ஹேரத் | — சுகாதாரம், மகளிர் விவகாரம். |
| 18. | ஏ. எம். எச். அதிகாரி | — மீளளிப்பு, புனர்வாழ்வளிப்பு, சமூக நலன் ஓம்புகை |
| 19. | பி. சிறிசேன கூரே | — வீடமைப்பு, நிர்மாணத்துறை. |
| 20. | ரஞ்சன் விஜேரத்ன | — பெருந்தோட்ட தொழிற்துறை. |
| 21. | கே. டி. எம். பி. பண்டார | — மின்சக்தி, எரிபொருள். |
| 22. | ஹரோல்ட் ஹேரத் | — வெளிநாட்டலுவல்கள். |
| 23. | வீரசிங்க மல்லிமாராச்சி | — உணவு. கூட்டுறவுத்துறை. |
| 24. | ரூபசேன கருணாதிலக | — துறைமுகங்கள், கப்பல்துறை. |
| 25. | ஆர். எம். தர்மதாசபண்டா | — கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சி. |
| 26. | டி. எம். பிரேமச்சந்திர | — தொழில், வாழ்க்கைத் தொழில் பயிற்சி. |

# திட்ட அமைச்சர்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஏ. சி. எஸ். ஹமீது | — உயர்கல்வி |
| 2. | சுனேத்திரா ரணசிங்கா | — கல்விச் சேவைகள் |
| 3. | சரத்சந்திர ராஜகருண | — எரிபொருள் |
| 4. | போல் பெரேரா | — விஞ்ஞான தொழில்நுட்பம் |
| 5. | எம். எல். எம். அபுசாலி | — பெருந்தோட்டத் தொழில்துறை |
| 6. | எச். பி. வன்னிநாயக்கா | — சுதேசிய வைத்தியத்துறை |
| 7 | இந்திரதாஸ ஹெட்டியாராச்சி | — தெங்குக் கைத்தொழில், பயிர் பன்முகப் படுத்தல் |
| 8. | ஆரியரத்தின ஜெயதிலக | — கனிப்பொருள் கைத்தொழில் |
| 9 | தயானந்த விக்கிரமசிங்க | — மனிதவளம் திரட்டல் |
| 10 | காமினி அத்துக்கோறளை | — மகாவலி அபிவிருத்தி |
| 11. | டிரோன் பெர்னாண்டோ | — சட்டம், சிறைச்சாலை சீர்திருத்தம் |
| 12. | ஹரேந்திரா கொரியா | — தொலைத் தொடர்பு, அபிவிருத்தி |
| 13. | பி. பி. கவிரத்ன | — சமூக, கலாசார ஒழுங்கு இணைப்பு |
| 14 | சி. கங்காந்த | — கைத்தொழில் தொழில்துறை |
| 15. | மகேந்திர விஜேரத்ன | — பண்ணை, கால்நடை அபிவிருத்தி, பால் உற்பத்தி |
| 16. | சேனநாயகா சமரநாயகா | — ஏற்றுமதி அபிவிருத்தி |
| 17. | திருமதி அமரா பியசீலி ரத்னாயகா | — உள்நாட்டலுவல்கள் |
| 18. | ஜே. பி. விஜேரத்ன பண்டா | — கமத்தொழில் உற்பத்தி, சந்தைப்படுத்தல் |
| 19. | ஜோர்ஜ் அமரதுங்கா | — மாகாணசபைகள் |
| 20. | ஆர். பி. விஜேசிரி | — மலைநாட்டு கமக்காரர் புனர்வாழ்வு |
| 21. | அசோகா வடிவமங்காவ | — காணி பராதீனப்படுத்தல் |
| 22. | சந்திரா ரணதுங்க | — நிர்மாணத்துறை, கட்டத்துறை |
| 23. | கலாநிதி விமல் விக்கிரமசிங்க | — சுற்றாடல் |

# துணை அமைச்சர்கள்

| | | |
|---|---|---|
| 1. | ரஞ்சன் விஜேரத்ன | — பாதுகாப்பு |
| 2. | ஹரோல்ட் ஹேரத் | — நிதி |
| 3. | ஜோன் அமரதுங்க | — வெளிவிவகாரம் |
| 4. | கலாநிதி விமல் விக்கிரமசிங்க | — கொள்கைத் திட்டமிடல், அமுலாக்கம் |
| 5. | எச். ஜி. பி நெல்சன் | — கிராமியத் தொழில்துறை அபிவிருத்தி |
| 6. | எம். ஈ. எச். மஹ்ரூப் | — துறைமுகங்கள், கப்பல்துறை |
| 7. | ஜாபிர் ஏ. காதர் | — சுகாதாரம் |
| 8. | எச். எம். ஏ. லொக்குபண்டா | — விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி |
| 9. | ரோஹான் அபயகுணசேகரா | — வர்த்தகம், வியாபாரம் |
| 10. | மெர்வின் சி. கூரே | — மின்சக்தி, எரிபொருள் துறை |
| 11. | பி. எச். எல். கலபதி | — கடற்றொழில், நீரியல் வளங்கள் |
| 12. | காமினி லொக்குகே | — உல்லாசப் பிரயாணம் |
| 13. | கே. ஆனந்த குலரத்ன | — நெடுஞ்சாலைகள் |
| 14. | ஏ. பி. ஜே. செனவிரத்ன | — தொழில் பயிற்சி |
| 15. | திருமதி சந்திரா கருணாரத்ன | — புனர்நிர்மாணம், புனர்வாழ்வு, சமூக சேமநலம் |
| 16. | லால் தர்மசிரி கமகே | — பௌத்தசாசனம் |
| 17. | அப்துல் பாக்கிர் மாக்கார் இம்தியாஸ் | — வீடமைப்பு |
| 18. | ரவீந்திர சமரவீர | — உணவு, கூட்டுறவுத்துறை |
| 19. | டி. எம். ஆரியதாஸா | — விளையாட்டுத்துறை |
| 20. | பி. பி. தேவராஜ் | — இந்துசமய, கலாசார அலுவல்கள் |
| 21. | ஏ. ஜே. ரணசிங்க | — தகவல்துறை |
| 22. | எம். எஸ். செல்லச்சாமி | — கைத்தொழில் |
| 23 | யு எல். எம். பாரூக் | — போக்குவரத்து |
| 24. | சரத் கலகதெர | — நீர்ப்பாசனம் |
| 25. | திருமதி ஏ. சந்திரா கருணாரத்ன | — மகளிர் விவகாரம் |
| 26. | திருமதி ஆர். எம். புலேந்திரன் | — கல்வி |
| 27. | வி. கிருஷ்ண குட்டியாராச்சி | — நாடாளுமன்ற அலுவல்கள் |
| 28. | ஏ. எச். எம். அஸ்வர் | — முஸ்லிம் மத கலாசார அலுவல்கள் |
| 29. | எம். டி. ஏ. குணதிலக | — புடவைக் கைத்தொழில் |

# அமைச்சுக்களின் செயலாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | டி. எம். பி. டி. தசநாயக | — பௌத்தசாசன |
| 2. | ஆர். பாஸ்கரலிங்கம் | — கொள்கைத் திட்டமிடல், அமுலாக்கல் நிதி, |
| 3. | ஜெனரல் எஸ். சிறில் ரணதுங்க | — பாதுகாப்பு |
| 4. | டி. பி. திலகரத்ன | — வெளிவிவகாரம் |
| 5. | ஏ. ஏ. விஜயதுங்க | — காணி நீர்ப்பாசன மகாவலி |
| 6. | றிச்சார்ட் நிலவீர | — விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி |
| 7. | பி. பி. ஜி. என். லீலாரத்ன | — உணவுக் கூட்டுறவுத்துறை |
| 8. | என். ஜி. ரி. கே. வெரகொட | — கடற்றொழில் உயிரியல் வளங்கள் |
| 9. | கலாநிதி பி. ஏ. ரி. குணசிங்க | — பொது நிர்வாக மாகண சபைகள் உள்நாட்டுஅலுவல்கள் |
| 10. | ஹர்ஷா விக்ரமசிங்க | — வர்த்தகம் |
| 11. | பி. கே. தசநாயக | — துறைமுக கப்பற்றொழில் |
| 12 | ஆர். எஸ். ஜயரத்னா | — பெருந்தோட்டத் தொழிற்றுறை |
| 13 | ஏ. எஸ். ஜயவர்த்தன | — கைத்தொழில், விஞ்ஞான தொழில் நுட்பம் |
| 14. | அஹி. மொகமத் | — மின்சக்தி எரிபொருள்துறை |
| 15. | ஏ. ஆர். எம். ஜயவர்தன | — போக்குவரத்து நெடுஞ்சாலைகள் |
| 16. | எம். பி. டி. பீரிஸ் | — கல்வி, உயர் கல்வி |
| 17. | கேணல் வீ. எஸ். குடலிகம | — கலாசார அலுவல்கள், தகவல்கள் |
| 18. | பீ. என். எம். பர்ணாந்து | — சுற்றாடல் நாடாளுமன்ற அலுவல்கள் |
| 19. | டாக்டர் ஜோர்ஜ் பர்ணாந்து | — சுகாதார மகளிர் அலுவல்கள் |
| 20. | ஏ. ஏ. ஜஸ்டின்டயஸ் | — தொழில் வாழ்க்கை, தொழில் பயிற்சி |
| 21. | எஸ். வை. எம். பி. டி. ஹேரத் | — நீதி |
| 22. | டபிள்யூ. டி. அகிலப்பெருமா | — வீடமைப்பு நிர்மாணத்துறை |
| 23. | லக்ஸ்மன் டிமெல் | — சுற்றுலா கிராமியத் தொழில் அபிவிருத்தி |
| 24. | ஏ. பி. அபுதெனிய | — கைத்தறி புடவைத் தொழிற்துறை |
| 25. | அசோகா [illegible] | — தபால் தொலைத் தொடர்புகள் |
| 26. | சரித்த ரத்வத்த | — [illegible] புனர்வாழ்வு சமூகநல [illegible] |
| 27. | கே. ஏ குணசேகர | — இளைஞர் விவகார விளையாட்டுத்துறை |

வடக்கு, கிழக்கின்

## பாடசாலைகள் புனரமைக்க ரூ. 5½ கோடி ஒதுக்கீடு!

திருகோணமலை, மார்ச் 31 வடக்கு, கிழக்கு மாகாண பாடசாலைகளின் கட்டட புனரமைப்பு, தளபாடங்கள் ஆகியவற்றிற்கு 1990 ஆம் ஆண்டின் முதல் காலாண்டு காலப்பகுதிக்கு மத்திய அரசு 5 கோடி 50 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளதாக மாகாண கல்வி அமைச்சின் புதிய செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராசா தெரிவித்தார்.

இந்த நிதி ஒதுக்கீடு மாகாணத்தில் உள்ள 8 மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

அதன் விவரம் வருமாறு:-
யாழ்ப்பாணம் - 1 கோடி 75 லட்சம் ரூபா.
மட்டக்களப்பு - 1 கோடி 43 லட்சம் ரூபா.
திருகோணமலை - 85 லட்சம் ரூபா.
அம்பாறை - 40 லட்சம் ரூபா.
வவுனியா - 30 லட்சம் ரூபா.
கிளிநொச்சி - 32 லட்சம் ரூபா.
மன்னார் - 25 லட்சம் ரூபா.
முல்லைத்தீவு - 20 லட்சம் ரூபா.

இந்த நிதியுதவி ஆசிய அபிவிருத்தி வங்கி, நொராட், கனேடிய அரசு ஆகியவை நன்கொடையாக வழங்கியதாகும். (உ-150)

## கல்கத்---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தளபதிப் பதவி வகித்த திரு. கல்கத் அடைக்கலம் தர திரு. வரதராஜப்பெருமாள், கல்கத்தாவில் இருப்பதாக இப்போது செய்திகள் வெளிவந்துள்ளன.

தளபதி கல்கத்துக்கு வரதராஜப்பெருமாளிடம் மிகுந்த அனுதாபம் உண்டு. அதன் நிமித்தம் அவர் அடைக்கலம் வழங்க, திரு. வரதராஜப் பெருமாள் கல்கத்தாவிலேயே இருப்பதாக சில போராளிகள் குழுவினர் உறுதியாக நம்புவதாக ''ஜூனியர் போஸ்ட்'' தனது கடந்த வார இதழில் தெரிவித்திருக்கிறது.

''வரதன்'' இந்திய விமானப்படை விமானத்தில்தான் தப்பியிருக்க முடியும். அந்த விமானம் மொரிஷியஸ் செல்ல வாய்ப்பில்லை'' என்று விவரம் தெரிந்தவர்கள் சொல்கிறார்கள்—எனவும் ''ஜூனியர் போஸ்ட்'' செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-9)

## புனரமைப்புக் கடன்....

சில நிபந்தனைகளே தற்போது தளர்த்தப்பட்டிருக்கிறது.

அதுகுறித்து அவர் தெரிவித்த விவரம் வருமாறு:-

★ கடன்பெற நிலையான வைப்புக் கணக்கையும் பிணையாகக் கொடுக்கலாம். நிவாரணக் கடன் பெறுபவரின் பெயரில் அந்தக்கணக்கு இல்லையானால் வேறு ஒருவரின் நிலையான வைப்புக் கணக்கினையும் பிணையாகக் கொடுக்கலாம். அந்தக் கணக்கை வைத்திருப்பவர் உத்தரவாதம் வழங்கும் கடிதம் ஒன்றைக் கொடுத்தால் போதுமானது.

★ இதேபோன்று சேமிப்புச் சான்றிதழ்களைப் பிணையாக வைத்தும் கடன் பெறலாம்.

★ இரு பிணையாளர்களின் பிணையுடன் ஆறுசதவீதவட்டிக்கு 5 வருடத்தில் மீளச் செலுத்தக்கூடியதாக இருபத்திஐயாயிரம் ரூபா கடன் வழங்கப்படும்.

★ சேதமடைந்த வீடுகள் மற்றும் தொழில் நிறுவனங்களைப் புனரமைக்கக் கடன் பெறவேண்டுமானால், அந்த வீடு அல்லது நிறுவனம் அமைந்துள்ள காணியின் உறுதியையே ஈடுவைக்கவேண்டும் என்று முன்னர் நிபந்தனை இருந்தது.

ஆனால் தற்சமயம் கடன் எடுப்பவரின் பெயரில் உள்ள வேறு ஒரு ஆதனத்தின் உறுதியை ஈடுவைத்தும் கடன் பெறலாம் என இவ்விதி தளர்த்தப்பட்டுள்ளது.

★ கடன்பெறும் ஆதனம் காணிப் பதிவகத்தில் பதியப்படாவிட்டால், அந்த ஆதனத்தின் உறுதியைச் சமர்ப்பிக்கலாம். அந்த உறுதிகளை வங்கி காணிப் பதிவகத்தில் சமர்ப்பித்து 'ஈட்டுப்பிணை' பெற்று கடன் வழங்கப்படும். அந்தக் கடன்தொகை பகுதி பகுதியாகப் புனரமைப்பு வேலை முன்னேற்றத்தைக் கவனத்தில்கொண்டு வழங்கப்படும்.

★ முன்னர் கடன் எடுத்து அதனைக் கட்டத் தவறியவர்களுக்கு இந்தக் கடன் வழங்கப்படமாட்டாது.

★ வைப்புக் கணக்கு சேமிப்புச் சான்றிதழ் ஆகியவற்றுக்கு எதிராக வழங்கப்படும் கடன்கள் நான்கு நாட்களுக்குள் வழங்கப்படும். உறுதி ஈடுவைத்து வழங்கப்படும் கடன் ஒருமாதத்துக்குள் கிடைக்கும்.

—இப்படி அவர் கூறினார்.

## தமிழக---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பதி விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டார் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய மீனவர்கள் கடந்த இரண்டு மாத காலமாக இலங்கை கடற்பிரதேசத்தில் நுழைந்து மீன் பிடித்துவருவதாகவும்--

இலங்கை மீனவரின் வலைகளை இவர்கள் சேதமாக்கி வருவதாகவும்—

இலங்கைமீனவர்கள் தமக்கு முறையிட்டதாலேயே அவர்கள் சார்பாக தாம் இந்த விடயத்தில் தலையிட்டதாகவும் விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது, என்றும் அச்செய்தியில் கூறப்பட்டது. (உ-9-160)

## யாழ். இரவு..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கான விடுதி வசதிகள் கிடைத்துள்ளதையடுத்தே இரவுநேர தபால் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தபால் பகுதி வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

நீண்ட கால இடைவெளியின் பின் மீண்டும் ஆரம்பமாக விருக்கும் இந்தச்சேவையினால் கடிதங்களை அடுத்த நாளே பெறக்கூடியதாக இருக்கும். (ஒ-5-164)

## வடக்கு, கிழக்கிற்கு---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

அகதிகள் ஸ்தானிகராலயம் மூலமே எமது உதவிகள் கூடுதலாக வழங்கப்பட்டன. அவ்வாறு சுமார் 250 லட்சம் ரூபாவை இதுவரை வழங்கியுள்ளோம். அதன் மூலம் சேதமடைந்த வீடுகள் கட்டப்பட்டுள்ளன. கல்வித் திணைக்கள முறைசாராப் பிரிவு மூலம் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்த உதவிகளுடன் தொலைத்தொடர்புச் சேவையைச் சீர்செய்ய உதவ இருக்கிறோம். அதற்கான உதவியை வழங்குவதன் மூலம் வடக்கு-கிழக்கு மாகாணப் பிரதேசங்களுக்கு வெளிமாவட்டங்களில் இருந்து நேரடித் தொலைபேசி வசதி கிடைக்கும்.

இதற்குத் தேவையான நிதிஉதவி மற்றும் உபகரண, தளபாட உதவிகளை சுவீடன் வழங்கும். தொழில்நுட்ப உதவிகளை மட்டும் டென்மார்க் செய்து கொடுக்கும்.

தொலைபேசித் திட்டத்திற்காக மொத்தம் பல கோடி ரூபா செலவிடப்படும். ஏப்ரல் மாதத்தில் டென்மார்க் அதிகாரிகள் இங்கு வருவார்கள். இந்த திட்டம் அனேகமாக அடுத்த வருட (1991) நடுப்பகுதிக்குள் பூர்த்தியாகிவிடும். —என்று செல்வி ஆமர் தெரிவித்தார். (அ-3)

## அமைச்சர்---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

திருமதி ராஜமனோகரி புலேந்திரன், திரு. பி. பி. தேவராஜ், திரு. எம். எஸ். செல்லச்சாமி ஆகிய மூவருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாப்கள் எம். ஈ. எச். மஹ்ரூப், ஜாபிர். ஏ. காதர், அப்துல் பாக்கீர் மார்க்கார், யு. எல. எம். பாரூக், ஏ. எச். எம். அஸ்வர் ஆகியோர் துணைஅமைச்சர்கள் பட்டியலில் இடம்பெறும் முஸ்லிம்களாவர்.

ஜனாப் ஏ. எல். எம். அபுசாலி திட்ட அமைச்சர் பதவியைப் பெற்றிருக்கிறார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பம் வரும் போது பெண்கள் உறுதியுடன் போரிட வேண்டும்

## மகளிர் தின விழாவில் உரை

காங்கேசன் துறை, மார்ச்31

பெண்கள் இயற்கையாகவே மென்மையானவர்கள். தான் துன்பம் வரும்போதும் அநீதி இழைக்கப்படும் போதும் அவர்கள் உறுதியானவர்களாக மாறிஅவற்றுக்குஎதிராகப் போராட வேண்டும். இதையே பல்வேறு பாத்திரங்கள் மூலம் இலக்கியங்கள் எமக்கு எடுத்துக் கூறுகின்றன.

இவ்வாறு கூறுகிறார் கம்பன் கழகத்தலைவர். திரு. இ. ஜெயராஜ்.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் குழுவின் ஆதரவில் மகளிர் தின விழா மார்ச் 11 ஆம் திகதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றசமயம் அதில் கலந்து சிறப்புரை யாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

மகளிர் குழுத்தலைவி திருமதி சகிதேவி கந்தையா தலைமையில் நடந்த இவ் விழாவில் பாரளுமன்ற உறுப்பினரும், சங்கத்தலைவருமான திரு. எஸ். சிவமகாராஜா பேசுகையில்: இன்று பல துறைகளிலும் மகளிர் முன்னணியில் திகழ்கிறார்கள். எமது தமிழ் இனத்தின் சகல நடவடிக்கைகளிலும் அவர்கள் பங்கு சிறப்பான இடத்தை வகிக்கிறது. எமது மக்களை வாழ்விக்கும் பணியில் மகளிர் முனைப்புடன் ஈடுபடவேண்டும். என்றார்.

கலை நிகழ்ச்சிகளும் நடந்தன. (க-68)

### விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 31

தொண்டைமனாறு வல்வை வீதியில் அமைந்துள்ள கலைமகள் சனசமூக நிலையத்தின் 12 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விளையாட்டு விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏப்ரல் 12 ஆம் திகதி தொடங்கி 15 ஆம் திகதிவரை நடைபெறவிருக்கும் மேற்படி விளையாட்டு விழாப் போட்டிகளில் பங்கு கொள்ளும் கழகங்கள் 15 - 4 - 90 க்கு முன்னர் நிலைய செயலாளரிடம் விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளன. [க - 5]

# இலங்கை சுதந்திர தனிநாடு இந்தியாவுக்குச் சொந்தமானதல்ல!

## பாரத அமைச்சர் இப்படிச் சொல்கிறார்-

சென்னை மார்ச் 31

இலங்கை தனிச் சுதந்திர நாடு. அது இந்தியாவுக்குச் சொந்தமானது அல்ல.

இந்தியப் பாதுகாப்புத் துணை அமைச்சர் டாக்டர் ராஜா ராமண்ணா முன் கண்டவாறு தெரிவித்தார்.

அமைதிப்படையின் கடைசி அணியை வரவேற்பதற்காக கடந்த ஞாயிறு டாக்டர் ராமண்ணா சென்னைக்கு விஜயம் செய்தார். அமைதிப் படை வரவேற்பில் கலந்து கொண்டு விட்டு செய்தியாளர் மாநாடு ஒன்றில் அமைச்சர் கலந்து கொண்டார்.

அவர் அப்போது மேலும் சொன்னதாவது :-

இலங்கை விஷயங்களில் இந்தியா தலையிடக் கூடாது. இன்னொரு நாட்டை இந்தியா நிர்வகிக்க முடியாது.

தங்கள் சொந்த நாட்டை தாங்களே நிர்வகிக்க வேண்டிய காலம் வந்து விட்டது. இப்படி டாக்டர் ராஜா ராமண்ணா சொன்னார்.

''வொய்ஸ் ஒப் அமெரிக்கா,'' மேற்கு ஜேர்மனின் ''டெச்சுவெலி'' வானொலி ஆகியன தொடர்ந்து இலங்கையில் இயங்குகின்றனவே. அப்படியானால் இந்திய-இலங்கை ஒப்பந்தத்துடன் ஜெயவர்த்தனாவும் ராஜீவ் காந்தியும் பரிமாறிக் கொண்ட கடிதங்கள் 'இறந்து' போய் விட்டனவா? -

இப்படிச் செய்தியாளர்கள் கேட்டதற்கு -

துணை அமைச்சர் ராமண்ணா, ''இக்கேள்விகளை நீங்கள் இலங்கை அரசிடம் கேளுங்கள்'' என்று சொன்னார்.

''இவ்வாறான ஒலிபரப்புக்களை நாம் நிறுத்த முடியாது. எமது பாதுகாப்புக்குறுக்கே இவை வந்தால் நாம் அவர்களுக்கு இதைச் சுட்டிக் காட்டுவோம் என்றும் அவர் சொன்னார்.

(ஒ-எ)

### விளையாட்டு விழா

யாழ்ப்பாணம் மார்ச் 31

அரியாலை சனசமூக நிலைய பாலர் பாடசாலை மாணவரின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெறவுள்ளது. திரு. பொ. சுந்தரலிங்கமும் மனைவியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (க)

# விளையாட்டுப் போட்டியின் அமைப்பு குழுவுக்குபாராட்டு

வல்வெட்டித்துறை மார்ச் 31

''விளையாட்டுப் போட்டியை ஒழுங்கு செய்த அமைப்புக் குழுவினர்சிறப்பாகசெயற்பட்டுள்ளனர். ஒரே நாளில் 80 க்கு பேற்பட்ட நிகழ்ச்சிகளை அவர்கள் திறம்பட நடத்தியுள்ளனர். இது பாராட்டுக்குரியது.

வடமராட்சிக் கல்விக் கோட்டப்பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிக்குத் தலைமை வகித்த கல்வி அதிகாரி திரு. க. செல்லத்துரை மேற்கண்டவாறு கூறினார்.

வடமராட்சிக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்தப் போட்டியில் யாழ். மாவட்ட உடற்பயிற்சிக் கல்வி அதிகாரிகள் திரு. எஸ். நாகமணி, திரு. அருணகிரிராஜா ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

திரு. செ. புஸ்பதாஸ் நன்றியுரை கூறினார். (க)

# நாவலர் மகா வித்தியாலய இல்ல விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம் மார்ச் 31

''இடவசதி குறைவாகவுள்ள இப்பாடசாலையில், பொருத்தமான நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்து திறம்பட நடாத்திய விளையாட்டுப்பொறுப்பாசிரியர்கள் செல்வி விநாசித்தம்பி, திரு. துரைராஜா ஆகியோரைப் பெரிதாய் பாராட்டுகிறேன்''

வண்ணை நாவலர் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கொத்தணி அதிபர் திரு. சிவசரவணபவன் மேற் கண்டவாறு கூறினார். போட்டி அதிபர் திரு. ப. சிவஞானசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

போட்டியில் வள்ளுவர் இல்லம் முதலாவது இடத்தையும் கம்பர் இல்லம் இரண்டாவது இடத்தையும் இளங்கோ இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றன. (க)

# தமிழரின் தொன்மையான கலைகளை காக்க வேண்டும்

## யாழ். ஆயர் கூறுகிறார்

குருநகர் மார்ச். 31

''சங்கீதம், நடனம், நாடகம் நாட்டுக்கூத்து ஆகிய தமிழின் தொன்மை வாய்ந்த கலைகளை நாம் பேணிக் காக்க வேண்டும். குறிப்பாக சிறார்களை இக்கலைகளில் ஈடுபடுத்தி பயிற்றுவித்து வருவதன் மூலம் தமிழில் பாரம்பரிய கதைகளை அழிந்து விடாது வளர்த்தெடுக்க முடியும்''

யாழ்- திருமறைக் கலாமன்றத்தின் மூன்று நாள் கலை விழாவில் முதல் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் யாழ்-ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை மேற்கண்டவாறு கூறினார்

தொடர்ந்து அவர் பேசுகையில் ''திருமறைக் கலாமன்றம் கவின் கலைகளை வளர்த்து வந்திருக்கிறது. கத்தோலிக்க செய்திகளைப் பரப்புவதற்கு சங்கீதம், நாடகம், நாட்டுக்கூத்துப் போன்ற கலை வடிவங்களை மறைமாவட்டம் தோறும் பயன்படுத்தி வந்துள்ளதால் கத்தோலிக்க சமய ரீதியாகவும் மேற்சென்ன கலைகள் தமிழில் வளர்க்கப்பட்டுவந்துள்ளதென்பதற்கு ஆதாரங்கள் உண்டு இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பேராசிரியர், வண-நீ. மரிய சேவியர் சிறப்புரையில்: ''அமெரிக்கா, ஐரோப்பா போன்ற உலக நாடுகளுக்கு தமிழர்களின் நிலைமையை எட்ட வைத்த ஒரே ஒருகுரல் எமது ஆண்டகையினதுதான் தமிழர்கள் ஈழத்தில் நடந்த போராட்ட காலங்களில் பாதிக்கப்பட்ட நிலைமையை அவர் அகில உலகத்திற்கும் எட்ட வைத்தார்.

இப்படிக்கூறினார்.

திரு. வி. ஜே. கொன்ஸன்ரைன் வரவேற்புரை நிகழ்த்த அ. பிரான்சிஸ் ஜெனம்நாடத அரங்கக் களப் பயிற்சி அறிக்கை வாசித்தார்.

திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் சிறபபுரை ஆற்றினார் திரு. ஜி. பி. பேர்மினஸ் நன்றி தெரிவித்தார். (இ-51)

### அரிசி விலை குறையவில்லை

உரும்பராய், மார்ச் 31

நெல்லின் விலை குறைந்த போதும்அரிசியின் விலை குறையாதது ஏன் என்று புரியாது மக்கள் விழிக்கிறார்கள் இப்போது அரிசி ஒரு கிலோ 14 ரூபா முதல் 16 ரூபா வரை விற்பனையாகின்றது. ஆனால் அரிசி ஆலை உரிமையாளர்கள் ஒரு மூடை நெல்லை 550 ரூபா 600 ரூபாவுக்கு விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்கின்றனர். (க)

### உற்சவம்

நெடுந்தீவு, மார்ச் 31

பிரசித்தி பெற்ற நெடுந்தீவு மேற்குநெலிழுனிஸ்ரீசித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர் வரும் 5 திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடை பெறும். புது வருடத் தினத்தன்று தோர்த் திருவிழாவும் மறு நாள் பூங்காவன உற்சவமும் நடைபெறும். (க-111)

### கடன் வசதி

காங்கேசன்துறை,மார்ச் 31

வலி. வடக்கில் கால் நடை வளர்ப்பைத் தொழிலாகக் கொண்டுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கடன் வசதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கால் நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களை ஊக்குவிக்கும் முகமாக இக் கடன் வசதி செய்து கொடுக்கப்பட உள்ளதாக தெல்லிப்பழை கால் நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (க-68)

# பிறந்தநாள் வாழ்த்து

## திரு. கந்தையா இரத்தினசபாபதி

கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்ட திரு. கந்தையா இரத்தினசபாபதி அவர்கள் தனது 60வது பிறந்த நாளை 31-03-90இல் வெகு விமரிசையாக கொழும்பில் கொம்பனித் தெருவில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அன்பு மனைவி கோண்டாவிலில் வசிக்கும் மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், சூட்டி, பிரான்சில் வசிக்கும் மகன், மருமகள், ஜெர்மனியில் வசிக்கும் மகன், மருமகள், சாயி கொழும்பில் வசிக்கும் மகள், மருமகன், பேத்தி கனடாவில் வசிக்கும் மகன்ஆகியோர்

மீண்டும் பல்லாண்டு வ ழ்க வென
அன்பும் பாசமும் கொண்டு
அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

(12128)

# தமிழ் மக்களின் பாதிப்பை உலகம் உணரச் செய்தோம்

## யாழ் செஞ்சிலுவைச்சங்கத் தலைவர் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 31

''சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் தாய்ச்சங்கத்தின் உதவியுடன் எமது மக்களின் பாதிப்புக்களை உலகிலுள்ள ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் உணரச் செய்தமை நாம் செய்த முக்கிய பணியாகும்.''

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரிவின் வருடாந்தக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய போது யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் டாக்டர் இ. தெய்வேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ''எமது சங்கத்தின் கடந்த வருட சேவைகளைப் பார்க்குமிடத்து நாம் பெருமைப் படக் கூடிய வகையில் பல செயற்பாடுகள் அமைந்திருந்தன. பளை, வீமன்காமத்தில் 82 வீடுகள் அமைந்தமை, சுயதொழில் வாய்ப்பு திட்டங்களை உருவாக்கி பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு அவற்றின் சுயமுயற்சியால் முன்னேற உதவியமை, தடுப்புக்காவலில் இருந்த சகல தமிழ் மக்களின் குடும்பங்களுக்கும் உதவியமை நாம் செய்த பணிகளில் சிலவாகும்.

இந்த வருடம் தமிழ்மக்களின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்யும் ஆண்டாக அமையும் சாத்தியக் கூறுகள் பல தென்படுகின்றன. இதில் செஞ்சிலுவைச் சங்கத்தின் பங்கு மிக முக்கியமானதாகும். ஆகையால் நாம் எல்லோரும் பொறுப்புணர்ச்சியுடன் கலந்துகொள்ள வேண்டும்.''

-இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

( க - 7 )

# தையலை ஒரு தொழிலாக பெண்கள் கொள்ள வேண்டும்

## வவுனியா கோட்டக்கல்வி அதிகாரி உரை

வவுனியா, மார்ச் 31

''கடந்த 72 ஆண்டுகளாக வெற்றிகரமாகச் செயற்பட்டு வரும் ஆடை தயாரித்தல் மற்றும் தையல் பயிற்சி நெறியின் (Dress Making and Needle Work) பயிற்சி பெறுகின்ற இளம் பெண்கள் இதனை ஒருதொழில் முயற்சியாக மேற்கொள்ளவேண்டும்'' என்று வவுனியா சைவப்பிரகாச வித்தியா சாலையில் நடைப்பெற்ற, பயிற்சி பெற்ற பெண்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட கோட்டக்கல்வி அதிகாரி திரு. வி. கே. நாகராஜா தெரிவித்தார்.

'' பயிற்சியுடன் நின்று விடாமல் சிறு குழுக்களாகக் கூட்டு முயற்சியில் ஈடுபட வேண்டும் இத்தகைய அமைய தொழில் முயற்சிக்குத் தேவையான சகல உதவிகளையும் கல்வித் திணைக்களம் செய்யத் தயாராக இருப்பதுடன் வங்கிகளும் கடன் வழங்கி ஊக்கிவிக்க திட்டங்களை வகுத்துள்ளன'' என்றார்.

சைவப்பிரகாச வித்தியா சாலை அதிபர் திரு. ரீ. தர்மதேவன் நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்தார்.

தைக்கப்பட்ட ஆடைகள் மற்றும் அலங்காரக் கைப்பணிப் பொருட்களின் கண்காட்சியும் நடைபெற்றது.

(க-164)

# நகரில் அன்னை நினைவாக சுழற்சி உண்ணாவிரதம்!

அன்னை பூபதி நினைவாக யாழ்ப்பாணத்தில் சுழற்சி முறையில் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை இந்த சுழற்சி முறை உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும்.

நல்லூரில் திலீபன் உண்ணாவிரதமிருந்த அதே இடத்திலேயே இந்த நிகழ்ச்சியும் நடைபெறும்.


அன்னை பூபதி உயிர்த் தியாகம் செய்தி தினமான ஏப்ரல் 19 ஆம் திகதி நகரில் ஊர்வலம் ஒன்றும், பொதுக் கூட்டம் ஒன்றும் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. (உ-9)

### பயிற்சி நிலையம்

மட்டுவில் தெற்கில் இளம் பெண்களுக்கான தையல் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சோமாஸ்கந்த சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறும்இப் பயிற்சி நிலையத்தில் சுமார் 40 பேர் சேர்ந்துள்ளனர்.

சுமார் ஆறுமாத காலம் தொடரும் இப்பயிற்சிகளின் பேரில் இந் நிலையத்திற்கு மூன்று தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

# ஓராண்டு நினைவஞ்சலி



## திரு. சண்முகம் தர்மபுத்திரன்

(பிரபல வர்த்தகர்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 29 - 04 - 1948 | 10 - 04 - 1989 |

திதி: 31. 03. 1990

ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள்
அழகிய வதனம், அன்புமொழி அனைவரையும்
ஆதரிக்கும் தன்மையெல்லாம்
நீண்டு நினைவலையாய் எம் நெஞ்சத்தில் நிழலாடும்
குடும்பத்தேரிழுத்து குவலயத்தில் எங்களுக்கு
இடும்பை வாராது காத்த இனியவரே - நீங்கள்
துஞ்சி ஓராண்டு துயரத்தில் கழிந்தாலும் - எம்
நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

உங்கள் பிரிவால் வாடும்:
தாய், சகோதரங்கள், மனைவி,
பிள்ளைகள், மைத்துணர், உறவினர்கள்.

நெடுந்தீவு கிழக்கு,
நெடுந்தீவு - 13.

(3103)

# இளம் தலைமுறையினருக்கு விளையாட்டுக்கள் அவசியம்

## லயன்ஸ் கழக மாவட்ட ஆணையாளர் உரை

மானிப்பாய், மார்ச் 31

''எந்தச்சமய,இன மொழி மக்களாக இருந்தாலும் அவர்கள் ஆரோக்கியமுடையவர்களாக விளங்க வைப்பவை விளையாட்டுக்கள் ஆகும். இளம் தலைமுறையினருக்கு விளையாட்டுக்கள் அவசியமானவை.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் சுமார் இருபதினாயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு மைதான புள்ளிப்பலகையை திறந்து வைத்து உரையாற்றிய லயன்ஸ் கழக மாவட்ட ஆணையாளர் திரு. பிறேமச்சந்திரன் பத்திரான இவ்வாறு கூறினார்.

மானிப்பாய்லயன்ஸ் கழகத்தினரால்அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட இப்புள்ளிப் பலகை திறப்பு விழாவில் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்துக்கல்லூரி உப அதிபர் திரு. இராமதிலகம் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் லயன் எஸ். பத்மநாதன் விழாவுக்கு தலைமை வகித்தார். (க-60)

### பாதை நெருக்கடி

கொக்குவில் மார்ச் 31

யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை ஒழுங்கை, அரசடி வீதியில் சந்திக்கும் பகுதிக்கும் பாடசாலைக்குமிடையில் போதியளவு அகலமின்மையால் அடிக்கடி சிறு விபத்துக்கள்ஏற்படுகின்றன.

திருநெல்வேலிச் சந்தையில் இருந்து வாழைக்குலை மற்றும் மூடைகளைச் சைக்கிளில் கட்டி வரும் போது அநேகமாக முழுப் பாதையும் அடைபட்டு விடுகிறது. இதனால் நெரிசல் ஏற்பட்டு பலரும் பாதிக்கப்படுகின்றனர். அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது.

### கைதடி பாடசாலைகள் விளை. போட்டி

கைதடி கொத்தணிப்பாடசலைகளின் இல்லமெய்வல்லுநர்போட்டிகள் நவீல்ட் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கொத்தணி அதிபர் திரு. ஏ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றன.

யாழ், கோட்டக்கல்வி கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா பிரதம விருந்தினராகக்க கலந்துகொண்டு இப்போட்டிகளில்செவிப்புலன் இழந்த மாணவர்களும் ஏனைய மாணவர்களுடன் இணைந்து பங்குபற்றியதைப் பெரிதும் பாராட்டி தமது மகிழ்ச்சியையு ம்தெரித்தார்.

போட்டிகளில் சிவப்பு இல்லம் முதல் இடத்தையும் பச்சை, மஞ்சள் இல்லங்கள் முறையே 2ஆம் 3ம்ஆம் இடங்களையும் பெற்றன.

### இடமாற்றம்

காங்கேசன்துறை மார்ச் 31

வலி. வடக்கு பிரதேச சபையின் நிர்வாக சேவை உத்தியோகத்தராக திரு. வி. பி. சற்குணநாதன் கல்முனை பிரதேச சபையிலிருந்து இடமாற்றம்பெற்றுவந்துள்ளார். (க-68)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் ஜ. தேவராசா

திதி: 31-03-1990

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 25-11-1937 | 22-03-1988 |

வருஷம் இரண்டு மறைந்ததுவே
உம்மை மறக்க முடியவில்லை
பண்பாய் எம்மை வளர்த்த
பாசமுள்ள தந்தையே!
நின் பிரிவு எம்மை வாட்டுகின்றதே
உமது ஆத்மா சாந்தியடைவதாக

உமது பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்.

594/2 காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(12247)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியுடன் நல்ல பண்புகளையும் வளர்க்க வேண்டும்

## வைத்தீஸ்வரா வைபவத்தில் யாழ்.மாநகர ஆணையாளர்

கொக்குவில் மார்ச் 31

''கல்வி கற்று, உயர்ந்த மட்டங்களில் இருப்பவர்களிடையே போட்டி, பொறாமை மறைந்து கிடக்கின்றன. கற்றபின் கண்ணிலிருந்தும் குருடர்களாக பல கல்விமான்கள் இருக்கின்றார்கள். நாம் கல்வியுடன் நல்ல பண்புகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்''

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தினரின் மதிய போசன விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் மன்றத் தலைவர் செல்வன் ஆர். பாலமுரளி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது :-

''நாம் கல்வி கற்பது எதிர்காலத்தில் எம் ஜீவனோபாயத்துக்கு வழி காட்டுவதற்காகவும் தான் அத்துடன் கல்வியின் பயன் முடிவதல்ல. அதற்கு மேலாக நேர்மை, கண்ணியம், அன்பு, சகிப்புத் தன்மை என்பவற்றை கற்றவர்கள் கைக்கொள்ள வேண்டும். கல்வி கற்று உயர்ந்த மட்டங்களில் இருப்பவர்களிடையே போட்டி, பொறாமை மறைந்து கிடக்கின்றன.

கற்றபின் கண்ணிருந்தும் குருடர்களாக பல கல்விமான்கள் இருக்கின்றார்கள். நாம் கல்வியுடன் நல்ல பண்புகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்; நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம் என்ற நிறைவான குணாதிசயம் பெற்றிருக்க வேண்டும் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மாணவர் மன்றப் போஷகரும், வித்தியாலய அதிபரும் வண். தெற்கு கொத்தணி அதிபருமான திரு. சி. சிவசரவணபவன் தமது உரையில்

''கொடுங்கோன்மை நிலவியதால், நல்ல சூழ்நிலை இல்லாத காரணத்தால் பதுங்கியும், ஒழித்தும், வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலிருந்தோம். இன்று கொடுங்கோன்மை ஒழிந்து விட்டது. இருள் நீங்கி ஒளி வீசுகிறது'' என்றார்.

உபபோஷகர் திரு. என். வன்னியசிங்கம் ஆசிரியர், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி தேன்மொழி தர்மலிங்கம், இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் எஸ். சோதிலிங்கம், வித்தியாலய முன்னாள் உப அதிபர் திரு எஸ். இராஜதுரை, வித்தியாலய மாணவி செல்வி பி. தயாநிதி ஆகியோரும் உரையாற்றினர்.

மன்றச் செயலர் செல்வன் எஸ். விஜயகுமார் நன்றியுரை கூறினார்.

(இ-69)


## ''தாதிகள் தேவை''

கிளிநொச்சியிலுள்ள நன்கு ஸ்தாபிக்கப்பெற்ற தனியார் வைத்தியசாலைக்கு அனுபவமுள்ள தாதிகள் தேவை. தகுதிக்கேற்ப சிறந்த சம்பளமும். உணவும் இருப்பிடவசதியும் தரப்படும்.

வைத்திய அதிகாரி,
சாந்தி வைத்தியசாலை,
கிளிநொச்சி.

(2993)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L 90 DAY CLASS

இந்துநாகரிகம் } அருள்நங்கை
இந்துசமயம் }

2ஆம் பிரிவு
ஆரம்பம்: 02 - 04 - 1990

(சி/4178)

## உங்கள் தேவை! எங்கள் சேவை!!

★ தரமான
★ தெளிவான
★ சிக்கனமான

தமிழ், ஆங்கில தட்டச்சு, றோணியோ வேலைகளுக்கு

★

''ஷிப்ரா'' (சேவைப் பகுதி)

இல. 19, 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## மக்கள் வங்கி

### அடகு நகைகள் மீளளித்தல்

### கிளிநொச்சி மாவட்டம்

பின்வரும் கிளைகளில் அடகு வைத்த நகைகளை மீளப் பெற்றுக்கொள்வதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள், கிளிநொச்சி தபால் நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பணக் கரும பீடத்தில் வைத்து, கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்.

| | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|
| 1. பரந்தன் கிளை (27 - 09 - 1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 02 - 04 - 1990 — | திங்கள் |
| | 03 - 04 - 1990 — | செவ்வாய் |
| 2. கிளிநொச்சிக் கிளை (23 - 06 - 1989) வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 04 - 04 - 1990 — | புதன் |

மேற் குறிப்பிட்ட தினங்களில் காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 1-00 மணி வரை அடகு நகைகள் மீளப் பெற்றுக் கொள்ள முடியும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமுகந் தந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

[சி-4098]


## பெரிய மரங்களை வெட்டத்தடை

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். நகரப்பகுதியில் பெரிய மரங்களை வெட்டுவது தடை செய்யப்பட்டிருக்கிறது.

பெரிய மரங்களைப் பாதுகாக்கவும், புதிய மரங்களை நகரப்பகுதியில் நடவும் மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-3)

# மட்டக்களப்பு இரவு ரயிலில் பொதிகள்

## அடுத்த வாரம் தொடக்கம்

மட்டக்களப்பு - கொழும்பு இரவு தபால் ரயில் மூலம் அடுத்த வாரம் தொடக்கம் தபாற் பொதிகள் அனுப்பி வைக்கப்படலாம்.

இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்டத் தபால் அத்தியட்சகர் திரு. எஸ். அருணகிரிநாதன் தெரிவித்தார்.

தபால் தரம் பிரிக்கும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு விடுதி வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மாகோ இணைப்பு சேவை ஆரம்பிக்கப்பட்டதும் மட்டக்களப்பில் மீண்டும் இரு நேரத் தபால் விநியோகம் நடைபெறும் - என்றும் திரு. அருணகிரிநாதன் தெரிவித்தார். (க-21)

## கட்டடப் பகுதி ஊழியருக்கு சம்பளம் இன்னும் இல்லை

கொழும்புத்துறை மார்ச் 31

மாகாண கட்டிடத் திணைக்களத்தின், முல்லைத்தீவு, கிளிநொச்சி கட்டிடத் திணைக்கள ஊழியர்களுக்கு மூன்று மாத காலமாகச் சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை என அறியப்படுகிறது,

மத்திய அரசு கட்டிடத் திணைக்களம், வீடமைப்புத் திணைக்களங்களிலிருந்து மாகாண சபைக்கு மாற்றம் செய்யப்பட்ட பிரஸ்தாப ஊழியர்கள் தமது அவல நிலையையிட்டு விசனம் தெரிவித்துள்ளனர்,

பாதிக்கப்பட்ட சில ஊழியர்கள் திருகோணமலைக்குச் சென்று மாகாண பணிப்பாளரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபா வீதம் முற்பணமாக வழங்கப்பட்டதாம்.

பிரஸ்தாப ஊழியர்களுக்கு யார் கொடுப்பனவு செய்வது என்பதில் இழுபறி ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் திணைக்கள அதிகாரிகள் தடுமாற்றம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க—30)

## மோகனதாஸ் ச. ச. நிலையம்

கொழும்புத்துறை மார்ச் 31

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை ஏழு மணிக்கு நிலையத் தலைவர் டாக்டர். பே. எட்வேட் தலைமையில் நடைபெறும்.

இப்பொதுக் கூட்டத்தில் புதிய நடப்பு வருடச் செயற்திட்டங்கள் பற்றி ஆராயப்படுவதுடன், இவ்வருடப் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறுமென்றும் செயலாளர் திரு. க. வைரமுத்து அறிவித்துள்ளார்.

(க-30)

## கடமை தவறும் அரச ஊழியருக்கு எச்சரிக்கை

வவுனியா, மார்ச் 31

கடமைநேரத்தில் நித்திரை செய்த அல்லது மது அருந்திய நிலையில் காணப்பட்ட அரச ஊழியர்கள் சிலர் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தினேஷ் மேற்கொண்ட திடீர் விஜயத்தின்போதே இப்படியானவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

கடமை நேரத்தை அரச ஊழியர்கள் மக்களின்சேவைக்காக அர்ப்பணிக்க வேண்டும். கடமையின் அவசியத்தையும் புனிதத்தன்மையும் உணர்ந்து செயற்பட வேண்டும். இதனைப் புறக்கணிப்பவர்கள் மீது பொதுமக்களின் நன்மை கருதி கடுமையாக நடந்து கொள்ள நேரிடலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-164)

## பொதுக் கூட்டம்

அஞ்சல் தொலை தொடர்பு இளைப்பாறிய சேவையாளர் நலன்புரிக் கழகத்தின் நான்காவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை 10 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

## சேமிப்பு வங்கி கிளை திறப்பு

சாவகச்சேரி மார்ச் 31

தேசிய சேமிப்புவங்கியின் சாவகச்சேரிக்கிளை ஏப்ரல் 9 ஆம் திகதியன்று திறந்து வைக்கப்படவிருக்கிறது.

சாவகச்சேரியின் முகாமையாளராக திரு. ம. சிவானந்தனும், உதவி முகாமையாளராக திரு. கே. இராசதுரையும் கடமையாற்றுவார்கள் எனவும் தெரிய வருகிறது.

(க-31)

## பலாலி வீதிகள் திருத்தம்

காங்கேசன்துறை மார்ச் 31

பலாலி விமான நிலையத்தை அடுத்துள்ள பலாலி, தம்பாலைவீதி, ஸ்ரீ வல்லிபுரம்வீதி, கல்லடி வேலுப்பிள்ளை வீதி ஆகியவற்றை உடனடியாக புனரமைப்புச் செய்ய 4 இலட்சத்து 27 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந் நிதி கிடைத்ததும் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகும் என வலி வடக்கு பிரதேச சபை தொழில்நுட்ப அத்தியட்சர்கள் திரு. க. நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (க-68)

## காணிக்கான விண்ணப்பம்

காங்கேசன்துறை மார்ச் 31

வலி. வடக்குப் பகுதியில் குடியிருக்கவும், விவசாயம் செய்யவும் காணி இல்லாதவர்களை பூநகரி, முழங்காவில் பகுதியில் குடியேற விண்ணப்பங்களை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

கிராமசேவை அலுவலர்களின் சிபார்சிடன் இதற்குரிய விண்ணப்பங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு வலி.வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா கோரிக்கை விடுத்துள்ளார். (க-68)

## கூட்டுறவுக் கருத்தரங்கு

காங்கேசன்துறை, மார்ச் 31

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளை சிறப்புற ஒழுங்கமைக்க வழிகாட்டு முகமாக கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது.

இதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் மேற்கொண்டுள்ளார்.

[க - 68

# சமய சந்நிதிகளில்

## பங்குனிப் பொங்கல்

யாழ்ப்பாணம் மார்ச் 31

யாழ் ஆனைப்பந்தி நாவலர் ஒழுங்கை ஞானவயிரவர் கோயில் பங்குனிப் பொங்கல் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. பல கிரமங்களுக்கு மத்தியிலும் வருடா வருடம் இப் பொங்கல் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. [க]

## விசேஷ உற்சவம்

வெற்றிலைக்கேணி மார்ச் 31

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் அடுத்த மாதம் 14ஆந் திகதி(14 04 90) சனிக்கிழமை சித்திரைப் புதுவருடப்பிறப்பு விசேஷ உற்சவம் நடைபெறும். (க)

## பங்குனி உத்தர விழா

யாழ்ப்பாணம், மார்ச் 31

நானாட்டான் செல்வ முத்துமாரியம்மன் பங்குனி உத்தர விழா ஏப்ரல் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அடுத்த நாள் திங்கட் கிழமை பங்குனித் திங்கள் பொங்கல் குளிர்த்தி விழா நடைபெறும். (க)

## சங்காபிஷேகம்


யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஸ்ரீ ஞானவைரவர் கோவிலின் அஷ்டோத்தர சத சங்காபிஷேகம் இன்று சனிக்கிழமை காலை 4 மணி முதல் நடைபெறும். (க)


# கவாசாக்கி பஜாஜ்

## தூரம் செல்ல - துரித வேகம்

விசேஷ அறிமுக விலை
KB 100 - ரூபா 32,750/- M 80 - ரூபா 21,850/-
கையிருப்பு முடியும் வரை மட்டுமே!



KB 100

* மிகவும் கெட்டியான இரட்டைப் பாள அடிச்சட்டம்
* உயர்ந்த வலுவோடு திறம்பட இயங்கும் 10.5 பி. எச். பி. டெல்ரா சுபர் ரியூன் செய்த எஞ்சின்
* 2 ஸ்ரோக் எயார் கூல் சி. பி. ஐ. எலக்ரோனிக் இக்னிஷன் முறையுடனை 12 வோல்ட் பற்றரியுடன்
* மேலதிக நீளம் கொண்ட வீல் பேஸுடனை ஹைட்ரோலிக் டேம்பர்.

புதிய கவாசாக்கி பஜாஜ் மோட்டார் சைக்கிள் காலம் காலமாகப் பேணிப் பாதுகாத்து வரும் பஜாஜ் கீர்த்தியை நிலைநாட்டும் வகையிலும் நவீன உலகின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும் அதி நவீன வடிவமைப்பிலும் பொறியியல் தொழில்நுட்பத்தோடும் கிடைக்கிறது.

புதிய கவாசாக்கி பஜாஜ் என்ஜினை ஸ்ரார்ட் செய்யுங்கள். பறவை போல வேகமாகவும் பாதுகாப்புடனும் பறந்து செல்லும் உணர்வைப் பெறுங்கள்.

கவாசாக்கி பஜாஜ் 2 சக்கர வாகனத்தின் நோக்கத்தை முழுமையாகவே நிறைவேற்றுகிறது.

வசீகரமான பஜாஜ் குறைந்த எரிபொருளில் கூடுதலான தூரம் சென்று எரிபொருள் சிக்கனத்தில் சாதனை புரிகிறது. கவாசாக்கி பஜாஜ் KB 100, M 80 என்ற மோஸ்தர்களில் விருப்பமானதைத் தெரிவு செய்யுங்கள்.


கண்ணைக் கவரும் பல வர்ணங்களிற் கிடைக்கும். ஆர்பிக்கோவின் உன்னதமான விற்பனைக்குப் பிந்திய சேவை

ARPICO

M 80

* முழுக் குடும்பத்தையும் ஏற்றிச் செல்லக்கூடிய பலமிக்கது.
* எத்தகைய கரடு முரடான பாதைக்கும் ஈடுகொடுக்கும்.
* 2 ஸ்ரோக் ஒற்றைச் சிலிண்டர் எஞ்சின்.
* எலக்ரொனிக் சி. டீ. ஐ. இக்னிஷன் - பற்றரி அவசியமில்லை.
* சரலிப்பு முறையான பல - தட்டுக் கிளட்ச்.

மேலும் பல உன்னதமான அம்சங்கள்.



பயணத்தில் சொகுசுக்கு பஜாஜ்.

Mel Ads 0260

ரிச்சர்ட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்,
69, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 2. தொலைபேசி : 25701 - 2, 422149, 549480

வீதியில் மாவீரன் - கவாசாக்கி பஜாஜ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**‘சிறுதுளி பெருவெள்ளம்’**

சேமிக்கும் பழக்கம் சிறுவயதிலேயே ஏற்படவேண்டும்

மில்க்வைற் சோப் மேலுறையிலிருந்து 100 திருக்குறளை தொழிலகத்தில் நேரில் கொடுத்து ஒரு உண்டியலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க்வைற், யாழ்ப்பாணம்.**



# சஞ்சீவி

31—03—1990 சனிக்கிழமை



**‘நம்முன்னோர் தந்த அருஞ்செல்வம்’**

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே-நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே யவரோ டிணங்கி யிருப்பதுவும் நன்று.

ஔவைப் பிராட்டியார் அருளிய ‘வாக்குண்டாம்’ என்னும் மூதுரை நூலைப் பெற்றுக்கொள்ள மில்க்வைற் சோப் மேலுறையிலிருந்து 25 திருக்குறள் அனுப்பி வையுங்கள்.

**மில்க்வைற், யாழ்ப்பாணம்.**


# திருமலை கோட்டை அகதிகள் மீளக் குடியேறுவது தாமதமாகும்

## பொறுத்திருக்கக் கூறுகிறார் புலிகள் பொறுப்பாளர் ரூபன்

திருகோணமலை, மார்ச் 31

திருகோணமலை ''பிரெட்றிக்'' கோட்டையில் தங்கியிருக்கும் சிங்கள அகதிகளை மீளக்குடியேற்றுவது சம்பந்தமான நடவடிக்கைகள் பின்போடப்பட்டுள்ளன.

எனினும் அகதிகள் விரும்பினால் மீண்டும் பழைய இடங்களில் குடியமரலாம். ஆனால் பிரச்சினைகள் இருந்தால் குடியமர வேண்டாமென அந்தச் சிங்கள அகதிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

''பிரெட்றிக்'' கோட்டையிலுள்ள சிங்கள அகதிகளை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக ஆராயுமுகமாக கடந்த 27 ஆம் திகதி திருமலைக் கச்சேரியில் ஒரு மாநாடு நடைபெற்றது.

வட- கிழக்கு ஆளுநர் லெப் ஜெனரல் நளின் செனிவிரத்தினா தலைமையில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ரூபனும் கலந்து கொண்டார்.

அரசாங்க அதிபர் திரு.கே. பி. விஜயகோன், திருமலை இணைப்பதிகாரி பிரிகேடியர் வால் வீரசூரிய, பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ரி.ஈ ஆனந்தராசா உட்பட பத்துக்கும் மேற்பட்ட அகதிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

### அகதிகள் விருப்பம்

தாங்கள் முன்னர் வசித்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு அகதிகள் விருப்பம் தெரிவித்தனர். சிறிமாபுர, வீரநகர், உப்புவெளி, நடராஜவத்த, லிங்கநகர் போன்ற பகுதிகளைச் சேர்ந்த அகதிகள் அங்கு சென்று குடியிருப்பதற்கு சம்மதம் தெரிவித்தனர்.

ஏற்கனவே அப்பகுதிகளுக்குச் சென்று சிலர் இடங்களைப் பார்வையிட்டு வந்துள்ளதாகவும் அங்கு, வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் குடியமர்வதற்கு நிதியுதவி செய்து தரப்பட வேண்டுமென்றும் சிலர் கேட்டுக் கொண்டனர்.

### ரூபன் கருத்து

திரு. ரூபன் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வரவேண்டாம். மூன்று மாதங்கள் பொறுத்திருங்கள் எங்கள் நடவடிக்கைகளை அவதானியுங்கள். மூன்று மாதங்களுக்குப்பின்னர் தேர்தல் நடைபெறும்.

அப்போது நாங்கள் பதவிக்கு வருவோம். அதிகாரங்கள் எங்கள் கைகளில் இருக்கும். அதன் பின்பு உங்களுக்கு எங்கள்மேல் நம்பிக்கை ஏற்பட்டால் மீளக்குடியேறலாம். எதுவும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே இடம்பெற வேண்டும்.

இன்று நான்கூட தனிமையில்தான் இங்கு வந்துள்ளேன். நீங்கள் அனைவரும் சிங்கள மக்கள் உங்கள்மேல் நம்பிக்கை வைத்துத்தான் வந்திருக்கிறேன். இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாங்கள் அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறோம்.

அதைக்கூட குழப்பி மீண்டும் ஒரு இக்கட்டான நிலையை உருவாக்குவதற்கு ஒரு சில சக்திகள் முயற்சி செய்து வருகின்றன.

இந்தியப்படை வெளியேறினாலும் 'றோ'வின்சில பிரிவுகள்இன்னமும் நாட்டில் இயங்குவதாகச் சந்தேகிக்கிறோம்.

ஆகவே அவசரப்படாமல் இன்னும் மூன்று மாதங்கள் பொறுத்திருங்கள் —இவ்வாறு திரு. ரூபன் தெரிவித்தார். (ஓ-150)

# சுவீடன் அதிகாரிகள் குழு பல இடங்களுக்கும் விஜயம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணம் வந்துள்ள சுவீடன் நாட்டுத் தூதரகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் நேற்று பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களைப் பார்வையிட்டனர்.

நேற்று முன்தினம் யாழ் வந்த இந்த தூதுக்குழுவில் தூதுவராலய முதல் செயலாளர் செல்வி. குனில்லா வென்பகர் ரிட்பெக், சுவிடிஸ் சர்வதேச அபிவிருத்தி அதிகார சபையின் கூட்டுறவு அபிவிருத்தி அதிகாரி செல்வி. பிரிட் அமர், செயல் திட்ட அதிகாரி செல்வி மேரி அண்டர்சன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இவர்கள் கடந்த வியாழக்கிழமை மானிப்பாய் அனாதைக்குழந்தைகள் இல்லத்துக்கும், செம்மாதெரு வீடமைப்புத்திட்டத்துக்கும் சென்றனர்.

நேற்றுக்காலை கல்வித் திணைக்கள முறைசாராப் பிரிவுக்கும், சுழிபுரம் போருட் அமைப்புக்கும் விஜயம் செய்தனர்.

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலய அபிவிருத்தித் திட்டங்களையும் அவர்கள் பார்வையிட்டனர். (உ-3)

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு; ரூ.400 கோடி அந்நிய செலாவணி

கொழும்பு மார்ச் 31

வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்பவர்களால் 400 கோடி ரூபா வெளிநாட்டுச் செலாவணியாக இந்த ஆண்டு கிடைக்கும் என்று அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு கூடுதல் தொழில் பாதுகாப்புப் பெற்றுக் கொடுப்பதில் அரசு வெற்றி கண்டுள்ளது

இதே வேளை-

தொழில் வாய்ப்புப் பெற்று வெளிநாடு செல்பவர்கள் பற்றிய விவரங்களைச் சேகரிக்கும் விசேட பிரிவு ஒன்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தற்போது இயங்கி வருகிறது. (உ-எ)


**நேர மாற்றம்**

எமது ஞாயிறு ஆராதனை 01- 04- 1990 முதல் கீழ்க் காணும் நேர ஒழுங்கின் படி நடைபெறும் என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆராதனை — காலை 8. 00 மணி

ஓ. நா. பாடசாலை — காலை 10. 30 மணி

வாருங்கள்! தேவ ஆசீர்வாதம் பெறுங்கள்!

போதகர் எல். ஜே. மத்தியூஸ்
கல்வாரி தேவாலயம்,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

(12235)



**புதுவருட விஷேச கழிவு 15 வீதம்**

வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு! புதுவருட பரிசுகள், பார்சல்கள் அனுப்புவதற்கு 15% கழிவு வழங்கப்படுகிறது.

தொடர்பு கொள்க:-

**DHL International Ltd.**
**C/o Cosmos Marketing Services Ltd.**
**337, Kasturiar Road,**
**Jaffna.**

(சி/4405)


## சுந்தருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். கல்விப் பணிப்பாளராக பதவியேற்கும் திரு. ஆர். சுந்தரலிங்கத்தை வரவேற்கும் நிகழ்ச்சி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

யாழ். கல்வித் திணைக்கள நலன்புரிக் கழகத் தலைவர் திரு. இ. சிவசுப்பிரமணியம் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். [உ]

## இராணுவ அதிகாரியின் எலும்புக்கூடு

கொழும்பு, மார்ச் 31

மூன்று மாதங்களுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்ட இராணுவ லெப்டினன்ட் அனுரா கமல் குருசிங்காவின் எலும்புக்கூடு கடந்த செவ்வாய்க்கிழமை அம்பலாங்கொடையில் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த டிசம்பரில் இவர் கடத்திச் செல்லப்பட்டார்.

இக்கடத்தல் சம்பவம் தொடர்பாக பிரபல கிரிக்கட் வீரர் ,சப் இன்ஸ்பெக்டர் மற்றும் நான்கு வர்த்தகர்கள் ஆகியோர் கைதுசெய்யபட்டனர். [உ-எ]

# சகல உயர்தர மாணவர்களுக்கும் கம்பியூட்டர் கல்வி போதனை!

கொழும்பு மார்ச் 31

சகல உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் கம்பியூட்டர் கல்வி அளிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான பாடத்திட்டங்களைத் தயாரிக்கும் வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கம்பியூட்டர் கல்வி போதிப்பதற்கான ஆசிரியர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் தேசிய கல்வி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இத்தகவலைத் தேசியகல்வி நிறுவன இயக்குநர் திலோக சுந்தரி காரியவாசம் தெரிவித்தார்.

புதிய தேசிய கல்விக் கொள்கைத்திட்டத்தை 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் கட்டம் கட்டமாக அமுல்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும்.

இத்திட்டத்தின் பிரகாரம் ஆரம்ப வகுப்புகளுக்கான பாடத்திட்டங்கள் மாற்றி அமைக்கப்படும் என்றும்.

முதலாம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு வரையான பாடத்திட்டங்களே பெருமளவு மாற்றம் செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-2)

## நினைவு நாள்

தந்தை செல்வநாயகத்தின் 92ஆவதுபிறந்த தினம் இன்று மார்ச் 31 ஆம் திகதியாகும்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்த தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் 1977 ஆம் ஆண்டில் காலமானார்.

தமிழ் பேசும் மககளின் சமூக அரசியல் பிரச்சினைகள் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த வேளையில் 1956 — 1977 ஆம் ஆண்டுவரையான காலத்தில் அவர் மக்களின் பேரன்புக்கும், நன்மதிப்புக்கும் உரியவராய் விளங்கினார். [அ]

# சிங்கிற்கு பிரேமா நன்றி!

புதுடில்லி மார்ச் 31

உறுதி மொழிப்படி அமைதிப் படையை முற்றாக விலக்கியதற்கு நன்றி தெரிவித்து ஜனாதிபதி பிரேமதாஸா இந்தியப் பிரதமர் வி. பி. சிங்குக்குக் கடிதம் அனுப்பி இருக்கிறார்.

கடிதம் சிநேக பூர்வமான முறையில் எழுதப்பட்டிருந்ததாக வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் தெரிவித்தார்.

# மீசாலைப் பகுதியைச் சேர்ந்த 342 குடும்பங்களுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

மீசாலை வடக்கு, மீசாலை தெற்கு கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 342 குடும்பங்களுக்கு நாளை ஞாயிற்றுக் கிழமை உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவாக தலா ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த 184 குடும்பங்களுக்கும், மீசாலை தெற்கைச் சேர்ந்த 158 குடும்பங்களுக்கும் இலங்கை வங்கி யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக் கிளையில் இந் நிவாரணம் வழங்கப்படும்.

இதேவேளை-

நாவற்குழி, மறவன்புலோ, கைதடி தெற்கு, கைதடி நுணாவில், கைதடி மேற்கு, மட்டுவில் தெற்கு, சரசாலை, மட்டுவி வடக்கு, நுணாவில் மேற்கு, நுணாவில் கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த - முன்பு மீளக்குடியமர்வு நிவாரணம் பெறத் தவறிய - 544 குடும்பங்களுக்கும் நாளை ஆஸ்பத்திரி வீதிக்கிளையில் வைத்து நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# தமிழ்ப் பிரதேசத்தில் 591,பேருக்கு மகாபொலநிதி!

யாழ்ப்பாணம், மார்ச் 31

1988-1989 ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களில் 3 ஆயிரத்து 400 பேருக்கு மகாபொல புலமைப் பரிசில் உதவி நிதி கிடைத்துள்ளது.

இவர்களுக்கான புலமைப் பரிசிலை ஜனாதிபதி கடந்த 25 ஆம் திகதி பண்டாரகமவில் வைத்து வழங்கினார்.

இம்முறை வடக்கு - கிழக்கிலிருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் 591 பேர் மகாபொல புலமைப் பரிசிலைப்பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டு விழாவிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

# வடக்கு, கிழக்கில் 625 கோயில்கள் சேதம்!

கொழும்பு மார்ச் 31

கடந்த காலங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 625 இற்கும் அதிகமான இந்துக் கோயில்கள் சேதமுற்றன.

இந்து கலாசார அமைச்சின் புள்ளிவிபரம் ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் 265, மட்டக்களப்பு மாவட்டத்தில் 123, அம்பாறை மாவட்டத்தில் 69, மன்னார் மாவட்டத்தில் 35, திருகோணமலை மாவட்டத்தில் 63, முல்லைத்தீவு மாவட்டத்தில் 29, வவுனியா மாவட்டத்தில் 21, கிளிநொச்சி மாவட்டத்தில் 17, கோயில்கள் சேதமுற்றதாக அந்தப் புள்ளி விபரத்தில்தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ-2)

## 250 அடி உயரத்தில் புலிக்கொடி!

ஒட்டுசுட்டான், மார்ச் 31

முல்லைத்தீவு மாவட்டத்தில்புலிக் கொடி 250 அடி உயரத்தில் பறக்கிறது.

முல்லைத்தீவு நகரிலுள்ள தொலைத்தொடர்புத் திணைக்கள கோபுரத்தின் உச்சியில் புலிக்கொடி கட்டப்பட்டு [illegible] [உ-113]

## அன்னை நினைவாக கூட்டம்

அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை மாலை 6மணிக்கு யாழ் அத்தியடி பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறும். [உ]

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

இணுவில் ஆஸ்பத்திரி முன்பாக நேற்று இடம் பெற்ற மோட். சயிக்கிள் விபத்தில் இணுவிலைச் சேர்ந்த இராஜரத்தினம் திருச் செல்வம் (32வயது) படுகாயமடைந்தார். இவர் யாழ் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார். (ஒ-5)

## அன்பளிப்பு

கொழும்பு, மார்ச் 31

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 50 குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு உரிய உபகரணங்கள் ஆஸ்திரேலிய அரசு நன்கொடையாக வழங்கியிருக்கிறது.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சிடம் கையளிக்கப்பட்டிருக்கும் இந்த உபகரணங்கள் வடக்கு,கிழக்குப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளின்படி தொகுதிகளுக்குப் பிரித்துக் [illegible]கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-2)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு வைரமுத்து

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாய் தெற்கில் வசித்தவருமான மு. வைரமுத்து ஜே பி. (முன்னைநாள் சி. சி. எஸ்.) காலமாகிவிட்டார்.

இவர் திருமதி பூமகாலட்சுமியின் அன்புக் கணவரும், திருவாளர்கள் சிவகுமார், வரதகுமார், நிருத்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 31-03-90 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3-00 மணியளவில் தகனக்கிரியைக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்வார்களாக.

தகவல்:
மனைவி, மக்கள்

''குமரபுரம்''
லோட்டன் வீதி,
மானிப்பாய்.

[சி-4403]

## கனகசபை வேலாயுதம்பிள்ளை

வட்டுக்கோட்டை மேற்கை பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை வேலாயுதம்பிள்ளை (ஓய்வுபெற்ற நிலஅளவையாளர்) 29-03-90இல்காலமாகிவிட்டார். அன்னார் பாக்கியலட்சுமியின் அன்புக்கணவரும், கண்ணன், சித்திரா, சுபத்திரா, ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தங்கராசா, செல்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்சினி, வாகீசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவரின் ஈமக்கிரியைகள் 31-03-90 (சனிக்கிழமை) காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி. பா. வேலாயுதம்பிள்ளை.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(சி/4196)

## செல்வன் சி. சிவபக்தன்

செல்வன் சிவபக்தன் 30-03-90 அன்று சிவபதம் அடைந்து விட்டார். இவர் சிதம்பரநாதன் இந்திரா ஆகியோரின் அன்பு மகனும் தட்ஷாசினியின் அன்புத் தம்பியுமாவார். அன்னாரின் பூதவுடல் அடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்,

தகவல்:
Dr. பொ. சரவணபவன்

82, சட்டநாதர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(12250)

## சோமசுந்தரம் சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற அதிபர்)

புங்குடுதீவு மேற்கு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற அதிபர்) 27-03-90 இல் காலமாகிவிட்டார். அன்னார் செல்லம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் கந்தையா காலஞ்சென்ற தங்கம்மா தம்பதிகளின் அன்புமருமகனும், மீனலோசனி, சர்வலோசனி (ஆசிரியை முஸ்லிம் ம.வி காலி) கனடாவில் வசிப்பவர்களான தேவதாசன், குகதாசன், கோகிலதாசன், குமாரதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், த. தவராசா (அதிபர், புங்குடுதீவு குறிகாட்டுவான் அ. த. க. பாடசாலை), கலன்சூரிய (ESTATE SUPTD) காலி, ஜெகதீஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சகிலா, கார்த்திகா, ஜெயகாந், சாந்தநிமல், ஜீப்தகுமார், ஜெனாத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 01-04-1990 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கேரதீவு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

புங்குடுதீவு - 6.
[3105]

தகவல்;
த. தவராசா


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31 - 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SKYLINES**

For Quality Photostat Copying,
Electronic Typewriting
and
Roneo works
281 B, CLOCK TOWER ROAD,
JAFFNA.

சஞ்சீவி
சஞ்சிகை

31 - 03 - 1990 சனிக்கிழமை

தரமான
★ போட்டோ ஸ்ரற்
★ றோனியோ
★ எலக்ரோனிக் ரைப்பிங்
வேலைகளுக்கு
**ஸ்கைலைன்ஸ்**
281 பி, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

# மனித நேயப் பெருமையைக் கூறும் புனிதம் வாய்ந்த இரண்டு தேர்கள்

ஆன்மீக இலக்கியப் பரப்பிலும் தமிழ் இலக்கிய வானிலும் நாம் பல தேர்களைக் காண்கிறோம்.

எனினும் நமது உள்ளங்களிலே பசுமையாக இருப்பவை அழியாப் புகழ் பூத்த இரு தேர்கள்.

இத்தேர்களுக்குக் கவர்ச்சி அவற்றின் வடிவத்தில் இல்லை. அவற்றின் உயரத்தில் இல்லை. அவற்றின் எழிலில் இல்லை. அலங்காரத்தில் இல்லை. அத்தேர்களின் கண்ணே ஆங்காங்கே காணப்பெறும் சித்திரவேலைப்பாடுகளில் இல்லை.

அப்படியானால் — அத்தேர்கள் எமது உள்ளங்களை அவ்வாறு ஈர்ப்பது ஏன்?

இவ்விரு தேர்களில் ஒன்று கிருஷ்ணர் செலுத்திய தேர். மற்றையது பாரி வழங்கிய தேர்.

கிருஷ்ணர் சாரத்தியஞ் செய்த தேர் கீதா உபதேசத்தைக் குறிக்கின்றது.

பாரி வழங்கிய தேர் பாரி மன்னனின் ஈரநெஞ்சத்தை, வள்ளண்மையை மட்டுமன்றி நல்லாட்சியின் இலக்கணத்தையும் சித்தரிக்கின்றது.

பாரி வழங்கிய தேர் பற்றிய செய்தியைப் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் கபிலர் அழகாக எடுத்தியம்புகிறார்,

சமுதாயத்தின் தலைவனாகப் பாரி விளங்குகிறான், பறம்பு மலையை ஆண்ட அரசன். ஆகத் தாழ்ந்த உயிரினத்தை முல்லைக்கொடி குறிக்கும்.

முல்லைக் கொடி ஒன்று படருவதற்குக் கொழுகொம்பு இன்றி வருந்துகிறது; உழல்கின்றது. மனிதனைப்போன்று மொழிபேசித் தன்துயரை எடுத்துக் கூறவோ, கால்நடைகள் போன்று கத்துக் குரலெழுப்பித் தன் வாட்டத்தை எடுத்துச் சொல்லவோ முல்லைக் கொடிக்கு வலுவில்லை.

உயர்ந்த நெடுந்தேரில் விரைந்து செல்கின்ற பாரி ஒரு சாதாரண முல்லைக் கொடியின் வாட்டத்தைக் காணும் கழுகுக் கண்களையும், அதன் வருத்தத்தை உய்த்துணரும் ஈர நெஞ்சத்தையும் பெற்றிருக்கிறான்.

உயர்மட்டத் தலைவன் அடிமட்ட உயிரினத்தின் துயரினைக் கண்டு துடித்துப் போகிறான். அக்கணமே அதன் வாட்டத்தைப் போக்கி விடுகிறான்.

### வள்ளுவர் வாக்கு!

ஒருவனது உடையில் இருந்த ஆடை நழுவினால், உடனே அவனது கை விரைந்து சென்று அவ்வாடையைப் பற்றிக் கொண்டு உதவி செய்வதை ''உடுக்கை இழந்தவன் கை'' என்று போற்றுவார் வள்ளுவப் பெருந்தகை. அவ்வாறு உடுக்கை இழந்தவன் கைபோன்று ஓடிச் சென்று உதவுகிறான், கடையெழு வள்ளல்களில் ஒருவனான பறம்புமலை அரசன் பாரி.



முல்லைக்குத் தேர் ஈந்த பாரி

பாரியினைப் போன்று சமுதாயத் தலைவர்கள் சாமானியரின் துயரினைத் தாமாகவே உணர்ந்து, உரிய வேளையில், உரிய உதவியை, உடுக்கை இழந்தவன் கைபோல், விரைந்து செய்தல் வேண்டும் — என்ற கருத்தைப் பாரியின் செயல் வலியுறுத்தக் கண்டு மகிழ்கிறோம்.

தொடர்பு எதுவும் இல்லாதாரிடத்தும் உதவி செய்வதை, எவ்வுதவியையும் யாரும் நாடாதவிடத்தும் பணி செய்வதை அருளுள்ளம் என்று போற்றும் சான்றோர் உலகு.

'காக்கை குருவி எங்கள் ஜாதி, உயர்காடும் மலையும் எங்கள் கூட்டம்' என்று பாடினான் பாரதி. வள்ளுவனும் பாரதியும் காட்டிய அருளுள்ளத்தைப் பாரியிடத்துக் கண்டு வியக்கிறோம்.

### அல்பேர்ட் சுவைட்சர்

பாதையில் காணும் செடிகளின் இலைகளைத் தானும் நாம் பறிக்கும்போது செடி துடிப்பதை உணர்ந்து மனங் கலங்கினான், மேல்நாட்டு தத்துவமேதை அல்பேர்ட் சுவைட்சர்.

தான் எழுதிய ஆங்கில நூலொன்றில் (Ethics of Love), அவர் இதனை எமது நெஞ்சு பதறும் வண்ணம் விரித்துரைக்கிறார்.

அல்பேர்ட் சுவைட்சர் காணும் சீரிய நெஞ்சத்தைப் பாரியிடத்துக் கண்டு இறுமாப்புறுகிறோம்.

பாரி வழங்கிய தேர் ஈரநெஞ்சத்தை மட்டுமன்றி நல்லாட்சியையும் குறிப்பதைக் காணலாம். முடியாட்சிக் காலத்துக் கருத்தாயினும் குடியாட்சிக் காலத்துக்கும் சாலவே பொருந்தும்.

இச் செய்தி கூறும் கபிலர் பாடிய புறநூற்றுப் பாடலைப் பார்ப்போம்.

> பூத்தலை அறா அப் புனைகொடி முல்லை
> நாத்தழும்பு இருப்பப் பாடா தாயினும்
> கறங்குமணி நெடுந்தேர் ''கொள்க'' எனக்கொடுத்த
> பரந்து ஓங்கு சிறப்பின் பாரி......
>
> (— புறம் 200)

★ ★ ★

### பாரதத் தேர்

கிருஷ்ணர் சாரத்தியஞ் செய்த தேர் மற்றையது. இது போதிக்கும் வாழ்க்கைநெறி என்ன?

தேர் உடலையும், குதிரைகள் ஐம்புலன்களையும், கடிவாளம் மனத்தையும், அர்ச்சுனன் ஜீவாத்மாவையும் குறிக்கும்.

ஐம்புல நுகர்ச்சியுள்ள மனதைப் புத்தியினால் நல்லாற்றுப்படுத்தி ஆன்மா ஈடேற வேண்டுமென்பது இதன் விளக்கம்.

## - அபிராமி வரதன் -

இத்தேர்க் காட்சியின் பகைப்புலம் என்ன?

மனிதமனத்தின் ஓசைகளை, சாமாறு விழையும் போக்கினைப் பிரதிபலிக்கும் கௌரவர்கள் ஒரு புறம்.

மனித மனத்தின் சீரிய இயல்புடைய ஆமாறு நடைபோடும் பாண்டவர்கள் மறுபுறம்.

இவர்களிடையே நிகழும் போர்.........

சுருங்கச் சொல்லின் நீதிக்கும், அநீதிக்கும், மனிதனின் தாழ்ந்த உள்ளத்துக்கும், உன்னத உணர்வுகளுக்கும் இடையே நிகழும் மோதல்.........

சிறுபான்மையினரான பாண்டவர்கள் நெடுங்காலம் பல்வேறு துயரங்களை அனுபவித்த பின்னர் இறுதியில் வெற்றி பெறுவதையும், அதர்மம் இழைத்த பெரும்பான்மையினரான கௌரவர்கள் ஈற்றில் தோல்வி அடைவதையும் இங்கு கண்டு மனித குலம் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறது.

நீதியின் பக்கம் கிருஷ்ண பரமாத்மா வடிவில் திருவருள் துணை நிற்கிறது.

அர்ச்சுனன் ஒரு குடும்பஸ்தன். அவனுக்கு மனைவி குழந்தைகள், மாமன்மார், பாட்டன்மார் உளர்.

குருஷேத்திரப் போர்க்களத்தில் தனது உறவினர்களை, தான் நேசிப்பவர்களை எதிரணியில் காண்கின்றான். தான் நேசிப்பவர்களைத் தானே கொன்றொழிப்பதா — இப்படி அவன் மனம் ஏங்குகின்றது.

அர்ச்சுனனின் உடல் உறுப்புக்கள் மரத்துப்போய் விடுகின்றன. தொண்டை காய்ந்து விடுகிறது. உடல் நடுக்கம் அடைகிறது. மூளை சுழல்கின்றது. செயல் திறனை இழக்கின்றான்.

எது சரி எது பிழை என்று தீர்மானிக்க முடியவில்லை. மனச் சலனம் அடைகின்றான். போராட்டத்தின் முன்னால் ஒரு கோழையைப் போன்று கடமை தவறுகிறான். மனவுறுதி குலைகிறான். தனது ஆயுதங்களைக் கீழே போடுகிறான்.

இந்த நிலையிலே குருஷேத்திர போர்க்களத்தில் தேரில் இருந்தபடி அர்ச்சுனனுக்கு கீதையை உபதேசிக்கிறார் கிருஷ்ணர்.

### கீதா உபதேசம்

கீதா உபதேசத்தைச் செவிமடுத்த அர்ச்சுனன் மன உறுதி பெறுகிறான். 'தர்மம் ஓங்க, அதர்மம் அழிய வேண்டும்' என்று தெளிவு பெறுகிறான்.

இறைவனிடத்துச் சரணாகதி அடைந்து அவனது கருவியாகிறான். ஒரு செயல் வீரனாகிறான்.

குடும்பத்தைத் துறந்து காட்டிடைச் சென்று குகையினுள் அமர்ந்து, தியானஞ்செய்து, செயலை மறக்கப் போதிப்பதில்லை. கீதை கூறும் நெறி.

கீதை போதிப்பது ஒரு துடிப்புள்ள செயல் நெறி.

கீதை படிக்கக் கேட்ட மாத்திரத்தே சகிப்புத்தன்மை மன்னிக்கும் மனப்பாங்கு மலரும்.

அகந்தை அகலும். சாதாரணர்களையும் நேசிக்கும் நெஞ்சம் விரியும். ஈரநெஞ்சம் தோன்றும்.

கீதை நமக்குக் கூறும் கால, தேச, மொழி, இன வரையறைகளைக் கடந்த உலகளாவிய சீரியநற் செய்தியின் சாரத்தைப் பாருங்கள்.

★ நாம் நமது கடமைகளை விருப்பு வெறுப்பின்றிச் செய்தல் வேண்டும்.

★ சேவை செய்யும்போது பலன்கருதாமல் நிஷ்காமியமாகச் செய்தல் வேண்டும்.

★ நண்பன், எதிரி என்ற வேறுபாடு கலந்த உணர்வின்றிச் சேவை செய்ய வேண்டும்.

★ யான், எனது என்னும் அகந்தையை விடுத்து இறைவனின் கருவி என்ற பணிவுணர்வுடன் செயலாற்ற வேண்டும்.

★ வாழ்க்கையில் உயர்மட்டம், கீழ்மட்டம் என்ற இருநிலைவாழ் மக்களையும் சமமாக நேசிக்கும் உணர்வு, பார்வை, வேண்டும்



கீதா உபதேச செய்யும் தேரோட்டி

★ வெற்றி, தோல்வி இரண்டையும் சமமாக முகங் கொடுக்கும் மனத்திராணி வேண்டும்.

இதுவே கிருஷ்ணர் செலுத்திய தேர் காட்டும் நெறி.

> நசை களற்றான் நானென்ப தற்றான்
> உறுதியும் களிதரும் ஊக்க முடையான்
> வெற்றி தோல்வியில் வேறுபா டற்றான்
> இங்ஙன மாகித் தொழில்க ளியற்றுவோன்
> ஒளியியல் புடையான் என்ப.
>
> - பாரதியார்

★

---

கருத்துக் கலசம் — மயூரா

## மண்ணித்தலை அகழ்வாராய்வு

ஒரு நாட்டுக்கும் அந்த நாட்டில் வாழும் மக்களுக்கும் வரலாறு உண்டு. நாட்டினதும், மக்களினதும் மறந்து போன, மறைந்து போன, மறைக்கப்பட்ட வரலாற்றை நிலை நிறுத்துவன தொல்லியல் ஆராய்ச்சிகள்.

தமிழர்கள் இந்த நாட்டின் பூர்வீகக்குடிமக்கள். அதனை மறுத்துரைப்பதற்கென்றே ஒரு பக்க சார்புடைய தொல்லியல் ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் தென்னிலங்கையில் மலிந்தன. தமிழர்கள் இலங்கைக்கு இடையில் வந்தவர்கள்; தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் பழங்காலத்தில் சிங்களவர்களே வாழ்ந்தார்கள் என்று பிரசாரம் செய்யும் அளவுக்குச் சிங்களப் பேரினவாதம் தொல்லியல் ஆய்வுத்துறையையும் பற்றிக் கொண்டது!

வடக்கு-கிழக்கின் பல பிரதேசங்களில் பௌத்த மதத்தவருக்குரிய தொல்லியல் பொருள்கள் கிடைத்ததால் அவை சிங்களவர் வாழ்ந்த இடம் எனக் குடுகுடுப்பை தட்டினார்கள். தமிழர்கள் சைவத்தை மட்டுமன்றி வைஷ்ணவம், பௌத்தம், சமணம் ஆகிய மதங்களையும் பின்பற்றியவர்கள் என்பதை மறந்த நிலையில் விதண்டாவாதம் எழுப்பினார்கள்.

தமிழர்கள் இந்த நாட்டின் மூத்த குடிகள் என்பதை கந்தரோடை, ஆனைக்கோட்டை, வல்லிபுரம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட அகழ்வு ஆராய்ச்சிகள், தொல்லியல் பொருள்கள் சான்றாக்கின.

ஆனால் அவற்றில் பலவும் இன்னும் நூலுருப் பெறவில்லை. ஆவணப்படுத்தப் படவும் இல்லை. அது மட்டுமா? தமிழ்ப் பிரதேசங்களின் வரலாறு இன்னும் பூரணமாக ஆராயப்படவில்லை; அகழ்வாராய்ச்சி செய்யப்படவில்லை. இது விடயத்தில் தமிழ் மக்கள் போதிய கவனம் செலுத்தவில்லை.

அந்தத் தவறை, குற்றத்தை இனியும் இழைத்தலாகாது. தமிழ்ப் பிரதேசங்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில், தொல்லியல் ஆய்வுகள் நடத்தப்படுவது அவசியமானது, அவசரமானது.

அந்த ஆய்வுகளின் முடிவுகள், கண்டுபிடிப்புகள், தக்கபடி பதியப்பட வேண்டும் — அதாவது அச்சிடப்பட வேண்டும். அதே போல தொல்லியல் ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூல்கள் உரிய விதத்தில் ஆவணப்படுத்தப் படவும் வேண்டும். இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கும், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்துக்குமே உண்டு.

பூநகரி மண்ணித்தலை அகழ்வாராய்ச்சி தமிழ்ப்பிரதேச தொல்லியல் ஆராய்ச்சிக்கு புத்துயிர் அளிக்கிறது. அந்தப் புள்ளியிலிருந்து தொல்லியல் அகழ்வாராய்ச்சி, ஆராய்ச்சி, அவற்றை அச்சிடல், ஆவணப்படுத்துதல் என்பன விரிகோணமாக விசாலிக்க வேண்டும்.

தமிழர்கள் முன்னர் வாழ்ந்து இப்போது கபளீகரம் செய்யப்பட்டிருக்கும் புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு ஆகிய பகுதிகளுக்கும் தொல்லியல் ஆராய்ச்சி விஸ்தரிக்கப்படுதல் அவசியம்.

> கண்திறந்திடல் வேண்டும்
> காரியத்தில் உறுதி
> வேண்டும்
>
> — பாரதியார்

---

# இன்பம்- துன்பம் ஏற்பட நாமே காரணம்!

வாழ்க்கையில் நமக்கு துன்பத்துக்கு மேல் துன்பம் வரும்பொழுது என்ன செய்வது என்று அறியாமல் தவிக்கிறோம்.

கடைசியில் கடவுளை நொந்துகொள்ள ஆரம்பிக்கிறோம்.

'கடவுளே! உனக்குக் கண் இல்லையா! எனக்கு ஏன் இப்படி துன்பத்துக்கு மேல் துன்பம் கொடுத்துக் கொண்டிருக்கிறாய்!' என்று கதறுகிறோம்.

ஆனால் சற்று எண்ணிப் பாருங்கள்.

துன்பங்கள் உங்களுக்கு மட்டும்தானா வருகின்றன? எல்லாருக்கும் தான் வருகின்றன.

ஆனால் நமக்குத்தான் பெரிய துன்பங்கள் வருவது போலவும், மற்றவர்களுக்கு வரும் துன்பங்கள் மிகச் சிறியவை என்றும் நாம் நினைக்கிறோம்.

அதனால்தான் ஓர் அறிஞர் சொன்னார், 'எல்லாரும் அவரவர் துன்பங்களைக் கொண்டு வந்து ஒரு பொது இடத்தில் போடுங்கள். பிறகு, அவற்றில் உங்களுக்குப் பிடித்த துன்பங்கள் எவையோ அவற்றை எடுத்துக் கொண்டு விடு செல்லுங்கள்' — என்று.

அப்படியே எல்லாரும் தங்கள் துன்பங்களைக் கொண்டு வந்து போட்டார்கள்.

ஆனால் வேடிக்கை என்னவென்றால், அவர்கள் மீண்டும் எடுத்துக் கொண்டு சென்றது பிறர் துன்பங்களை அல்ல.

தாங்கள் கொண்டு வந்து போட்ட பழைய துன்பங்களையே எடுத்துக் கொண்டு சென்றார்கள்! ஏன்?

பிறர் துன்பங்களைப் பார்த்த பிறகு தான், தங்கள் துன்பங்கள் எவ்வளவோ சிறியவை என்று அவர்களுக்குத் தோன்ற ஆரம்பித்தது.

நாம் மிகவும் கஷ்டப்படுவதுபோல சொல்லிக் கொள்கிறோமே, ராமபிரான் எப்படி எல்லாம் கஷ்டப்பட்டார் என்று எண்ணிப் பாருங்கள்!

அரசை இழந்தார். தம் அருமை அன்னையைப் பிரிந்

## - சுந்தர்குமார் -

தார். உற்றார், உறவினரை விட்டு அகன்றார். நகரத்தின் சுகபோகங்களைத் துறந்தார்.

கடைசியில் இத்தனை கஷ்டங்களும் போதாது என்று மனைவியைப் பிரிந்து தவித்தார்.

இத்தனை கஷ்டங்கள் ஏற்பட்டும், இராமர் தெய்வத்தை நொந்தாரா? இல்லை. ஏன்?

இன்பமும் துன்பமும் எதனால் ஏற்படுகின்றன என்கிற உண்மையை அவர் அறிந்திருந்ததால்தான்.

அதனால் தான்—

என்னைப் போன்ற பாவி, இந்த உலகில் வேறு யாரும் இல்லை என்று நினைக்கின்றேன். நிச்சயமாக நான் பூர்வ ஜன்மத்தில் பல பாவங்கள் செய்திருக்க வேண்டும். அவற்றுள் சில இப்பொழுது பலன் கொடுக்க ஆரம்பித்து விட்டன என்று நினைக்கிறேன்' — என்று சொன்னார்.

ஆம், துன்பத்தையும் இன்பத்தையும் கொடுப்பது நம் பூர்வ வினையேயன்றி வேறு யாரும் அன்று.

நம் சுகத்துக்கு நாம் தான் காரணம். ★

---

## ரமழான் சிந்தனை

'நோன்பாளியிடம் யாரேனும் சண்டை, சச்சரவிட்டாலும் அல்லது அவரை திட்டினாலும் 'நான் நோன்பு வைத்துள்ளேன்' என்று அந்த நோன்பாளி கூறிவிடவும்' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்— 'நோன்பு வைத்திருப்பவன் எல்லாவித தீய பேச்சிலிருந்தும் தன் நாவை அடக்கிக்கொண்டு பிறரால் தமக்கு செய்யப்படும் தீமைக்காகப் பொறுத்துக் கொள்ளவும்'

மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- பிறருக்கு மனவேதனை உண்டாக்கும் வகையில் ஒரு நோன்பாளி நடந்து கொள்வானாயின், அவன் நோன்பு நோற்றும் பயனில்லை'.



நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- ரமழான் மாத இறுதி 10 நாள்களில் (ஒற்றைப்படை நாட்களில்) லைலத்துல் கத்ர் இரவைத் தேடுங்கள். அது ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வம் விடாது!

சஞ்சீவி சிறுகதை

-நவாலியூர் சி. என். செல்லத்துரை-

அந்தச் சுற்றாடலில் வாழும் அத்தனை பேரும் ஏழ்மைக் கோட்டுக்குள் வாழ்கின்றபடியால், நல்ல வசதிகள் வாய்ப்புள்ள அவர்களுக்குக் கிடைக்கவில்லை. என்பது தான் உண்மை.

வானொலி, ரீ. வி. வசதியோ இல்லாமல் வாழ்கின்ற அவர்களுக்கு, சுந்தரகீர்த்தியின் ரூ - இன் - வண் ஒரு வரப்பிரசாதமாகவே தோன்றியது.

'சுந்தரகீர்த்தி அதிஷ்டசாலிதான். எப்படியோ உழைத்து, கொஞ்சம் இலாபமாகவே இதை வாங்கிவிட்டான். பாவித்த ரூ - இன் - வண்ணாக இருந்தாலும், அதன் புதிய வாடை இன்னமும் மாறவில்லை' என்பது அந்தக் கிராம மக்களின் உணர்வு.

சுந்தரகீர்த்தியின் ரூ - இன் - வண்ணை மட்டுமல்ல, அவன் விட்டுள்ள மற்றைய பொருள்களைப் பற்றியும் அந்த மக்கள் அடிக்கடி கதைத்துக் கொள்வார்கள்.

அதைக் கேட்கும்போதெல்லாம், மலர்மணியின் இதழ்களிலே தேன் வடிந்த நாவின் ஊற்றோடு கலந்து சென்று உடலிலே நிறைவை ஏற்படுத்திவிடும். தன்னுடைய கணவனைப் பற்றி மிகப் பெருமையாகவே அந்த மக்களுக்கு அவள் கூறிக் கொள்வாள். அவளுடைய உள்ளக் கோயிலிலே சுந்தரகீர்த்தி தான் தெய்வம்.

பைபணியைப் வேலை செய்து பிழைப்பவன்தான் சுந்தரகீர்த்தி. யாராவது வந்து கேட்டால், அங்கு போய் வேலை செய்து நாளாந்தக் கூலிக்கு அடிகோலி விடுவான்.

இருபத்தெட்டு வயதான அவனுக்கு, அந்தக் கிராமத்து மலர்மணி மனைவியாகக் கிடைத்ததை, பலரும் பாராட்டத்தான் செய்தார்கள். சாதிக்கு ஏற்ற மூடி என்று அந்தச் சோடியைப் பற்றிப் பேசுவதை அடிக்கடி கேட்கலாம்.

கணவன் சொல் தட்டாமல், கணவன் எதைச் செய்தாலும் அதை எதிர்க்காமல் முன்வராக ஒருத்தியாகவே மலர்மணி இதுவரை வாழ்ந்திருக்கிறாள் - வாழ்ந்தும் வருகிறாள்.

சுந்தரகீர்த்தியும் அப்படித் தான். மலர்மணியின் தேவைகளைப் பூர்த்தியாக்குவதில், அவன் செயல்படுவதோ முயல் வேகத்தில் ... அவளே வேர் என்று கணித்த சுந்தரகீர்த்தி ஒரு அசட்டுத் தைரியசாலி.

அவனுடைய வீட்டுவளவின் எல்லையில் அமைந்திருக்கும் வீதியில் பல மின்கம்பங்கள்.

அந்த மின்கம்பங்கள் வழியாகச் சென்று மற்றொரு பிரதான வீதியில் உள்ள மின்கம்பங்களோடு சேர்வதை அவதானிக்கலாம்.

தன்னுடைய எல்லையில் நாட்டப்பட்டிருக்கும் மின்கம்பத்திலுள்ள மின்வயரில் கொழுவி எடுத்த இலெக்ரிக் வயரை, தனது ரூ - இன் - வண்ணில் இணைத்துத்தான் இப்போதெல்லாம் பாவிக்கிறான் சுந்தரகீர்த்தி. ஸ்ரோக்கில் இருந்த பற்றறியின் முடிவே அதற்குக் காரணம்.

அன்று ஒரு செவ்வாய்க்கிழமை. மார்கழி மாத மழையோ வான் திறந்தது போல கொட்டிக்கொண்டிருந்தது. அடை மழை என்று சொல்லும் அளவுக்கு அடாது பெய்து கொண்டிருந்த அந்த மழை விடாது இன்றைக்கு என்று பலரும் பேசிக்கொண்டார்கள்.

எல்லாத் திக்கிலும் இடி இடித்துக்கொண்டிருந்தது. ஒரே முழக்கமும் மின்னலும் தான்.

ஓலைக் குடிசைகளிலும் ஓட்டைக் குடிசைகளிலும் வெள்ளம். கட்டுப்படுத்த முடியாதவாறு கோரத் தாண்டவமாடிக் கொண்டிருந்த அம்மழை காரணமாக, குசினியிலிருந்த மலர்மணியால் வீட்டுக்குள் செல்ல முடியவில்லை.

இவர்களுடைய குசினியும் வீடும் வெவ்வேறாகவே அமைந்திருக்கிறது. வீட்டிற்குச் சற்றுத் தொலைவில் தான் அவர்களுடைய குசினி.

அங்கிருந்து மாலை நேரத் தேநீரைத் தயாரித்துக்கொண்டிருந்த மலர்மணி, தேநீரைக் கொண்டுபோய், சுந்தரகீர்த்தியிடம் கொடுப்பதற்கு முடியாதவாறு மழை.

வீட்டுக்குள் இருந்த சுந்தரகீர்த்தி, தனது ரூ - இன் - வண்ணில் போய்க்கொண்டிருக்கும் பாடல்களை ரசித்துக் கொண்டிருந்தான். தத்துவப் பாடல் தந்த உணர்வுகளில் மூழ்கிப் போயிருந்தான் அவன்.

தத்துவங்களைப் பின்பற்றாவிட்டாலும், தத்துவப் பாடல்களை ரசிக்கின்ற பக்குவம் அந்தக் கிராமத்தில் பலருக்கும் இருந்தது.

மழை காரணமாக, அந்த வீட்டில் இருந்து கொண்டு பாடலின் தாளத்தை வாய் மூலமாகவும் கையின் அசைவுகளாலும் பெருக்கிக் கொண்டிருந்தான் சுந்தரகீர்த்தி.

திடீரென ஒரு இடி பீரங்கியிலிருந்து புறப்பட்ட வேட்டுக்களின் ஓசைபோல. அவ்வளவு தான். சுந்தரகீர்த்தியின் ரூ - இன் - வண், வெடித்துச் சிதறியது. எங்கும் தீமயம். சுந்தரகீர்த்தியின் உடலிலே தீக்காயங்கள்.

கதறிக் கத்திய வண்ணம் அறையிலே உருண்டு கொண்டிருந்த தன் கணவனின் நிலை கண்டு ஓடிவந்த மலர்மணி, மயங்கி விழுந்த காட்சியோ மிகப் பரிதாபமானது.

பக்கத்து வீட்டுக்காரரால் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சுந்தரகீர்த்தி, பல மாதங்களின் பின் சுகமாகினான். ஆனால் அவனது வலது கை மணிக்கட்டு அப்படியே கழற்றப்பட்டு விட்டது. அத்தோடு அவனது இடது கைப் பெருவிரலும் ஆள்காட்டி விரலுங் கூடக் கழற்றப்பட்டன. அந்த வேதனை அவனது உயிரில்



கலந்து, அவனைச் சதா துன்புறுத்தியது.

இதுவரை காலமும் அவன் அனுபவித்து வந்த அனைத்துச் சந்தோஷங்களும் அவனை விட்டு அகன்று விட்டன. இப்போது அவன் ஒரு நடைப்பிணம். அவனது முகத்திலே அன்றிருந்த மகிழ்ச்சிக் கோடுகள் — கீற்றுக்கள் எதுவுமே இன்றில்லை. வெற்றுச் சடலமாகவே காட்சியளித்தான்.

★ ★ ★

அன்று ஒருநாள் பொது வைத்திய சாலைக்கு நான் சென்றிருந்தவேளை, அவனும் வந்திருந்தான். மருந்தெடுப்பதற்காக வந்திருந்த அவனைக்கண்ட என்மனம் கூட, இன்பநிலையை இழந்து கொஞ்சநேரம், துன்பப்படிகளில் ஏறி அமர்ந்துகொண்டது.

சுந்தரகீர்த்தியைச் சுற்றி வட்டமிட்ட என் துன்பத்தைக் கலைப்பதற்கு நான் எண்ணவில்லை. 'எனக்கும் இப்படி ஏற்பட்டால்?' என் மனம் தாங்கமுடியாத வேதனைக் கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்தது.

என் வேலையை முடித்துக் கொண்டு, வெளியேறி, 'சைக்கிள் பாக்'கில் கால் வைத்தேன். எனது சைக்கிள் நிறுத்தப்பட்ட இடத்தில் இருவர். ஒருவர் முருகானந்தம் மற்றவர் முத்துலிங்கம்.

இவர்களின் உரையாடலுக்குப் பாத்திரமாயிருந்தவன் சுந்தரகீர்த்தி என்பதை அறிந்த நான், ஒருசில நேரங்களாக என் சைக்கிளின் அருகே குந்திவிட்டேன்.

**முருகானந்தம்:** உவன் சுந்தரகீர்த்தி பெரியகள்ளன். யாழ்ப்பாணத்திலை ஒட்டோபர் அசம்பாவிதம் நடந்த காலத்திலை, நாங்களெல்லாம் அகதிமுகாமிலை இருந்தனாங்கள், இவனும் டாக்டர் முருகந்தகுமாரும் எங்களோடைதான் இருந்தவர்கள். அகதிமுகாம் காம்பிலை நாங்கள் இருந்த நேரத்திலை போட்ட ஊரடங்குச் சட்டம் ஒரு மாத காலத்திற்குப் பிறகு கொஞ்சங்கொஞ்சமாய்த் தளர்த்தப்பட்டது உங்களுக்கும் தெரியுந்தானே? அந்நேரத்திலை உவன் சுந்தரகீர்த்தி மாத்திரம்தான், வீட்டைபோய்ப் பாத்திட்டு வாறனெண்டு போவான். நாங்கள் பயத்திலை எங்கையும் போகமாட்டம். அந்த நேரத்திலை தான், டாக்டர் முகுந்தகுமாரின்ரை ரூ-இன்-வன், பட்டர்பிளை மண்ணெண்ணைக் குக்கர், பவுண் நகைகள், எவர்சில்வர்ப் பாத்திரங்கள் உடுப்புகள், ரோச்லைட் பற்றறிகள் எண்டு நியாயமாய் எடுத்திட்டான். எடுத்ததையெல்லாம் கொண்டுபோய் சினேகிதர்மார் வீட்டிலை ஒவ்வொண்டாய் வைச்சிட்டு...

**முத்துலிங்கம்:-** அவனும் புத்தியாய்த்தான் அலுவல் பார்த்திருக்கிறானெண்டு சொல்லுங்கோ. எல்லாத்தையும் ஒரு வீட்டிலை வைச்சா, தன்ரை களவு புடிபட்டுப் போமெண்டுதான் ஒவ்வொரு வீட்டிலை ஒவ்வொரு பொருளை வைச்சிருக்கிறான். மூளைசாலித் திருடனாயிருக்கும் ம்... பிறகு...?

**முருகானந்தம்:-** நாட்டு நிலைமை ஓரளவு சீரானதுக்குப்பிறகு ஒவ்வொண்டாய்க் கொண்டுவந்து தன்ரை வீட்டிலை சேத்திட்டான்.

**முத்துலிங்கம்:-** உப்பிடியெல்லாம் கொண்டுவந்து வைக்கேக்கை அவன் மனுஷி கேக்கேல்லையே முருகானந்தம்.

**முருகானந்தம்:-** அவளாவது கேக்கிறதாவது.? 'என்ரை மனுஷனுக்கு நல்ல உழைப்பு - நல்ல வருவாய். அதுதான் இதெல்லாம் வாங்கினவர் எண்டுதான் கேட்டவைக்குச் சொல்லியிருக்கிறாள் அவள். என்ரை மனுஷி ஒருநாள் கேட்டிட்டாள் சாடையாய். கேட்டதுதான் தாமதம் சீறி விழுந்தாளாம் என்ரை மனுஷிமேலை.

**முத்துலிங்கம்:-** அப்ப அவளும் சேர்ந்துதானெண்டு சொல்லுங்கோ.

**முருகானந்தம்:-** உண்மையும் அதுதான்.

**முத்துலிங்கம்:-** அவள் குடுத்துவைச்சவள். குடுக்கிற தெய்வம் கூரையைப் பிரிச்செல்லே குடுத்திருக்கு.

**முருகானந்தம்:-** கூரையைப் பிரிச்சு அந்தத் தெய்வம் குடுக்கேல்லை முத்துலிங்கம். அவங்கடை கூரைதான் இப்ப பிரிஞ்சுபோச்சு...

**முத்துலிங்கம்:-** என்னப்பா சொல்றாய்?

**முருகானந்தர்:-** நீதிக்குப் நேர்மைக்கும் புறம்பான விசயமெண்டால், இயற்கைக்குப் பொறுக்குமே?

**முத்துலிங்கம்:-** பொறுக்காதுதான்.

**முருகானந்தம்:-** அவள் மோசம்போட்டாள்.

**முத்துலிங்கம்:-** சும்மா பகிடி விடாதைங்கோ.

**முருகானந்தம்:-** இது பகிடி இல்லை, விஷயத்தைக்கேள். இடிவிழுந்து உவன் உருண்டு குளறேக்கை, குசினியிலிருந்து ஓடிவந்து மயங்கிவிழுந்திட்டாள் முத்தத்திலை. அதுவும் அந்த மழைவெள்ளத்துக்கை பிறகு பிரேதமாய் எடுத்துத்தான் எரிச்சவை.

**முத்துலிங்கம்:-** இதெல்லாம் எப்பிடி முருகானந்தம் அறிஞ்சனி?

**முருகானந்தம்:-** எங்கடை கிராமத்துக்குஅடுத்தகிராமம் தான் உவன்ரை கிராமம். டாக்டர் முருகந்தகுமாரும் எங்கடை வீட்டுக்குக் கிட்டத் தான், அவரின்ரை வீட்டுக்குப் பக்கத்திலை எண்பது வயதுக் கிழவன் ஒருத்தர் இருக்கிறார். அவர்தான் இந்தக் களவைக் கண்டு டாக்டருக்குச் சொன்னவர்.

**முத்துலிங்கம்:-** டாக்டர் போய்க் கேட்டிருக்கலாமே?

**முருகானந்தம்:-** கேட்டவர், டாக்டரோடை சண்டைக்குப் போட்டான். டாக்டர் ஒரு சாந்தமான ஆள்... தனக்குத் தீமை செய்தவனுக்கும் தாராள மனதோடை உதவி செய்யிறவர்.

**முத்துலிங்கம்:-** அதனாலை போனது போகட்டுமெண்டு விட்டிருப்பார் எண்டு சொல்லுறியள்.

**முருகானந்தம்:-** அவர் அப்பிடியே விட்டாலும், தெய்வம் விடேல்லை; பாத்தியே தண்டனையை.

இப்படிப் பேசிக்கொண்டே இருவரும் வெளியேறினார்கள்.

அடுத்த நாள், டாக்டர் முருகந்தகுமாரின் வீட்டுவாசலில் காலடிவைத்தான் சுந்தரகீர்த்தி. அவனைக் கண்ட டாக்டர், அவனைப் பரிதாபமாகப் பார்த்தாரே தவிர, வாய்திறந்து எதையுமே அவரால் பேசமுடியவில்லை.

சுந்தரகீர்த்தியின் கண்களிலிருந்து ஒரே கண்ணீர் தாரை தாரையாக வடிந்து கொண்டேயிருந்தது. அவனது உருவத்தையும், கண்ணீரால் நனைந்த அவனது முகத்தையும் பார்த்த டாக்டருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

''டாக்டர்! உங்கடை ரூ-இன்-வண்ணை மட்டுமல்ல என்ரை சொந்தச் சொத்தான என்ரை மனைவியையும் நான் ' கதறிக் கதறி அழுதான் சுந்தரகீர்த்தி.

அரைமணி நேரமாக, மாபெரும் சோகவெள்ளம் அந்த இடத்தை நிரப்பி நின்றது. அவனது பரிதாப நிலையால், கலங்கிக் கண்ணீர் வடித்தார் டாக்டர்.

'உங்கடை குக்கர், எவர் சில்வர்ப் பாத்திரங்கள், பவுண் நகைகள், உடுபுடைவைகள் எல்லாம் கொண்டு வந்தனான் டாக்டர். என்னை மட்டும் மன்னிச்சிடுங்கோ'

டாக்டர் முருகந்தகுமாரின் பிரத்தியேக நேர்ஸிங்ஹோமில், சுந்தரகீர்த்தி இப்போது ஒரு 'செக்கியூரிட்டி கார்ட்'

(யாவும் கற்பனை)

## ஜன்னல் நிலவு!

அந்த
வான நிலவு
வராவிட்டால்
பூமி
இருண்டு விடுகிறது,
இந்த
ஜன்னல் நிலவு
வராவிட்டால்
என்
'மனம்'இருண்டுவிடுகிறது,

—வேலணையூர் தாஸ்.

## பொது அறிவுப்போட்டி இல. 36

1. 25 ஆண்டுகள் மௌனவிரதம் அனுஷ்டித்த பாரதி யார்? ... ... ... சுத்தானந்த பாரதி / சுப்பிரமணியபாரதி
2. நவக்கிரகங்களில் ஈஸ்வரனாக வணங்கப்படுபவர் இவர்? ... சனி/செவ்வாய்
3. உதைபந்தாட்டப் போட்டியை அறிமுகப்படுத்திய நாடு எது? ... ... ... ... சீனா / பெல்ஜியம்
4. உலகில் மாமிசம் சாப்பிடாத பறவைகளுக்கான மருத்துவமனை எங்கே உள்ளது? ... ... ... ... அமெரிக்கா / புதுடெல்கி
5. இயற்கை வைரங்கள் அதிகமாகக் கிடைக்கும் நாடு எது? ... ... ... ... ஆபிரிக்கா / அவுஸ்திரேலியா
6. ஏவப்படும் ஆயுதங்களில் இதுவும் ஒன்று? ... ... ... ... அம்பு / ஷெல்
7. அண்மையில் விண்வெளிக்குப் போய் வந்த விதை எது? ... ... ... ... தக்காளிவிதை /ஆப்பிள் விதை
8. இதற்கு இதழ் உண்டு? ... ... ... ... ... மலர் / பெண்
9. முல்லைக்கொடிக்கு புகழ் தேடிக்கொடுத்த வள்ளல் யார்?.. ... ஓரி / பாரி
10. அண்மையில் சுதந்திரம் பெற்ற நாடு எது? ... ருமேனியா / நமீபியா
11. உலகில் முதல் செய்திப்பத்திரிகை எங்கு வெளியிடப்பட்டது? ... ... ... ... ரஷ்யா / இங்கிலாந்து
12. சோவியத்யூனியனின் நிறைவேற்று அதிகாரம்கொண்ட முதலாவது ஜனாதிபதி யார்? ... ... ... ... ... ... ஸ்டாலின் / கோர்பச்சேவ்

பெயர்:- ..............................................

விலாசம்:- ..............................................

..............................................

பொது அறிவுப்போட்டி இல: 36
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——————— இங்கே வெட்டுக ———————

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம்தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 04 - 04 - 1990 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |

# ஆஸ்த்மா நோய் தீர வெங்காயம் உதவும்!

வைத்திய சஞ்சீவி

வெங்காயத்தில் அடங்கிய ஒரு வேதியியல் பொருள் ஆஸ்த்மாவுக்கு நிவாரணம் அளிக்க உதவுவதாக மேற்கு ஜேர்மனியில் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

உள்ளே ஒன்றுமே இல்லாதது போல உரிக்க உரிக்க வந்து கொண்டிருக்கும் சாதாரண வெங்காயத்தின் உள்ளே பல சாதாரண வேதியியல் பொருள்கள் உள்ளன.

வெங்காயத்தை உரித்தால் கண்களில் நீர் வருகிறது.

அடுப்பில் வெங்காயத்தை வதக்கினால் வாசனை மூக்கைத் துளைக்கிறது.

இதற்குக் கந்தக வேதிப் பொருள்கள் வெங்காயத்தில் அடங்கியிருப்பதே காரணம்.

ஹங்கேரி,மேற்கு ஜேர்மனி, அமெரிக்கா முதலிய நாடுகளின் விஞ்ஞானிகள், வெங்காயத்தில் அடங்கியுள்ள கந்தக சேர்மங்களைப்பற்றி மேலும் பல தகவல்களைக் கண்டு பிடித்து அவற்றின் வேதிக்கட்டமைப்பைப் பற்றியும் கண்டறிந்துள்ளனர்.

இப்போது இந்த விஞ்ஞானிகள், வெங்காயத்தில் உள்ள ஆஸ்த்மாவை எதிர்க்கும் வேதிப் பொருள்களைப் பற்றி முனைப்பாக ஆராய்ந்து வருகின்றனர்

### மணம் ஏன்?

பொதுவில் கரிம கந்தகச் சேர்மங்கள் மிகுந்த மணம் எழுப்புபவை. வெங்காயத்தின் வாசனை தூக்கியடிப்பதற்கு இதுவே காரணம்.

வெங்காயத்தை நறுக்கும் போது வெங்காயத்தில் பல தொடர்வினைகள் நடைபெறுகின்றன.

மேற்கு ஜேர்மன்விஞ்ஞானிகள், வெங்காயச்சாற்றை ஆய்வகத்தில் பிராணிகளுக்கு அளித்தபோதுஆஸ்த்மாவைக் குணப்படுத்தும் அம்சம் வெங்காயத்தில் இருப்பது தெரிய வந்தது.

மனிதர்களிடம் அளித்தும் சோதனை நடத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து மற்ற விஞ்ஞானிகளும் வெங்காயத்தில் உள்ள ஆஸ்த்மாவைக் குணப்படுத்தக்கூடிய வேதிப் பொருளைக் கண்டறிய பல ஆய்வுகளை மேற்கொண்டனர். அப்போது அவர்கள் வெங்காயத்தில் பல புதிய கந்தகச் சேர்மங்களைக்கண்டு பிடித்தனர்.

ஜப்பானின் நகாயோ பல் கலைக்கழக விஞ்ஞானிகள் இந்தக்கந்தகச் சேர்மங்களில் முதல் சேர்மத்தைக் கண்டு பிடித்தார்.

இந்தச் சேர்மம், இரத்த உறைதலின்போது இரத்த வட்டுகள் (Platelets) ஒன்றோடு ஒன்று சேரும் வேகத்தைக் குறைக்கிறது. எனவே தான் இருதயத்திற்கு வெங்காயம் நல்லது என்று கூறுகிறார்கள்.

ஹில்ட்பெர்ட் வாக்னர் (Hildebert Wagner) என்பவரின் தலைமையின் கீழ் மேற்கு ஜேர்மன் நிபுணர்கள் ஆய்வு நடத்தி செபானெஸ் (Cepaenes) என்னும் வேறு கந்தகச் சேர்மங்களைக்கண்டு பிடித்தனர். பிறகு அவர்கள் ஜ்விபெலன் (Jwiebelans) என்னும் மேலும் இரண்டு சேர்மங்களையும் கண்டு பிடித்தனர்.

ஜேர்மன் மொழியில் ஜ்விபெல் (Jwiebel) என்றால் வெங்காயம் என்று பொருள்.

ஆஸ்த்மாவைக் குணப்படுத்தக்கூடிய தியோசல்பினேட் (Thiosulphinate) சேர்மங்களை வெங்காயத்தில் கண்டு பிடித்து உள்ளதாகஜேர்மன் நிபுணர் தோமஸ் பெயர் அறிவித்திருக்கிறார்.

ஆராய்ச்சிக் கூடத்தில் எலிகளுக்குச் சோதனை அடிப்படையில் வெங்காயச் சாற்றை வாய்வழியே சிறிதளவு அவற்றுககு அளித்த போது அவற்றுக்கு ஆஸ்த்மா கோளாறு தணிந்தது.

நிபுணர்கள் ஆராய்ச்சிக் கூடத்தில் செயற்கையாக வேறு தியோசல்பினேட்டுக்களைத் தயாரித்தனர். அவையும் ஆஸ்த்மாவைக் குணப்படுத்தும் ஆற்றல் கொண்டவைஎன்று தெரிய வந்தது.

எனவே ஆஸ்த்மாவைக் குணப்படுத்துகிற முக்கிய பண்பு சேர்ம மூலக்கூறில் அடங்கியிருக்கிறது என்று தெரியவந்தது. ★

# திருநாள்

சென்ற வாரச் சிறுகதையின் இறுதிப்பகுதி இங்கு பிரசுரமாகிறது.

- அமரர். கே. டானியல் -

எதிர்த்தாற் போல கலாமன்றம் வாசிகசாலை கண்ணுக்குத் தெரிகிறது. வாசிகசாலைக்குள் செல்கிறேன். அப்போதுதான் தினசரியைப் போட்டுவிட்டுப் பத்திரிகைப் பையன் போகிறான். உள்ளே யாருமே இல்லை.

பத்திரிகைகளையும், பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்கும். நாட்டின் சகலமாணவர்களின் கல்வியும் அரசாங்கக் கண்காணிப்பின் கீழ்வரும், கலைஞர்களுக்கெல்லாம் மான்யம் வழங்கப்படும். பத்திரிகை எழுத்தாளர்களுக்குச் சட்டபூர்வமான சம்பளம் வரையறுக்கப்படும்.

இதற்குமேல் என்னால் அந்தப் பத்திரிகைச் செய்தியைப் படிக்க முடியவில்லை. கண்களில் கண்ணீர்த் திரைகள் மூடி நிற்கின்றன. மனம் உணர்ச்சியால் விம்முகிறது. அப்படியே மடித்துக்கொண்டு வீடு நோக்கி ஓடி வருகிறேன்.

'நவமணி, நவமணி' என அங்கலாய்ப்புக் கேட்டு நவமணி ஓடி வருகிறாள்.

அமைதியுற்றிருக்கும் அவள் மனதிற்குச் சாந்தி தேட அந்தச் செய்தியைப் படிக்கிறேன்.

அவள் கண்களில் தோன்றும் ஒளியை நிமிர்ந்து பார்க்கிறேன். கண்களிலே நீர் நிரம்பியபடி அவள் மரமாக நின்றாள்.

'நவமணி..!

பத்திரிகை படித்து முடித்தும் ஆசையோடு அவளை அழைக்கிறேன்.

என் குரல் கேட்ட பின்பு தான் அவள் சுயநிலைக்கு வருகிறாள்.

நீங்க சொன்னீர்களே அதிகம் பிள்ளை பெறுகிறவர்களுக்கு தங்க மெடல் என்றும், விழா என்றும். அப்படி இங்கேயும் வந்துவிட்டதே..!

உற்சாகத்தோடு இதைக் கேட்டு விட்டு, அவள் தலையைத் தாழப் போட்டுக் கொள்கிறாள்.

'ஆமா வந்து விடும், சீக்கிரம் வந்து விடும், இன்னும் பத்தாண்டுகளில் வந்துவிடும்.

இவ்வார்த்தையை நான் முடிப்பதற்கிடையில் 'பத்து ஆண்டுகளா...?' என்று ஏக்கத்தோடு கேட்டாள். அப்படியே மயக்கம் போட்டுச் சரிந்து போகிறாள்.

நல்ல காலம் .! நான் அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டேன்.

'புரட்சி... புரட்சி...!'

என் அழைப்புக்குரல் கேட்டு ஓடி வருகிறான்.

'தண்ணீர் கொண்டு வா...!'

என் உத்தரவு கேட்டு உள்ளே ஓடுகிறான்.

நவமணி மயங்கிப்போய் என் மடியில் கிடக்கிறாள்.

என் மடி மீது அவளைக் கிடக்க வைத்து எத்தனை காலம்...!

பத்தாண்டுக்குப் பிறகு ஏனால் பிள்ளை பெற்று மெடல் வாங்க முடியாதே என்று ஏங்கிப் போய் விட்டாள். ★

பைத்தியக்காரி இப்போதிருந்தே பெற்றுக்கொண்டே இரு...! யார் வேண்டாமென்றார்கள்...? பத்தாண்டுக்கு முன் செத்தா போய் விடுவாய்.....!

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞருக்கும் பண்டிதருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

☐ வடமொழி மகாகவியாகிய பவபூதியின் அறிவையும் பக்தியையும் மெச்சி சரஸ்வதி தேவியே ஒரு சிறுமியாக வந்து அவருக்குப் பணிவிடை புரிந்து கொண்டிருந்தாள் என்று ஒரு கதை சொல்வதுண்டு.

ஒரு நாள் காளிதாசனும், தண்டியடிகளும் பவபூதியைக் காண வந்தார்களாம்.

வந்தவர்களை வரவேற்ற சிறுமி, பவபூதி பூசையில் இருப்பதாகவும், விரைவில் வந்து விடுவார் என்றும் கூறி அமரச் சொன்னாள்.

இருவரும் அமர்ந்தனர்.

தண்டியடிகள் அச்சிறுமியை நோக்கி, 'பூர்ண சந்திரன் போன்ற முகத்தை யுடையவளே! கொஞ்சம் பாக்குத் தூள் கொண்டுவா' என்று கேட்டார்.

உடனே காளிதாசன் 'காதளவு நீண்ட கண்களையுடைய பெண்ணே! பொன்னிறமான வெற்றிலையையும் கொண்டுவா' என்றார்.

அச்சிறுமி உள்ளே சென்று வெற்றிலை பாக்கை எடுத்து வரும்போது, பூசையை முடித்த பவபூதி, 'வெற்றிலை பாக்கை யாருக்கம்மா கொண்டு போகிறாய்' என்று கேட்டார்.

அச்சிறுமி, 'கவிஞராகிய காளிதாசனுக்கும், பண்டிதராகிய தண்டியடிகளுக்கும் கொண்டு போகிறேன்' என்றாள்.

'காளிதாசனைக் கவிஞன் என்றும், தண்டியைப் பண்டிதன் என்றும் குறிப்பிடுகிறாயே, ஏன்?' என்று கேட்டார் பவபூதி.

அதற்கு அச்சிறுமி, 'காளிதாசன் 'காதளவு நீண்ட கண்களையுடையவளே! என்று என்னை வருணித்தான். உனக்கு நீண்ட கண்கள் இருக்கின்றன. அவற்றால் பொன்னிறமான வெற்றிலைகளைத் தேடி எடுத்து வா என்றான்.

'பயனற்ற வருணனை இல்லாமல், சொற்களைக் காரண காரியத்திற்கு ஏற்பப் பயன்படுத்துபவன் கவிஞன்.

'ஆனால் காரண காரியம் நோக்காமல் வெறும் வருணனையைக் கையாள்பவன் பண்டிதன். தண்டி பாக்குத் தூள் கேட்டார்.

'என்னைப் 'பூர்ண சந்திரன் போன்ற முகத்தை உடையவளே' என வருணித்தார். இந்த வருணனைக்கும் பாக்குத்தூள் கொண்டு வருவதற்கும் ஒரு தொடர்புமில்லை. இது வெறும் சொல்லடுக்கு. 'ஆதலால் காளிதாசனைக் கவிஞன் என்றும், தண்டியைப் பண்டிதன் என்றும் குறிப்பிட்டேன்' — என்றாள். ★

## பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

### முட்டாளை கண்டு பிடிக்கும் வழி

☐ ஒருவனை முட்டாள் என்று எப்படிக் கண்டு பிடிப்பது?

இதற்குப் பதில் கூறும் அரபு பழமொழி உண்டு.

அதன் தமிழாக்கம் இதோ!

ஆறுவகையில் ஒருவனை முட்டாள் என்று தீர்மானிக்கலாம்.

1. காரணம் இன்றிக் கோபம் கொள்ளுதல்.
2. லாபம் இல்லாத பேச்சு.
3. முன்னேற்றம் இல்லாத மாற்றம்.
4. விஷயமில்லாத கேள்விகள்.
5. அயலான் மீது அபார நம்பிக்கை.
6. விரோதிகளை நண்பர்கள் என்று உறவாடுதல். ★

### 114 மொழிகள்தெரிந்த பன்மொழிப்புலவர்

☐ இத்தாலியில் உள்ள பலோக்னா என்ற ஜோசப் காஸ்பர் கார்டினல் மெஸபாண்டி என்ற புலவர் வாழ்ந்து வந்தார்.

பன்மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்.

இவருக்கு 114 மொழிகளில் நல்ல தேர்ச்சி உண்டு.

மேலும் 72சில்லறை மொழிகளில் பேசத் தெரியும். தாய்மொழியில் பேசுபவரைப் போன்று 54 மொழிகளில் பேசும் திறமை பெற்றிருந்தார்.

எல்லா மொழிகளிலும் சீன மொழியைக் கற்பதில்தான் மிகத் துன்பப்பட்டாராம். அதனைக் கற்பதற்கு நான்கு மாதங்கள் ஆயிற்றாம். ஆனால் தம் ஆயுள் முழுவதும் இவர் இத்தாலியை விட்டு வெளியே சென்றதே இல்லையாம். ★

### வள்ளல்கள் பட்டியல்

● சகரன், காரி, நளன், அந்துமாரி, நிருதி, செம்பியன், பிராடன் ஆகியோர் முதல் ஏழு வள்ளல்கள்.

அக்குரன், அந்திமான், கண்ணன், சந்தன், சந்திமான், சிசுபாலன், வக்கிரன் ஆகியோர் இடை ஏழு வள்ளல்கள்.

பாரி, காரி, ஆய், ஓரி, பேகன், நள்ளி, அதியமான் ஆகியோர் கடையேழு வள்ளல்கள். ★

### விவாகரத்து இல்லாத அயர்லாந்து நாடு

☐ அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த தம்பதிகளில் யாராவது பிரிந்து வாழ்ந்தார்கள் என்ற சரித்திரமே கிடையாது.

அத்தனை ஒற்றுமையாகவா அங்குள்ள தம்பதிகள் இருந்தார்கள் என்று கேட்கத் தோன்றுகிறது அல்லவா?

அப்படியெல்லாம் எதுவும் இல்லை. அங்கு விவாகரத்துக்கு அனுமதி கிடையாது.

கணவனும், மனைவியும் எலியும் பூனையாக இருந்தால் கூட கடைசி வரை ஒன்றாக வாழ்ந்துதான் தீரவேண்டும். ★

### நோய் தீர்க்கும் நறுமண மலர்கள்

● பூக்களைத் தலையில் சூடுவதால் அழகு மட்டுமா ஏற்படுகிறது?

இல்லை. உடலுக்குப் பல நன்மைகளும் ஏற்படுகின்றன.

மல்லிகை: கண்பார்வையைக் கூர்மையாக்கும்.

ரோஜா: இதயத்திற்கு இதன் மணம் பலம் தருகிறது.

நந்தியாவட்டை: கண்ணிற்கு குளிர்ச்சி தருவது. கண்சிவப்பு ஏற்பட்டால் போக்கும்.

செவ்வந்தி; கண்ணுக்குக் குளிர்ச்சி, கூந்தலை வளரச் செய்யும்.

மகிழம்பூ: சிரோவாதம், தலைவலி, கண்நோய் போக்கும் விசேட சக்தி கொண்டது. ★

### மனிதனும் மிருகமும்

● ஒருவனுக்கு, கழுகைப் போல் நீண்ட பார்வை இருக்க வேண்டும்.

கொக்கைப்போல் அசைவற்ற தன்மை இருக்க வேண்டும்.

நாயைப் போல் எச்சரிக்கையும் காகத்தைப் போல் இங்கிதம் அறியும் தன்மையும் இருக்க வேண்டும்.

அது மட்டும் போதாது. பாம்பைப் போல் தான் சென்ற வழியைப் பிறர் அறியாவண்ணம் செய்யும் திறமும் இருக்க வேண்டும்.

— மனிதனுக்கு இருக்க வேண்டியது இவையே என்கிறார் கிருபாநந்தவாரியார். ★

### வாழ்க்கையில் வெற்றி பெற....

☐ உங்கள் திறனை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். அவ்வாறு குறைத்து மதிப்பிடுவது, உங்கள் செயல்பாட்டைப் பாதிக்கிறது.

வெளிநாட்டு பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, படிக்கத் தொடங்கியபோது, மிகவும் பயந்த சுபாவத்தோடு காணப்பட்டார், ஒரு இந்திய இளைஞர்.

மேடையில் ஏறி பேசுவதற்கு அவர் அழைக்கப்பட்ட போது மிகவும் நடுக்கத்தோடு கொடுக்கப்பட்ட வாய்ப்பை வேண்டாமென மறுத்துவிட்டார்.

நாட்கள் செல்லச் செல்ல அச்ச உணர்வு அவரை விட்டு விலகியது. துணிவோடு மேடை பேச்சிற்கு முன் வந்தார்.

தனது பேச்சுத் திறனை மேம்படுத்திக் கொண்டார். அவரது பேச்சுத்திறன், பின்னர் தனது நாட்டில் பண்டிதர் முதல், பாமரமக்கள் வரை சொக்க வைத்து நாட்டையே அவர்பின் செல்லத் தூண்டியது; அவர்தான் ஜவஹர்லால் நேரு. ★

### பொருளை அருளாக மாற்ற ஒரு வழி!

☐ அயல்நாடு செல்லவேண்டும் என்றால் நம் நாட்டுப் பணம் அங்கு செல்லாது.

நம் பணத்தை அந்த நாட்டின் பணமாக மாற்றி எடுத்துச் செல்ல வேண்டும்.

அதேபோல, நம்பொருளை அருளாக மாற்றினால்தான் வானவர் நாடு வழி திறக்கும்.

பொருளை அருளாக மாற்றுவதற்கு உள்ள ஒரு வழி, தான, தருமங்கள் செய்வதுதான்.

கொடுக்கும்போது, நாம் கொடுக்கிறோம் என்கிற ஆணவம் இருக்கக்கூடாது.

எப்போதும் வாங்குகிறவன் கை தாழ்ந்தும், கொடுக்கிறவன் கை உயர்ந்தும் இருக்கும்.

இது ஆணவத்தை ஏற்படுத்தும் என்று கூறி, கொடை வள்ளல் கர்ணன், கொடுக்கும் பொருளைத்தன் கையில் ஏந்திக் காட்டுவான்,

பெறுபவன் அதை எடுத்துக் கொள்ளுவான். ★

# ஆண்களை மட்டம் தட்டிய தாட்சரின் சேவல்-கோழி கதை!

உலகில் இரும்புச் சீமாட்டி என்று வர்ணிக்கப்பட்டு வருபவர் திருமதி மார்கரட் தாட்சர்.

**1979** இல் பிரிட்டிஷ் பிரதமராகப் பதவி ஏற்ற திருமதி தாட்சர் இப்போது மூன்றாவது தடவையாகவும் அப்பதவியை வகித்து வருகிறார்.

**1983, 1987** தேர்தல்களிலும் வெற்றியீட்டிய திருமதி தாட்சர், **1992** இல் நடைபெற உள்ள தேர்தலிலும் போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கிறார்.

இதனிடையில் திருமதி தாட்சரின் செல்வாக்கு கிடுகிடு என்று பிரிட்டனில் வீழ்ச்சி அடைந்து வருகிறது.

ஆனால் பெண் விடுதலை பற்றி அக்கறை கொள்வதில்லைஎன்று சொல்கிறார் தாட்சர்.

பெண் விடுதலை இயக்கம் எனக்காக என்ன செய்துள்ளது? எனது முயற்சி காரணமாகவே நான் இன்றைய நிலைக்கு வந்தேன் – என்று கூறும் திருமதி தாட்சர், ஒரு நாள் பெரிய விருந்துபசாரம் ஒன்றுக்குச் சென்றிருந்தார்.

விருந்துபசார முடிவில் பேச்சுக்கள் தொடங்கின.

ஏராளமான பேச்சாளர்கள். அனைவரும் ஆண்கள்.


தாட்சர்

கடைசிப் பேச்சாளராக திருமதி தாட்சர் அழைக்கப்பட்டார்.

ஆண்களின் பேச்சுக்களால் வெறுப்படைந்திருந்த திருமதி தாட்சர் பேச எழுந்தார். பேச்சை முடிக்கும்போது—

'உங்கள் அனைவருக்கும் ஒன்று தெரியும் என்று நம்புகிறேன். சேவல்கள் கூவிக்கொண்டே இருக்கும். ஆனால் கோழிதான் முட்டை இடும் என்பதை நான் நினைவுபடுத்த வேண்டுமா?'

— இப்படித் திருமதி தாட்சர் கூறியதுதான் தாமதம் முன்னர் மணிக்கணக்காகப் பேசிய ஆண்பேச்சாளர்கள் முகங்களைப் பார்க்க வேண்டுமே!

அந்த இடத்தில் திருமதி தாட்சர் பெண்விடுதலைப் போராளியாகத்தான் காட்சி அளித்தார். ★

# நீதிமன்ற விசாரணைக்கு ராஜாஜி கொண்டு வந்த டைரி!

**1950**களில் தமிழ்நாட்டில் கோஸ்வாமா என்ற பெயரில் ஒரு மனிதர் உலாவி வந்தார்.

தான் பெரிய சுவாமிஜி என்று அவர் கூறிக்கொண்டார். அது மட்டுமல்ல.

குருடு உட்பட பலவித நோய்களைத் தீர்க்கும் சக்தி பெற்ற 'மந்திர நீர்' என்று கூறி அவர் போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரை விற்று பெரும் பணம் திரட்டி விட்டார்.

தனது நடவடிக்கைகளுக்கு அவர் அப்போது முதலமைச்சராகப் பணிபுரிந்து வந்த ராஜாஜியின் பெயரையும் பயன்படுத்திக் கொண்டார்.

ராஜாஜியின் மருத்துவ ஆலோசகர் என்று தன்னை கோஸ்வாமி சொல்லி வந்தார்.

இந்த ஏமாற்று வேலைகளை அறிந்து பொலீஸார் சாமியாரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்; பின்னர் அவர் மீது சென்னை, எழும்பூர் பிரதம நீதிவான் முன் வழக்குத் தொடர்ந்தனர்.

கோஸ்வாமா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். சுவாமி குற்றவாளியா, இல்லையா என்பது குறித்து நீதிபதி இரண்டு மனத்தில் இருந்தார்.

இக்கட்டத்தில் ராஜாஜியை மேலதிக சாட்சியாக பொலீஸார் அழைக்க வேண்டியதாயிற்று.

ராஜாஜி சாட்சிக்கூண்டில் ஏறுகிறார்:

உங்களுக்கு கோஸ்வாமியைத் தெரியுமா?

ராஜாஜி: தெரியாது. அவர் எனது மருத்துவ ஆலோசகருமல்லர்.

கோஸ்வாமியின் வழக்கறிஞர்; (ராஜாஜியைப் பார்த்து)

ஐயா! நீங்கள் மேற்கு வங்காள கவர்னராக இருந்த சமயம்...... 15-8-47 அன்று கோஸ்வாமா உங்கள் முன்னிலையில் யோக சாதனைகளை செய்து காட்டினார். அதற்காக அவரை அன்று பாராட்டினீர்கள். இது பற்றி என்ன கூறப்போகிறீர்கள்?'

'எனக்கு ஞாபகம் இல்லை' என்று தான் ராஜாஜி சொல்வார் என்று நீதிமன்றத்தில் இருந்த அனைவரும் எதிர் பார்த்தனர்.

எதிர்மாறாக, பார்வையாளர் மத்தியில் உட்கார்ந்து இருந்த தனது உதவியாளரை ராஜாஜி காட்சிக் கூண்டுக்கு அருகில் அழைத்தார்.

உதவியாளர் சிறிய தோல் பை ஒன்றை ராஜாஜியிடம் கொடுத்தார். ராஜாஜி அதனுள் இருந்து கறுப்பு நிற டைரியை எடுத்தார்.

15-8-47 ஆம் திகதி தாளை விரித்து, நீதிவான் முன் விரித்து வைத்தார் அவர்.

நீதிபதி அவர்களே! மேற்கு வங்காள கவர்னராக இருந்த போது என்னை வந்து சந்தித்த பிரமுகர்களின் பெயர்களைப் பதிவுசெய்து வைத்துள்ள புத்தகம் இதுதான். அன்றைய தினம் என்னைச் சந்தித்தவர்களின் பெயர்கள் இதில் பதியப்பட்டு உள்ளன. எதிரியான பெரியவரின் பெயர் இதில் இல்லை ஐயா'

— இப்படி ராஜாஜி சொன்னார்.

கோஸ்வாமிக்கு மறுபேச்சு இன்றி நீதிபதி இரண்டு வருடச் சிறைத்தண்டனை விதித்தார்.

இந்தக் கேள்வியை எதிர் பார்த்து ராஜாஜி தயாராக டைரியையும் ஏன் அன்று கொண்டு வந்தார் என்பது மர்மமாக இருந்தது.

இது அவரின் தூரதிருஷ்டியில் உதித்ததா? ★

# அமராவதி ஆற்றங்கரையில் சேரர் காலத்து நாணயம்!

☐ சேரரின் ஆட்சியின் தலைநகரான கரூரில் அமராவதி ஆற்றங்கரையில் சங்க காலச் சேரரின் அரிய காசு கிடைத்துள்ளது. இந்தக் காசு செம்பிலும், நீண்ட சதுர வடிவத்திலும் காணப்படுகிறது.

இந்தக் காசின் முன்பக்கத்தில் வலது பக்கம் நோக்கி நிற்கும் யானை. யானையின் மேலேபண்டைய தமிழ் பிராமி எழுத்துக்களும், பின்பக்கத்தில் சேரர்களின் இலச்சினையான வில்லும், அம்பும், இதன் கீழே அங்குசமும் காணப்படுகின்றன.

கரூரில் கிடைத்த சங்க காலச் சேரர் காசுகளில் எல்லாம் யானையின் மேலே மங்களச் சின்னங்கள் தான் உள்ளன.

ஆனால் இந்தக் காசில் சில எழுத்துகள் தெளிவற்ற நிலையில் இருப்பதால் எந்தச் சேர மன்னன் வெளியிட்டது என்று அறுதியிட்டுக் கூற இயலவில்லை.

கரூர் அருகில் புகளூரில் சேரல் இரும்பொறை கல்வெட்டுகளும், இரும்பொறை மன்னர்கள் வெளியிட்ட கொல்லிப்புறை, கொல்லிரும்கறையன் காசுகளும் கரூரில் கிடைத்துள்ளன.

இந்தக் காசும் கரூரிலேயே கிடைத்திருப்பதால் இரும்பொறை குலத்தைச் சார்ந்த மன்னன் ஒருவனால் இந்தக் காசு வெளியிடப்பட்டு இருக்கலாம்.

இந்தக் காசின் சிறப்பு என்னவென்றால் வட பிராமி 'ம' வும், தென் பிராமி 'ம' வும் காணப்படுகின்றன.

சங்க காலத்தில் மூவேந்தர்கள் வெளியிட்ட பல காசுகளில் முன்பக்கம், நிற்கும் யானையின் உருவமே காணப்படுகிறது. பின்பக்கத்தில் தான் தங்களுடைய அரச சின்னங்களைப் பொறித்து வெளியிட்டனர்.

இந்தக் காசு இரண்டாயிரத்து நூறு அல்ல இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் புழக்கத்தில் இருந்திருக்கலாம்.

கரூர் சேரர் தலைநகர் குறித்து ஐயத்திற்கே இடமில்லை எனக் கல்வெட்டுகளும், காசுகளும் நிரூபித்து விட்டன எனலாம். ★

### 'ஸைட்பேர்ன்' உருவான விதம்

☐ இளம் வாலிபர்கள் கன்னத்தின் இருபுறமும் அடர்த்தியாக, அகலமாக முடி வளர்த்துக் கொள்வதை சைட்பேர்ன் என்று சொல்வார்கள்.

இந்த நாகரீகம் எப்படி வந்தது?

அமெரிக்காவில் உள்நாட்டு யுத்தம் நடந்து கொண்டிருந்த காலம்........

அம்புரோஸ் இ. பேர்ன்ஸட் என்ற புரட்சித் தளபதி இது மாதிரி கன்னத்தில் முடிவளர்த்து இருந்தார்.

அதுவே மற்ற ஆண்களைக் கவர்ந்து இழுத்தது. இந்த நாகரீகம் மற்ற நாடுகளுக்கும் பரவியது,

அந்தத் தளபதியின் பெயர் பேர்ன்ஸைட், 'சைட்பேர்ன்' ஆக மாறியது. ★

### நெப்போலியன்விதித்த சவர்க்கார வரி

● 2300 ஆண்டுகளுக்கு முன்பே ஐரோப்பாவில் சவர்க்காரம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

அப்போது அதன் பயனை யாரும் அறியவில்லையாம்.

1772 இல் ஏ.லியோ என்பவர் வான்லெபினிட்ஸ் என்ற பெண்ணுக்கு ஒரு சவர்க்காரக் கட்டி அனுப்பி, அதனை உபயோகிக்கும் முறையும் கடிதத்தில் எழுதியிருந்தாராம்.

அன்றில் இருந்துதான் ஐரோப்பாவில் சவர்க்கார உற்பத்தி பரவியது.

இடைக்காலத்தில் சவர்க்கார உற்பத்திக்கு பிரிட்டன் வரிவிதிக்கத் தொடங்கியது.

நெப்போலியன் யுத்தங்களால் ஏற்பட்ட இழப்பை சமாளிக்க சவர்க்கார உற்பத்தியாளர்கள்மீது கடுமையான வரிகளை விதித்தார். ★

### சோவியத்தில் 'மர்ம' கோடீஸ்வரர்கள்

☐ இரும்புத்திரை நாடாக இருந்த சோவியத் யூனியனின் மர்மங்கள் ஒவ்வொன்றாகத் தற்போது வெளிவருகின்றன.

அவற்றுடன் இப்போது இன்னொரு மர்மமும் வெளியாகி இருக்கிறது.

அதுதான் யாருக்கும் தெரியாமல் 30 ஆயிரம் கோடீஸ்வரர்கள் ரஷ்யாவில் இதுகாலவரை வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதே அந்த மர்மம்.

இவர்கள் பல நூறு கோடி ரூபாய்களைப் பதுக்கி வைத்திருந்தனர் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ★

# போராளி பகத்சிங்கின் இறுதி ஆசை!

☐ இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங் சிறையில் இருந்த சமயம்......

ஒருநாள் அடுத்த அறையில் இருந்த தோழர்கள் பகத்சிங்குக்கு இரகசியமாக ஒரு கடிதத்தை அனுப்பினர்.

'சிறையில் இருந்து தப்பித்துப்போய், நீ உயிர் வாழ விரும்புகிறாயா?'— என்று கேட்டு அக்கடிதம் எழுதப்பட்டிருந்தது.

இந்தக் கடிதத்திற்கு பகத்சிங் தான் தூக்குமேடை ஏறுவதற்கு முதல்நாள் தான் பதில் அனுப்பினார்.

பகத்சிங்கின் பதில் வருமாறு;

தோழர்களே! இன்று, மக்களுக்கு என் பலவீனங்கள் தெரியாது.

நான் தூக்குமேடையில் இருந்து தப்பி விடுவேனாகில் அப்பலவீனங்கள் அவர்களுக்கு முன் வரும்போது புரட்சியின் அடையாளம் மங்கலாம்; அல்லது ஒட்டுமொத்தமாய் மறைந்தும் போகலாம்.

மாறாக, புன்னகையோடு, நான் தூக்குமேடையில் ஏறுவேனாகில், அந்நிலை, தங்களது குழந்தைகளும் பகத்சிங்காக வேண்டுமென்ற எண்ணத்தை தாய்மார்களிடம் உருவாக்கும்.

இவ்வாறு, நம் தேசத்தின் சுதந்திரத்திற்காய், உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருப்போரின் எண்ணிக்கை அளவிறந்து கூடும்.

அதற்குப் பின்பு, புரட்சியின் வேகத்தை – ஏகாதிபத்தியத்தால் எதிர்கொள்ள முடியாது. அவர்களின் வலிமையும், அரக்கத்தனமான முயற்சிகளும்கூட, முன்னெடுத்துச் செல்லும் புரட்சியைத் தடுத்துவிட முடியாது.

ஆனால், ஒரு விஷயம். இன்றும் என்னை உறுத்துகிறது. ஆம்! என் தேசத்திற்காகவும், இந்தச் சமூகத்திற்காகவும், ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்பி, என் இதயம் நச்சரித்துக் கொண்டே இருந்தது.

அத்தகைய ஆசைகளில் ஆயிரத்தில் ஒரு பங்கைக்கூட என்னால் நிறைவேற்ற இயலவில்லை.

ஒருக்கால் நான் வாழ நேர்ந்தால், அவைகளை நிறைவு செய்ய எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கக் கூடும்.

நான் இறந்து போய்விடக் கூடாது என்ற எண்ணம், என் மனதில் எப்போதாவது ஏற்பட்டிருக்குமானால், அதற்கு இந்த எண்ணம் மட்டுமே காரணமாக இருக்கும்.

இந்தத் தினங்களில், நான், என்னைப் பற்றிப் பெருமைப்பட்டுக்கொண்டு, இறுதிச் சோதனைக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்.

அந்த நாள் மிக விரைவில் வரவேண்டுமென்றும் விரும்புகிறேன்.

- 'பகத்சிங்கும் இந்திய அரசியலும்' என்ற நூலிலிருந்து.


பகத்சிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 வல்லரசுகளை உருவாக்கிய 2 ஆவது உலக மகாயுத்தம்!

(சென்றவாரத் தொடர்ச்சி)

**அச்சு நாடுகள் கூட்டணி**

ஏற்கனவே, ஹிட்லரின் சர்வாதிகாரக் கொள்கைக்கு இலைமறை காயாக ஆதரவு கொடுத்து வந்த ஜப்பான் இப்பொழுது ஹிட்லர் ஆக்கிரமிப்புச் செயலுக்கு பச்சைக்கொடி காட்டி வரவேற்பைக் கொடுத்தது.

இதன் மூலம் ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் சர்வாதிகார நாடுகளாக உருவெடுத்தது.

1940 செப்டம்பர் 27 இல் ஓர் ஒப்பந்தமூலம் 'அச்சு நாடுகளின் கூட்டணி' என்ற அமைப்பை உருவாக்கி, உலகில் புதிய ஒழுங்கு, புதிய ஜனநாயகத்தை அமுல்படுத்தப்போவதாக இவை அறிவித்தன.

இந்த அறிவிப்பே ஒரு ஆபத்தான அறிகுறியாக இருந்தது.

ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பெரும் பதற்ற நிலையை உருவாக்கியது.

இந்த ஐயப்பாடு சில மாதங்களிலேயே ஊர்ஜிதமாகத் துவங்கியது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பல்லாயிரம் ராணுவ வீரர்களையும் போர்த் தளவாடங்களையும் தயார் நிலையில் வைத்திருந்த ஹிட்லர், உலகம் வியக்கும் வண்ணம் 1941 ஜூன் 22 ஆம் திகதி சோவியத் ரஷ்யா மீது பெரும் படையெடுப்பைத் துவக்கினார்.

இதனைத் தொடர்ந்து தென்கிழக்கு ஆசியாவில் தனது ஆக்கிரமிப்புப் போரை ஜப்பான் மிக வேகமாகச் செயல்படுத்தியது.

பெரும் கபடத் திட்டத்துடன் ஐரோப்பாவில் ஜேர்மனி – இத்தாலியும், ஆசியாவில் ஜப்பானும் நடத்திய போர் வெறியால் உலக மக்கள் வரலாறு கண்டிராத பெரும் துயரத்தை அனுபவித்தனர்.

இலட்சக்கணக்கான மக்கள் செத்து மடிந்தனர்.

**நேச நாடுகள் கூட்டணி**

இந்தப் பயங்கரமான நிலைமை ஏற்பட்ட பிறகு தான் அமெரிக்கா, பிரிட்டன், சோவியத், ரஷ்யா போன்ற நாடுகள் உள் நாட்டில் தாங்கள் கடைப்பிடிக்கும் அரசியல் கொள்கையை ஒதுக்கி வைத்துவிட்டு, அச்சு நாடுகளின் கூட்டணிக்கெதிராக 'நேச நாடுகளின் கூட்டணி' என்ற அமைப்பை உருவாக்குவதில் ஈடுபட்டனர்.

இதை உருவாக்குவதில் அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ட், பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், சோவியத் ரஷ்யப் பிரதமர் ஜே. வி. ஸ்டாலின் ஆகியோர் முன்னணிப் பாத்திரம் வகித்தனர்.

இந்தக்கூட்டணியில்சுமார் 26 நாடுகள் பங்கேற்றுச் செயலாற்றினர்.

அச்சு நாடுகளின் ஆக்கிரமிப்புப் போர் வெறியை முறியடிப்பதில் நேச நாடுகளின் கூட்டணி எல்லாப் போர் முனைகளிலும் ஒருமுகமாகச் செயல்பட்டது.

இதற்கிடையே சோவியத் ரஷ்யா மீது பெரும் படையெடுப்பைத் துவக்கிய ஜேர்மன் ராணுவத்தின் நிலைமை இறுதியில், பொறியில் அகப்பட்ட எலியின் கதையாகமாறியது.

ரஷ்ய மக்களின் விடாப்பிடியான எதிர்ப்பும், உறைபனிக் குளிரும் ஜேர்மன் இராணுவத்தைப் பெரும் உயிர்ச்சேதத்துடன் பின் வாங்கிப் போகும் நிலைமைக்கு உள்ளாக்கியது. பின்வாங்கவும் ஆரம்பித்தனர்.

ஆனால், தங்கள் நாட்டை விட்டு வெளியேறிப்போகும் ஜேர்மன் இராணுவத்தை ரஷ்ய மக்கள் அப்படியே விட்டுவிடவில்லை.

போரில் இரண்டுகோடி மக்களைப் பலிகொடுத்திருந்த அவர்கள் ஜேர்மன் இராணுவத்தை விடாமல் பின் தொடர்ந்து, இறுதியில் ஜேர்மன் அரசாங்கமாளிகையான 'ரீச் ஸ்டாக்' கட்டடத்தைக் கைப்பற்றி, 1945 மே முதல் திகதி தங்கள் வெற்றியை நிலைநிறுத்திக் கொண்டனர்.

அத்துடன் ஐரோப்பாவில் யுத்தமும் முடிந்தது.

**அணுகுண்டு வீச்சு**

ஆனால் ஆசியாவில் தனது ஆக்கிரமிப்புப் போரை ஜப்பான் நிறுத்திய பாடாக இல்லை.

இதனை அறிந்த அமெரிக்கா 1945, ஆகஸ்ட் 6 ஆம் திகதி ஜப்பான் நகரமான 'ஹிரோஷிமா' மீது தனது முதல் அணுகுண்டையும், ஆகஸ்ட் 9 ஆம் நாள் 'நாகஸாகி' நகர் மீது தனது இரண்டாவது அணுகுண்டையும் வீசியது.

இந்தக் குண்டு வீச்சினால் ஏற்பட்ட கோர அழிவைக் கண்ட ஜப்பான் 1945 செப்டம்பர் 2 ஆம் திகதி சரணாகதி அடைந்தது.

சுமார் 5 கோடி மக்களைப் பலிகொண்ட இரண்டாவது உலகப் போரும் அத்துடன் முடிந்தது.

போர் முடிந்துவிட்ட போதிலும், போரினால் ஏற்பட்ட அழிவுகளும், அவலஒலங்களும், உலக மக்களின் உள்ளங்களின் நீங்காத் துயரங்களாக நிலை கொண்டன.

'யுத்தம்' என்ற சொல்லே ஒரு நாசகாரமான ஆயுதமாக எதிரொலித்தது!

இந்தத் துன்பகரமான நிகழ்ச்சிகள், உலக நாட்டுத் தலைவர்களையும் பெரும் வேதனைக்குள்ளாக்கிக் கவலையோடு சிந்திக்க வைத்தது.

இத்தகைய கருத்தாழத்தை அடிப்படையாகக் கொண்டு தான்—

1920 இல் நிறுவப்பட்ட சர்வதேசச் சங்கத்தின் இயலாத் தன்மையால் ஏற்பட்ட போர்ப்படிப்பினைகளை ஒரு பாடமாக ஏற்றுக்கொண்டு—

வருங்காலத்தில் போரே ஏற்படாதபடி தடுத்து நிறுத்தும் ஒரு உலக நாடுகள் ஸ்தாபனத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென, நேச நாடுகளின் கூட்டணித் தலைவர்கள் ஒன்றுபட்ட முயற்சிகளை மேற்கொண்டனர்.

### பாடம் பயில்வோம்

இந்த முயற்சிக்கான ஆரம்பப் பேச்சு வார்த்தைகள் போர் முடிவு இறுதிக்கட்டத்திலேயே மாஸ்கோ, தெஹ்ரான் போன்ற நகரங்களில் நடைபெற்றன.

இதில் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட், பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில், ரஷ்யப் பிரதமர் ஸ்டாலின், சீனப் பிரதமர் சியாங்கை ஷேக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதற்குப் பின்பும், நேச நாடுகளின் உயர் பிரதிநிதிகள் உலகில் பல இடங்களில் சந்தித்து, உலக நாடுகள் ஸ்தாபன அமைப்பு சம்பந்தமாக விரிவான விவாதங்களை நடத்தினர்.

**ஐந்து வல்லரசுகள்**

இறுதியில் உலக நாடுகள் ஸ்தாபன விதிகளுக்குப் பூரண வடிவங்கொடுக்கும் பொருட்டு அமெரிக்க, சோவியத் ரஷ்யா, சீனா, பிரிட்டன் ஆகிய நான்கு நாட்டு ராஜீயப் பிரதிநிதிகளின் அதிகார பூர்வமான மாநாடு, வாஷிங்டன் நகரில் 'டம்பர்டன் ஒக்ஸ்' என்ற இடத்தில் 1944 ஆகஸ்ட் 21 ஆம் திகதி முதல் அக்டோபர் 7 வரை நடைபெற்றது.

இந்த மாநாட்டில் உலக நாடுகள் ஸ்தாபன அமைப்பு சம்பந்தமாகப் பல நுணுக்கமான விஷயங்கள் விவாதிக்கப்பட்டு இறுதி முடிவு செய்யப்பட்டது.

இதன் பின் அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நான்கு நாடுகளோடு, பிரான்ஸ் தேசமும், ஒரு வல்லரசு நாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டு உலக அரங்கில் ஐந்து வல்லரசு நாடுகளென அறிவிக்கப்பட்டது.

பிரான்ஸ் நாட்டின் ஏகப் பிரதிநிதியாக அப்போதைய இராணுவத் தளபதி மார்ஷல் டி-கால் செயல்பட்டு வந்தார்.

(வளரும்)

# விண்வெளி ஆராய்ச்சிக்கு அடிக்கல்லான விஞ்ஞானி கொப்பர்னிகஸின் ஆய்வு!

தோன்று தொட்டே ஆகாயத்தை அண்ணாந்து நோக்கி அதிசயித்து வருகிறான் மனிதன்.

பகலில் தோன்றும் கதிரவனும், இரவில் மலரும் சந்திரனும், நட்சத்திரப் பூக்களும் அவனது அடிநெஞ்சில் கிளர்ச்சியூட்டியிருக்க வேண்டும்.

அந்த உள்மனப் பிரமிப்பில் தான் வான நூலறிஞர்களும், ஆய்வாளர்களும் – ஏன் கவிஞர்களுமே உருவாகினர் எனலாம்.

கி. மு. 1000க்கு முன்னரே கிரேக்கர்கள் சூரியனைக் காலங்காட்டும் கருவியாகக் கண்டு வாழ்ந்தனர்.

**திரியும் கோள்கள்**

புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி போன்றவை கூட அலைந்து திரிகின்ற விண்மீன்களாகவே கருதப்பட்டன:

கிரேக்கமொழியில் Planet' என்பதற்கு 'அலைந்து திரிவது' என்றே பொருள்.

கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பைதோகோரஸ் (Pythagoras) என்ற அறிஞரின் சீடர்கள் பூமியினையும் ஒரு கோளாகவே ஊகித்தனர். சந்திரன் அவர்தம் நினைப்பில் பிறிதொரு உலகமாகப்பட்டது.

**விண்வெளியும் ராக்கட்டும் - 1**

கி. மு. 4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மேதை அரிஸ்டாட்டிலின் கொள்கையை ஒட்டி கி. பி. 2 ஆம் நூற்றாண்டில் கிளாடியஸ் டோலமி (Cladius Ptolemy) எனும் அறிஞன் பூமியினை இப் பிரபஞ்சத்தின் நடுநாயகமாக அறுதியிட்டுரைத்தான்.

**சங்க இலக்கியத்தில்...**

தமிழ்ச் சங்க இலக்கியங்களிலும் வானவியல் கொள்கைகள் பரந்து காணப்படுகின்றன.

சொல்லப்போனால், ஏவுகணை பற்றிய 'வலவன் ஏவா வானவூர்தி'' (Unpiloted missile) என்ற கருத்து சோழன் நலங்கிள்ளியினைப் பாடும் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் எனும் புலவரால் புறப்பாடல் 27இல் கையாளப்படுவது வியப்பைத் தருகிறது.

ஐந்தாம் நூற்றாண்டில் ஆரியபட்டர் என்னும் இந்திய வானவியல் அறிஞர், பூமியானது தன்னைத் தன் அச்சில் சுழன்றபடி, சூரியனையும் சுற்றிவருகிறது என்ற பேருண்மையை 'ஆரிய பட்டியம்' எனும் நூலில் கூறினார்.

கி. பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரம்மகுப்தர் எனும் மேதையும் பூமியின் மிக அதிரச் சுற்றளவைக் கணக்கிட்டு உரைத்தார்.

அதுவும் ஓரளவு சரியான கணிப்பாகவே அமைந்தது.

அதே நூற்றாண்டினரான பாஸ்கரரும் 'மகா பாஸ்கரியம்' என்னும் நூலை எழுதினார்.



சீனாவில் வெடிமருந்து (Gun Powder) கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், கி. பி. 900ல் ரொக்கெட் என்னும் ஏவூர்தி பற்றிய சிந்தனை உதித்தது.

வானில் உயரச் செல்லும் அதி ஆர்வத்தில், ஒரு மன்னன், தனது ஆசனத்தின் நான்கு கால்களிலும், வெடிமருந்துக் குழாய்களைப் பிணைத்துக் கொளுத்திவிடக் கோரினானாம்.

பாவம், ஆகாயத்தில் ஒரு குறிப்பிட்ட உயரம் வரை தூக்கிச் செல்லப்பட்டவன், பூமியில் வெடித்துச் சிதறி வந்து விழுந்த செய்திகள் வரலாற்றில் சுவையானவை.

இங்ஙனம் முளைவிட்ட சீன ஏவுகணைகள் சரித்திரத்தில் கி. பி. 1232 ஆண்டு மங்கோலியர்சீனாவின்மேல்வீசிய தீங்கணைகளின் (Fire arrows) இயல்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**நடுவில் சூரியன்**

லியனார்டோ டாவின்சி என்னும் புகழ் பெற்ற கலைஞர், 15 ஆம் நூற்றாண்டில் பறவைகளின் இயல்பை ஒட்டி விண்மிதவை (Glider) ஹெலிகொப்டர் (Helicopter)) போன்ற வானவூர்திப் பொறிகளைத் தம் கற்பனையில் தீட்டினார்.

போலந்தின் மறுமலர்ச்சிக் காலத்தில் நிக்கோலஸ் கோப்பர்னிகஸ் (Nicolaus Copernicus) (1473 - 1543) என்ற விஞ்ஞானி தம் முப்பதாண்டுக் கால கடின உழைப்பிற்குப் பிறகு, சூரியனை நடுநாயகமாகக் கொண்ட சூரியக் குடும்பத்தை வருணித்து எழுதி வெளியிட்ட நூலே, இன்றைய விண்வெளி ஆராய்ச்சிக்குரிய அடிக்கல்லாகும்.

ஜோகன்னஸ் கெப்ளர் (1571 – 1630) கிரகங்களை சூரியனைச் சுற்றிவரும் பாதை நீள்வட்டமானது என்பது போன்ற தெளிவான வானவியல் கொள்கைகளை முதன்முறையாக வெளியிட்டதுடன், சரித்திர பயணம் குறித்து அறிவியல் புதினம் ஒன்றும் எழுதினார்.

கெப்ளரின் சமகாலத்தவரான கலிலியோ (1564 - 1642) தமது தொலைநோக்கி மூலம் சூரியன் சந்திரனின் மலைகள், பள்ளத்தாக்குகள், வியாழனின் நான்கு துணைக்கோள்கள், வெள்ளியின் பிறைகள் இவற்றை உற்றுக் கவனித்ததால் எழுந்த கருத்து வெளியீடே மேலுலகம், பாதாளம் போன்ற மூட நம்பிக்கைகள் நிலவி வந்த மனித சமுதாயத்தில் புது எழுச்சியை உருவாக்கிற்று.

**நியூட்டன்**

கலிலியோவுக்குப் பின் தோன்றிய கணிதமேதை சேர்

### சிறுவர் சுடர்

ஐசக் நியூட்டன் (1642-1727) மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருந்த ஆப்பிள் கனி ஒன்று விழுந்ததைக் கண்டார். அதனைப் புவிநோக்கி விழச் செய்த இயற்கைச் சக்திகளைக் குறித்துத் தீவிரமாகச் சிந்தித்தார். அதன் விளைவே நியூட்டனின் ''பிரபஞ்ச ஈர்ப்பு விசை நியதிகள்'. (Laws Of Universal Gravitation) என்ற மகத்தான பௌதீகச் சித்தாந்தம்.

பொருள்களின் சலனம், புவியீர்ப்புவிசை, உந்து விசை பற்றிய அவர் தம் கோட்பாடுகளே இன்றைய ஏவுகணை, செயற்கைக் கோள், விண்வெளி ஓடம் (Space Shuttle) விண்வெளிப் பயணம் போன்ற பல்வேறு விண்ணாய்வுத்துறைகளின் ஆணிவேர்களாக வலுவூன்றித் திகழ்கின்றன.

முதன்முதலாக, பலூன்களில் மனிதர்களை வைத்து வானிலை அளப்புக்கென ஆகாயத்தில் பறக்கவிடும் பரிசோதனைகள் கி. பி. 1784 இல் நிகழ்த்தப்பட்டன.

உயரே செல்லச் செல்ல ஊற்றழுத்தம் குறைவதுடன், மனிதனுக்கு உயிர் வாழப் போதிய ஒக்ஸிஜன் இல்லாததனாலும் அத்தகைய ஆகாயப் பயண முயற்சிகள் தற்காலிகமாகத் தோல்வியைத் தழுவின.

(மிகுதி அடுத்த வாரம்)

# அம்மா எங்கள் தெய்வம்; அவளே நாட்டின் செல்வம்!

பெற்று வளர்த்த அம்மா
 பெருமை வாய்ந்த அம்மா
கற்றுத் தந்த அம்மா
 கருணை நிறைந்த அம்மா!

பேணிக் காக்கும் அம்மா
 பிழைகள் பொறுக்கும் அம்மா
ஆணிப் பொன்னாம் அம்மா
 அன்பு நிறைந்த அம்மா!

நோய்கள் வந்த போதும்
 நோன்பு கண்ட அம்மா
சேய்கள் எம்மை என்றும்
 செம்மை செய்யும் அம்மா!

வறுமை வந்த போதும்
 வருத்தம் காட்டா அம்மா
சிறுமை அடைந்த போதும்
 சிணுங்கா திருக்கும் அம்மா!

பொறுமை பேணும் அம்மா
 புனிதம் காக்கும் அம்மா
மறுமை சிறக்க வேண்டி
 மனதால் வணங்கும் அம்மா!

அன்பு நிறைந்த அம்மா
 அருமை மிக்க அம்மா
என்பு எல்லாம் தேய்ந்தே
 எமக்காய் உழைத்த அம்மா!

வெல்லம் போன்ற அம்மா
 வெள்ளை மனசு அம்மா
செல்வம் என்றே எம்மை
 சிறப்பாய் அழைக்கும் அம்மா!

தியாகம் நிறைந்த அம்மா
 திருவைப் போன்ற அம்மா
நியாயம் நீதி எல்லாம்
 நிறைய உள்ள அம்மா!

வயது சென்ற போதும்
 வாரி எடுத்து எம்மை
நியதி செய்தே முத்தம்
 நிறைய தருவாள் அம்மா!

அம்மா எங்கள் தெய்வம்
 அவளே நாட்டின் தெய்வம்
அம்மா வீட்டின் தெய்வம்
 அவளே எங்கள் செல்வம்!

— முருகேவ பரமநாதன்.

# மஞ்சுவின் கவலை தீருமா?

மஞ்சுவின் வீட்டு வாசலை அண்மித்ததும் அவளின் குரல் வாசலைத்தாண்டி தெருவரைக்கும் கேட்டது.

சீ... மஞ்சுவா இப்படிக் கத்துவது...? இருக்காதே...!

அவளின் வீட்டினுள் நுழைந்ததும் என் சந்தேகம் தீர்ந்தது.

ஹோலில் கணவன் முரளியிடம் ஏதோ ஒரு கடிதத்தைக்காட்டிச் சத்தம்போட்டு கொண்டிருந்தாள்.

வரக்கூடாத நேரத்தில் வந்துவிட்டேனோ... என எண்ணி விழித்துக் கொண்டிருந்தவேளை,

''இந்து... நீயும் வா... இந்த அநியாயத்தை என்னவென்று கேள்—

என்றபடி என்னை இழுத்து அருகில் இருந்த செற்றியில் அமர்த்துகிறாள்,

முகம் எல்லாம் சிவந்து கண்களில் நீர் கொட்ட மஞ்சு ஆரம்பித்தாள்.

''இந்து நான் வேலைக்கு போகும் போதும் வரும்போதும் இப்ப நான்கு நாட்களாக ஒருவன் சுற்றுகிறான் எனக்கு பயமாக இருக்கிறது என்று சொல்ல, அதைக் அவர் காதில் விழுத்தவில்லை ஏதோ கட்டுப்பாடுகள் எல்லாம் விதிக்கிறார். இன்று அவன் ஒரு காதல் கடிதத்தையே கொடுத்தனுப்பி இருக்கிறான். அதைப் பார்த்த பின்னாவது புருஷன் என்றிருக்கிறவருக்கு ரோஷம் வரவேண்டாம்?''

— மூச்சுவிடாமல் கத்தி விட்டு ஓய்ந்தாள் மஞ்சு.

நான் ஒன்றும் புரியாமல் அவள் கணவன் முரளியைப் பார்க்கிறேன்.

''இந்து, நானும் பல தடவை மஞ்சுவுக்குச் சொல்லி விட்டேன் வெளியில் அதிலும் வேலைக்கு தனியாகப் போகும் வேளையிலாவது சேலையைக் கட்டி நெற்றி அழகாகக் குங்குமம் வை என்று... கேட்டால் தானே... இந்த மாதிரிச் சட்டையையும் போட்டுக் கொண்டு ஸ்ரிக்கர் பொட்டையும் ஒட்டிக் கொண்டு போனால்...... கன்னிப் பெண் என்ற நினைப்பில் எவனும் காதலிக்க வருவான் தானே ?... அதற்குப் பிறகும் உனக்கு யாராவது தொல்லை தந்தால் அவனை நான் தொலைத்துவிடமாட்டேனா?... இவற்றைச் சொல்லப் போனால் தன்னை அடக்கி ஒடுக்குவதாகச் நினைத்துச் சத்தம் போடுகிறாள். நீங்களே இவளுக்கு புத்தி சொல்லுங்கள்.''

முரளி எழுந்து விட்டான்.

''உண்மைதான் மஞ்சு... நீ புருஷனுடன் சேர்ந்து போகும் போது இஷ்டத்துக்கு எதையும் செய்யலாம். மற்றும்படி அவை எல்லாம் நம்மைக் கட்டுப்படுத்துவதாக நினைப்பதை விட்டு பாதுகாப்பாக நினைக்க வேண்டும். மேலும் அவருக்கு வவுனியாவில் வேலை என்றபடியால் கிழமையில் இரண்டு நாட்கள்தான் வீட்டில் நிற்பார். சந்தோஷமாக இருக்க வேண்டிய இந்த நாட்களில் இப்படியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கச் செய்து ஆண்களை அடிபட விடுவதால் கடைசியில் அழுவது நாம் தான். உன் புத்திசாலித்தனத்தால் இப்படியான பிரச்சினைகளை நீக்கி விடலாம்தானே... ஏன் நீயே அவனிடம் நான் திருமணமானவள் என்று ஒரு சொல் சொல்லிவிட்டால் அவன் தன் பாட்டில் போய் விடுவான் தானே... சரி... சரி எழுந்து ''கூல்'' ஆக ஏதாவது கொண்டுவா... நான் வீடு போய் சேர வேண்டும்.

'இந்து'வின் டைரி

★ ★ ★

# அன்றாட வாழ்வில்...

- தாய்ப்பால் இல்லாத குழந்தைகளுக்கு 15 அவுண்ஸ் பாலுடன் 10 அவுண்ஸ் நீரும் 4 தேக்கரண்டி தேனும் கலந்து கொடுத்தால் தாய்ப் பாலுக்குச் சமம்.
- தேனையும் எலுமிச்சம்பாழச்சாற்றையும் கலந்து லேசாக சூடாக்கி சாப்பிட்டால் இருமல் இருந்த இடம் தெரியாமல் போகும்.
- தினமும் காலையில் ஒரு டம்ளர் பாலுடன் 2 தேக்கரண்டி தேன் சேர்த்து சாப்பிட்டால் இருதய நோய் குணமாகும்.
- ஆஸ்துமா நோயாளிகள் தேன் அடையை தின்றால் மூச்சு இரைப்பு அகலும்.
- இரவில் தூக்கம் வரா விட்டால் பசும்பாலில் தேன் கலந்து சாப்பிட்டுவிட்டு படுக்க சென்றால் நன்றாக தூக்கம் வரும் (பகலுக்கு இது பொருந்தாது.)
- வெள்ளை கோதுமை மாவுடன் தேன் கலந்த களிம்புடன் சில துளிகள் பன்னீர் விட்டு பிசைந்து முகத்தில் தடவி வந்தால் முகம் அழகாகும்.
- நோயிலிருந்து குணமானவர்கள் தோடம்பழச் சாற்றுடன் தேன் கலந்து சாப்பிட்டால் உடல் சீக்கிரம் பலம்பெறும்.
- கடின உழைப்பு செய்பவர்கள் மட்டுமே தேனை அப்படியே உண்ணலாம். மற்றவர்கள் சிறிது நீர் கலந்தே உண்ண வேண்டும். ★

### நங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகராஜ பாகவதரின் இசை பற்றி சுப்புடு!

இசை உலகில் எம். கே. தியாகராஜ பாகவதரைப்போல் கொடி கட்டிப் பறந்தவர் யாருமே கிடையாது.

மேலும் சொல்லப்போனால், கர்நாடக இசையைப் பாமரரும் ரசிக்கச் செய்தவர் அவர்.

இசை நோக்கமே அதுதானே!
அது உள்ளத்தைத் தொட வேண்டும்.
ஊனை உருக்கவேண்டும்.
உத்வேகம் கொடுக்கவேண்டும்,
உள்ளம் ஊசலாடவேண்டும்,
உன்மத்தம் ஆகவேண்டும்.
உள்ளக் கிடக்கையில் நிலைத்து நிற்கவேண்டும்.
உவகை ஊற்றெடுக்கவேண்டும்.

மேற்கூறிய அம்சங்கள் எல்லாம் தியாகராஜ பாகவதரின் இசையில் பரிபூரணமாக இருந்தன.

அவர் பாடிய பாட்டுக்களை முணுமுணுக்காதவாய்களே கிடையாது.

அவர் வழங்கியது எல்லாம் அப்பட்டமான கர்நாடக இசை துளிகூட இந்தியோ, மேற்கத்திய இசையோ, டப்பாவோ கிடையாது.

ஆலத்தூர் வெங்கடேச ஐயரிடம் முறையாக இலக்கண இசை கற்றார்.

அவருடைய இசைத் தட்டுக்கள் விற்றதுபோல யாருடையதும் விற்றது கிடையாது.

அள்ளிக் கொண்டு போகும்.

பாபநாசம் சிவன் வீடு தேடிச் சென்று பாயில் உட்கார்ந்து பாட்டுக் கேட்டுக்கொள்வாராம்.

சிவனின் கவனங்கள் கேட்பதற்கு எளிதாகத் தோன்றும்.

கிட்டப்போனால் கொட்டிவிடும் தர்பார் ராகத்தில்.

''மறைவாய் வைத்து ஒரு'' என்கிற கவனம் கேட்பதற்கு லகுவாய் இருக்கிறது. அதில் சிவன் போட்டிருக்கிற சங்கதிகள் அதை மெருகேற்றியுள்ளன.

இலேசில் பாடமுடியாது. அப்புறம் ''தீன கருணாகரனே'' ஆங்காங்கு கார்வை, விளைவுகள், முடுகுகள். அவ்வளவும் உசிதாளம் கரணம் தப்பினால் மரணம் பாடிப்பாருங்கள் தெரியும் சேதி.

அவருடைய பாட்டைக் கேட்டுவிட்டு இப்போது திரைப்படங்களில வரும் அவல ஓலங்களைக் கேட்கும் போது உள்ளம் வேதனையடைகிறது.

எலக்ரோனிக் கருவிகளையும் ரொம்போ, றோம்போ, போங்கோ ஆகிய கருவிகளையும் வைத்துக் கொண்டு உருத்தெரியாத சாகித்தியங்களுக்குகண்டஞ்சுண்டாமெட்டமைத்து ஒலமிடும்போது, நெஞ்சு வலிக்கிறது.

காலம்வரும், காத்திருப்போம்.

—சுப்புடு

# பட வெளியீட்டு விழாவிற்கு மூன்று நாள் அரசு விடுமுறை

ஹொலிவூட் தயாரித்த புகழ்பெற்ற திரைப்படங்களில் ஒன்று Gone with the wind ஆகும்.

இந்தப் படத்தில் பிரபல நடிகர்கள் கிளார்க் கேபிள், விவியன்லீ, லோறன்ஸ் ஒலிவியர், ஒலிவியா டி ஹவிலண்ட் ஆகியோர் நடித்திருந்தனர்.

இப்படம் 51 ஆண்டுகளுக்கு முன் டிசம்பர் 15ஆம் திகதி 1939ஆம் ஆண்டு அமெரிக்க ஜோர்ஜியா மாநிலத் தலைநகர் அட்லன்டாவில் திரையிடப்பட்டது.

வெளியீட்டு விழாவை ஒட்டி ஜோர்ஜியா மாநில அரசு மூன்று நாள் பொது விடுமுறை விட்டது.

பட வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள நடிகர்கள் சென்றிருந்தனர். அவர்களைக்காண மூன்று லட்சத்திற்கு அதிகமானோர் வீதிகளில் வரிசையாக காத்துநின்றனர்.

இப்படத்தில் நடித்தபலர் இப்போது இறந்துவிட்டனர்; ஆனால் இப்படம் வெளியிடப்பட்ட 50 ஆவது ஆண்டு தினம் சடந்த டிசம்பரில் கொண்டாடப்பட்டது.

1939 இல் இப்படம் தயாரிக்க 40 லட்சம் டாலர் பணம் செவானது. ★

# நடிகைக்கு 212 கடிதங்களை அனுப்பிய ரசிகர் மீது வழக்கு

சினிமா மோகம் அமெரிக்கர்களையும் விட்டு வைக்கவில்லை.

ஹொலிவூட் நடிகர், நடிகையரை அங்குள்ள ரசிகர்கள் இடைவிடாது தொல்லைப்படுத்துவது அதிகரித்து வருவதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

ரசிகர்களின் தொல்லையில் இருந்து தப்புவதற்காக ஹொலிவூட் நடிகர், நடிகையர் துப்பாக்கிகளைக் கொண்டு செல்கின்றனர்.

கிளின்ட் ஈஸ்ட்வூட் என்ற நடிகர் எந்த நேரமும் ரிவால்வர் கொண்டு திரிகிறார்.

சிபில் ஷெப்பர் என்ற நடிகை தான் நித்திரைக்குப் போகும் பொழுது அருகில் துப்பாக்கி ஒன்றை வைத்திருப்பதாக கூறியிருக்கிறார்.

பொதுநிகழ்ச்சிகளுக்கு போகும் போது மெய்ப்பாதுகாவலர்கள் புடைசூழத்தான் ஹொலிவூட் நடிகர், நடிகையர் செல்கிறார்கள்.

நகைச்சுவை நடிகர் எடிமேர்பி நான்கு மெய்ப்பாதுகாவலர்களை வைத்திருக்கிறார்

சில நடிகர்களின் வீடுகளில் ''அவசரப்பொத்தான்கள்'' பொருத்தப் பட்டுள்ளன. அவற்றை அமர்த்தினால் போதும் ஜன்னல் கதவுகள் தானாகப் பூட்டப்பட்டுவிடும்.

றெமிங்டன் ஸ்டீல் என்ற படத்தில் நடித்த நடிகை ஸ்டெபானி சிம்பாலீஸ்ட்டுக்கு ஒரு ரசிகர் 212 கடிதங்கள் அனுப்பினர் ஒருவர். அவருக்கு நடிகையிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாக நீதிமன்றத்தின் நோட்டீஸ்தான் அவருக்குக் கிடைத்தது.

மிச்சிகனைச் சேர்ந்த மைக்கல் ஷீல்ட்ஸ் என்ற அந்த நபர் மீது நடிகைக்கு கடிதங்கள் அனுப்பியதாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

நடிகர் நடிகையருக்கு அனுப்பப்படும் பெரும்பாலான கடிதங்களில் ''உங்கள் இரகசிய அபிமானி''—என்றே ரசிகர்கள் கையெழுத்திடுகின்றனர்.

ஒரு நடிகருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் ''நீங்கள் ஓடலாம்; ஆனால் ஒளிக்கமுடியாது''— என்று ரசிகர் ஒருவர் எழுதியிருக்கிறார்.

உலகிலேயே தமிழகத்தில்தான சினிமாப் பைத்தியங்கள் அதிகம் என்று கூறப்பட்டுவந்தது.

ஆனால் அமெரிக்கா தமிழகத்தை வென்றுவிடும் போல் உள்ளது. ★

# சாப்ளின் வாழ்க்கை திரைப்படமாகிறது!

உலகின் தலைசிறந்த நகைச்சுவை நடிகர் சார்ளி சாப்ளினின் வாழ்க்கை வரலாறு படமாகிறது.

இதனைத் தயாரிக்கப்போகிறவர் பிரிட்டிஷ் டைரக்டர் சேர் ரிச்சர்ட் அட்டன்பரோ ஆவார்.

'காந்தி' படத்தைத் தயாரித்துப் புகழ் பெற்றவர் தான் சேர் அட்டன்பரோ.

சார்ளி சாப்ளினின் நூறாவது பிறந்த தினத்தை ஒட்டி அவரது வாழ்க்கையைப் படமாக்க எண்ணி சேர் அட்டன்பரோ, திருமதி சாப்ளினைச் சந்தித்தார்.

சாப்ளின் வாழ்க்கையை எவரும் படமாக்கக் கூடாது என்று திருமதி ஓனோ சாப்ளின் தடைவிதித்து இருந்தார். அந்தத் தடையை அவர் இப்போது நீக்கியுள்ளார்.

அனுமதி பெறுவதற்காக சாப்ளின் மனைவி ஓனோவையும் அவரது 9 பிள்ளைகளையும் அட்டன்பரோ சந்தித்துப்பேசினார். அதனைத்தொடர்ந்தே அனுமதி கிடைத்தது.

படத்தில் பூர்வாங்க வேலைகளை மேற்கொள்ள சேர் அட்டன்பரோ ஹொலிவூட் செல்லவிருக்கிறார்.


ஏழரைக் கோடி டாலர் செலவில் (350 கோடி ரூபா) இப்படம் தயாரிக்கப்படவுள்ளது.

சாப்ளினை, அவரது இறுதிக் காலத்தில்தான் சேர் அட்டன்பரோவுக்குத் தெரியும்.

1889 ஏப்ரலில் சாப்ளின் லண்டனில் பிறந்தார். எட்டு வயதில் தொழில் முறை நடனக் கலைஞராக அவர் அறிமுகமானார். தனது 21 ஆவது வயதில் (1910) அமெரிக்காவில் குடியேறினார் ★

வெள்ளித்திரையில்


"குழல் இனிது யாழ் இனிதென்பர் தம்மக்கள் மழலைச் சொல் கேளாதோர்"



உங்கள் அன்புச் செல்வங்களின் வளமான எதிர்காலத்துக்கு என்றென்றும் உற்றதுணை

ஷப்ரு

ஷப்ருவின் முதலீட்டுத் திட்டங்களில் சேர்ந்து கொள்வதன்மூலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி வளமாக்குங்கள்.

ஷப்ரு உங்கள் பணத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் கவர்ச்சிகரமான வட்டியையும் வழங்கித் திறமையான சேவையைப் புரிவதன்மூலம் உங்கள் நண்பனுகவும் திகழ்கின்றது.

ஷப்ருவின் அபரிமிதமான வளர்ச்சியும் சிறந்த முகாமைத்துவமும் உங்கள் முதலீடுகளுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

எமது பிரதான நிதிச் சேவைகள்
★ சகலவிதமான வாகனங்களுக்குமான தவணைக் கொள்வனவு நிதி
★ வாகனங்களைக் குத்தகைக்கு விடல்
★ வர்த்தக மற்றும் இறக்குமதிக் கடன்கள்
★ அடைமானக் கடன்கள்
★ அபிவிருத்தி நிதியிடல்

CERTIFICATE OF DEPOSIT வைப்புச் சான்றிதழ்

| Period-Months காலம் - மாதம் | Cost of Certificate சான்றிதழின் பெறுமதி | | | | Rate வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|
| 06 | 4,588/- | 9,175/- | 45,872/- | 91,744/- | 18% |
| 12 | 4,133/- | 8,265/- | 41,323/- | 82,645/- | 21% |
| 24 | 3,379/- | 6,757/- | 33,784/- | 67,568/- | 24% |
| Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி | 5,000/- | 10,000/- | 50,000/- | 100,000/- | ● |

நிலையான வைப்பு TERM DEPOSIT

| Period – Months காலம் – மாதம் | Monthly மாதாந்தம் | Maturity முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | - | •7% |
| 06 | 15% | 18% |
| 12 | 19% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1986/87 | 1987/88 | 1988/89 |
|---|---|---|---|
| மூலதனமும் ஒதுக்கமும் | 11,342,354 | 14,354,927 | 23,306,911 |
| வைப்புகள் | 100,577,492 | 110,897,760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கு செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,830,012 | 3,148,350 | 2,867,657 |
| பகிரப்பட்ட இலாபம் | | 1,775,100 | 1,508,110 |

பணிப்பாளர் சபை

திரு எல். பி. ச. கருணரட்ன,
சட்டத்தரணி, சமாதான, நீதவான், தலைவர்
திரு எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ண.
A.I.B. (Lond.), பொதுமுகாமையாளர்.
திரு. ஏ. எம். எச். பாரி, B.A. (Hons.)
திருமதி. ஆர். பாலசுப்பிரமணியம்

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனம்

SHABRA
ஷப்ரு யுனிக்கோ பினுன்ஸ் லிமிட்.
61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு - 4.
தொலைபேசி - 589310/500576

D. HEYZER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சி பலன்கள்

**சென்ற 19ஆம் திகதி சொந்த வீடு சென்ற சனி மாற்றத்திற்குரிய பலன்கள் நட்சத்திர வாரியாக இங்கு தரப்படுகிறது.**




சித்திரை 3 ஆம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3 ஆம் பாதம் முடிய.

**சித்திரை:** பெருமை, புகழ் இவர்களைத் தேடி வரும். நண்பர்கள் இவர்களை நாடி வருவார்கள். தெய்வீகமான காரியங்களில் பங்குகொள்வார்கள். மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டுவர். கலைத்துறையினருக்கு வீண் விரயம் ஏற்பட இடமுண்டு; அலைச்சலும் உண்டு. வர்த்தகர்களுக்கு நல்ல பலன் உண்டு. விவசாயம் நோய்களால் பாதிக்கப்படும் உத்தியோகர்த்தர்களுக்கு மறைமுக எதிர்ப்பு உண்டு.

**சுவாதி:** தொழில் பெருமையுடன் நடைபெறும். நிதி நிலைமை நன்றாக இருக்கும். தெய்வீக காரியங்களில் அக்கறை கூடும். வர்த்தகர்களுக்கு நல்ல காலம்; ஆதாயமுண்டு. கலைத்துறையினருக்கு முன்னேற்றமான காலம். உத்தியோகர்த்தர்களுக்கு அனுகூலமான காலம் ஆரம்பமாகும். அரசியல்வாதிகள் சற்று ஒதுங்கி மௌனமாக இருப்பது நல்லது. நிலையான சொத்துக்கள் சம்பந்தமாக சிறு சச்சரவுகள் ஏற்பட்டு நன்மையில் முடியும்.

**விசாகம்:** முயற்சி எடுக்கும் காரியங்களில் லாபம் கிடைக்கும். வழக்குகள் அனுகூலமாக இருக்கும். பணியாட்களின் தொல்லை உண்டு. குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் உண்டு. பொதுவில் நன்மை பயக்கக்கூடிய காலம். மாணவர்கள் கல்வியில் சிறப்பாகச் செயல்படுவார்கள். வர்த்தகர்களுக்கு அனுகூலமான, லாபகரமான காலம். பண விஷயம் நன்றாக இருந்தாலும் பெரும் செலவுகள் ஏற்படும். அதிகவேலை, அலைச்சல், தூக்கமின்மை போன்றவை உண்டு. கலைத்துறையினர் பொதுமக்களின் அபிமானத்தைப் பெறுவர்.




விசாகம் 4 ஆம் பாதம் முதல் அனுஷம், கேட்டை

**விசாகம்:** மனதில் தைரியமும் தெம்பும் உண்டாகும். வழக்குகள் அனுகூலமடையும். மாணவர்களுக்கு முன்னேற்றமான காலம். வர்த்தகத் தொழில் நன்றாக நடைபெறும். கலைத்துயைினர் முன்னேற்றம் காண்பர். விவசாயிகளுக்கு தொழில் முன்னேற்றம் உண்டு. உத்தியோகர்த்தர்களுக்குத் தொல்லைகள் இருக்கா; நன்மை விளையும்.

**அனுஷம்:** பெண்களுக்குக் கர்ப்ப சம்பந்தமான குறைபாடுகள் ஏற்படச்செய்யும்; பின்னர் நலமாகிவிடும். புத்திரபாக்கியம் இல்லாதவருக்கு அது கிடைக்கும். தாமதமாகும் திருமணம் விரைவில் நிறைவேறும் யோகம் உண்டு. மாணவருக்கு அனுகூலமான காலம். வர்த்தகர்களுக்கு சாதகமான நிலை தென்படுகிறது. கலைத்துறையினர் ஏற்றத்தாழ்வுக்குள்ளாவர். விவசாயிகள் வெற்றி காண்பர். கணவன் — மனைவி உறவு பலப்படும்.

**கேட்டை:** வர்த்தகர்கள் புத்திசாதுரியமாக நடந்து கொண்டு நெருக்கடியைச் சமாளிப்பர். கலைத்துறையினருக்கு கடினமான பணிகள் உண்டு. குடும்பத்தொல்லைகளுக்கு இடமுண்டு. மாணவர்கள் கல்வித்துறையில் பிரகாசிப்பர். நிதான பேச்சுத் தேவைப்படும் காலம் இது.




மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம் முடிய

**மூலம்:** தொழிலாளர்களுக்கு செய் தொழிலில் உழைப்பால் உயர்வு, கௌரவம் ஏற்படும். உடனிருந்தே ஏமாற்றப்படும் சூழ்நிலை உள்ளதால் பிறரை எதிலும் நம்புதல் கூடாது. குடும்பப் பெண்களுக்கு குடும்பக் கவலை, புத்திரர்களைப்பற்றிய எண்ணம் உண்டாகும்.

**பூராடம்:** எப்படிப்பட்ட எதிர்ப்புக்களையும் வெற்றி கொள்வர். வழக்குகள் அனுகூலமாக மாறும். மனைவியின் உடல்நலம் பாதிக்கும். வர்த்தகர்கள் நல்ல முன்னேற்றம் அடைவர். கலைத்துறையினருக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. விவசாயிகளின் உற்பத்தி நல்ல விலைக்குப் போகும். கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். கடின சித்தம் தேவை. அமைதியும் பெருந்தன்மையும் ஏற்படும்.

**உத்திராடம்:** மனதில் ஒருவித சங்கடம் குறைந்தது போன்று நிம்மதி பிறக்கும். உத்தியோகத்தர்களுக்கு அதிருப்தியான சூழ்நிலை காணப்படுகிறது. மாணவர் கல்வியில் அதிகம் சிறப்படைவர். தேக நலன் திருப்தியாக இருக்கும். சிலருக்கு தீராத நோய்கள் ஏற்பட்டுத் தொல்லை கொடுக்கும். தாமதமாகப் பதவி உயர்வு கிடைக்கும்.




உத்திராடம் 2 ஆம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2 ஆம் பாதம் முடிய

**உத்திராடம்:** குடும்பத்தில் ஏதாகிலும் சண்டை சச்சரவுகள் இருந்துகொண்டே இருக்கும். பூமியில் எதிர்பாராத லாபங்கள் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு அனுகூலமான உத்தரவுகள் வரும். விவசாயிகள் நல்ல பலன் பெறுவர். கலைத்துறையினருக்கு மனதில் சந்தோஷமும் அரசு உதவியும் ஏற்படும்,

**திருவோணம்:** மனதில் தைரியமும் தெம்பும் ஏற்படும். முயற்சித்த காரியங்கள் அனைத்தும் வெற்றி காணும். பணப்புழக்கம் பரவாயில்லை. மாணவருக்குக் கல்வியில் நல்ல முன்னேற்றம் உண்டு. உத்தியோகத்தருக்கு வருவாய் அதிகரிக்கும். உஷ்ண சம்பந்தமான வியாதிகள் தோன்றும். உற்றார், உறவினரால் சிறு தொல்லைகள் ஏற்படும். வர்த்தகருக்கு அமோக லாபம் ஏற்படும். கணவன் - மனைவி உறவு சீராக இருக்காது.

**அவிட்டம்:** பெண்களுக்குக் கர்ப்பச் சிதைவுக்கு இடமுண்டு. தொழில் நுட்பக் கல்வியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அதிஷ்டமான காலம். வர்த்தகத்தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கு முன்னேற்றமான காலம். சுபகாரியம் குடும்பத்தில் இடம் பெறும். முயற்சி எடுக்கும் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி காணலாம். தொழில்துறையில் உள்ளவர்கள் அமோகமாகச் சம்பாதிப்பர்.




அவிட்டம் 3 ஆம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3 ஆம் பாதம் முடிய

**அவிட்டம்:** மாணவர் அமோக உற்சாகத்துடன் படிப்பில் ஈடுபடுவர். கணவன் – மனைவி அன்னியோன்னியம் நிறைந்து காணப்படும். ஒரு சிலருக்கு திருமணயோகம் உண்டு. மற்றும் சிலருக்குப் பூமி, வீடு போன்ற சொத்துக்கள் வாங்கும் யோகம் உள்ளது. உத்தியோகத்தர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**சதயம்;** வர்த்தகத்தில் அமோகலாபம் கிடைக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் நாட்டம் உண்டு. குடும்பத்தில் சிறு'சச்சரவுகள் தோன்றி மறையும். இதனால் மனக் குழப்பமும் கிலேசமும் உண்டாகும். நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது. எதிர்ப்புக்கள் குறையும். மாணவர்களுக்கு எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். விவசாயிகளுக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். கலைஞர்களுக்கு யோகமான காலமாகும். கௌரவம், செல்வாக்கு சிறப்பாயிருக்கும் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறும் வாய்ப்புள்ளது.

**பூரட்டாதி;** மாணவருக்குக் கல்வியில் நல்ல ஆர்வம் உண்டு. வர்த்தகத்தில் ஈடுபட்டோருக்கு அனுகூலமான காலம். நண்பர் அல்லது மனைவியால் பொருள் வசதி உண்டாகும். கலைஞர்களுக்குப் பேரும் புகழும் ஏற்படும்.




பூரட்டாதி 4 ஆம் பாதம் முதல் உத்திரட்டாதி ரேவதி

**பூரட்டாதி:** புதையல் போன்று திடீர் தனலாபத்துக்கு இடமுண்டு. மாணவருக்கு முன்னேற்றமான காலம். உத்தியோகத்தர்கள் சற்று எச்சரிக்கையுடன் பணிபுரிய வேண்டும். எதையும் பேச்சுக்கள் மூலம் தைரியமாகச் சமாளித்து விடுவார்கள். வழக்குகள் அனுகூலமாக முடிவடையும். மாணவர் கல்வியில் நாட்டம் குறைந்து வேறு துறைகளில் அக்கறை காட்டுவர். பத்திரிகை, காகிதம் போன்ற துறையில் உள்ளவர்களுக்குப் பெரும் லாபம் கிட்டும். கலைஞர்களுக்கு நல்ல யோகமான காலம்.

**உத்திரட்டாதி:** மனதில் தைரியமும் தெம்பும் உண்டாகும். முயற்சி வெற்றியடையும். வழக்கு அனுகூலமாக முடிவடையும். புத்திரர்களால் எதிர்பாராத பதவிகள் கிட்டும். வயதானவர்களுக்கு இருதய சம்பந்தமான நோய் ஏற்பட இடமுண்டு. கலைஞர்களுக்குச் சுமாரான காலம். மாணவருக்கு நன்மை தரும் பலன் உண்டு. சிலருக்கு வயிறு சம்பந்தமான ரோகங்கள் ஏற்படும்.

**ரேவதி:** புத்திரர்களாலும் மூதாதையர்களாலும் நன்மைகள் உண்டாகும். மாணவர்களுக்குக் கல்வியில் சிறப்பான காலமாகும். கலைஞர்கள் பெரும் பயனடைவர். உடல் சோர்வு மறைந்து உடல் நலம் மேன்மையடையும். ★

## சிகரெட்

அழகான
வெள்ளை உடை
அணிந்த
விதவைப் பெண்ணே
நீ கற்பில்
சிறந்தவள்தான்.
ஏனெனில்
உன்னைத் தீண்டுவோர்
தங்கள்
உயிரையே
இழக்கின்றனரே!

- சுபா

# தேவனின் முப்பெரும் சோதனைகள்
## தவக்கால சிந்தனைகள் ஆகின்றன

இப்போது கிறிஸ்தவர்களின் வழிபாட்டு ஆண்டில் தவக்காலம் ஆரம்பமாகியுள்ளது.

தங்களையே ஒறுத்து, ஒடுக்கி கிறிஸ்துவின் பாடுகள், மரணம் இவைகளை தியானித்து உயிர்ப்பு விழாவுக்கு ஆயத்தமாக மனமாற்றம் பெறும் காலம் இதுவே.

மனமாற்றம் என்பது வாழ்க்கையில் ஒரேமுறையில் நடந்த முற்றுப் பெறும் நிகழ்ச்சியன்று. அது ஒரு தொடர் நிகழ்ச்சி.

அன்றாட நிகழ்ச்சி அடிப்படை மனமாற்றம் என்பது தன்னலத்திலிருந்து பாவவிடுதலை பெற்று கிறிஸ்துவுடன் இணைந்து இறைத் தந்தைக்காக தூய ஆவியானவரில் வாழ்வதாகும்.

ஞானஸ்ஞானத்தில் மலர்ந்த கிறிஸ்தவ வாழ்வு படிப்படியாக முழு வளர்ச்சியடைதல் வேண்டும். ஆனால் இறைவனிடமிருந்து வராமல் இவ்வுலகிலிருந்து உதயமாகின்ற ஊணியல்பின் இச்சை, கண்களின் இச்சை செல்வச் செருக்கு(1 அரு 2:16) ஆகிய முப்பெரும் தீய சக்திகளின் வழியாக சாத்தான் நம்மில் உருவாகும் இறைவாழ்வை கருவழிக்க போர் தொடுக்கின்றான்.

சாத்தானில் இத்தீய சக்திகளை முறியடிக்க இறைவாழ்வில் முதிர்ச்சியடைய நமக்கு வழிகாட்டுகின்றன கிறிஸ்துவின் முப்பெரும் சோதனைகள்.

**முதலாவது சோதனை**

முதலாவது சோதனை 'அப்பமாக மாறும்படி இந்தக் கல்லுக்கு சொல்லும்'' (லூக்காஸ் 4:3 – 4) அதை எடுத்து உனது பசியைப் போக்கிக் கொள்ளலாம் என்றது.

ஊணியல்பின் இச்சைகளைப் பூர்த்திசெய்ய நம்மை இடைவிடாது தூண்டிக்கொண்டே இருக்கின்றான் சாத்தான்.

உண்டு, குடித்து உல்லாசமாக வாழவேண்டுமென்பதே இன்றைய மனிதனின் நாட்டமும் நப்பாசையுமாகும். மனிதன் உணவினால் மட்டும் உயிர்வாழமுடியாது, இறைவனின் சொல்லால் உயிர்வாழவேண்டும் ஏனெனில் இறைவனின் வார்த்தை உயிரும் ஆவியுமாகும். (அரு6:63)

**இரண்டாவது சோதனை**

இரண்டாவது சோதனை சாத்தான் அவரை அழைத்துச் சென்று உலக அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப் பொழுதில் அவருக்குக் காட்டி என் விருப்பம்போல் எவருக்கும் இவற்றைக் கொடுக்க முடியும் ஆனால் தன்னை (சாத்தானை) தெண்டனிட்டு வணங்கும்படி கேட்டது.

(லூக் 4:6–7)

அதற்கு யேசு ''உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவரை மட்டுமே ஆராதிப்பாயாக எனப் பதிலடி கொடுத்தார் (லூக்4:8)

செல்வத்தில் பற்றுக்கொள்வது, செருக்குக்கொள்வது— இன்றைய மனிதனின் மாபெரும் சோதனை.

குறுக்கு வழியில் சென்று கோடிசம்பாதித்து கொள்ளை இன்பம் அனுபவித்துத் துடிக்கின்றான்.

எவனும் கடவுளுக்கும் செல்வத்திற்கும் ஊழியம் செய்ய இயலாது (மத்6: 24)

யேசுவின் அரசு இவ்வுலகத்தை சார்ந்ததல்ல (அரு18:37) இயேசு தனது மரணத்தினாலும், உயிர்ப்பினாலும் அரசராக வேண்டுமென்பதே இறைத்தந்தை வகுத்த வழி.

தன் தந்தை காட்டிய வழியில்செல்லாது சாத்தான்காட்டிய குறுக்கு வழியில் செல்ல இயேசு இணங்கவில்லை அழி

**- சகோதரர் அ. சகாயநாதன் -**

வுக்குச் செல்லும் வழி அகன்றது. வாழ்வுக்கு வழி குறுகியது (மத் 7:13-14)

**மூன்றாவது சோதனை**

மூன்றாவது சோதனை அலகை அவரை அழைத்துச் சென்று ஜெருசலேம் கோயில்



முகட்டில் நிறுத்தி நீர் கடவுளின் மகனானால் இங்கிருந்து கீழே குதியும். உம்மைக் காக்கும்படி தம் தூதர்களுக்குக் கட்டளை இடுவார். என்றது (லூக் 4:9–13)

அதற்கு யேசு உன் கடவுளாகிய ஆண்டவரை சோதியாதே என்றார். (4:12-13)

கண்களின் இச்சைக் கவர்ந்திழுக்க வியத்தகு செயல்களைச் செய்யவேண்டுமென்பது இன்றைய தனி மனிதனுடைய, வல்லரசுகளுடைய சோதனை.

தனது மகிமைக்காக கடவுளை ஒரு கருவியாக பயன்படுத்தாதுகடவுளின் மகிமைக்காக தன்னையே ஒரு கருவியாக்குகிறார் யேசு.

இன்றைய மனிதன் தன் அறிவியல் படைப்புகளைத் தனது மகிமையைப் பறைசாற்றப் பயன்படுத்துகின்றான் விளைவு என்ன?

இன்றைய மனிதன் தனது செயலாலே செத்துப் கொண்டிருக்கின்றான் அணு ஆயுதப் போர்க் கருவிகள் இதற்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டு.

அன்று கிறிஸ்துவுக்கு ஏற்பட்ட சோதனை அன்றோடு முடிந்துவிட்ட தொன்று அல்ல.

இன்றும் தொடர்கின்ற தொடர் கதை.

இன்றும் மனிதர்களாகிய எமக்கு இப்படியான சோதனைகள் வேதனையாக வருகின்றபோது யேசுவின்மேல் கொண்ட ஆழமான விசுவாசத்தால் அதை சாதனையாக மாற்றி வாழ்வோம்; வாழவிடுவோம். ★

# உள்ளம் பரிசுத்தமடைவதற்கு உதவும் நோன்புப் பெருநாள்

ஒரு நாளைக்கு 14 மணி நேரம் 30 நாட்களுக்கு 420 மணிநேரம் பசி பொறுத்திருப்பதுதான் நோன்பு என்று பலர் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

நோன்பு என்றால் பகல் பொழுதில் வயிற்றைக் காயப்போடுவது, கொலைப்பட்டினி கிடப்பது என்பது அவர்களுடைய கருத்து.

உண்மையில் நோன்பு என்பது வெறும் பட்டினியா......? இல்லை.

பட்டினிதான் நோன்பு என்றால் எத்தியோப்பிய மக்களுக்கு எல்லா நாளும் நோன்புதான்... ! உணவுப் பஞ்சத்தின் உக்கிரப்பிடியில் சிக்கித் தவிக்கும் அந்த ஆபிரிக்க தேசத்தையே நோன்பு தேசம் என்று விடலாம்.

ஆனால் நோன்பு பட்டினி அல்லவே ! பசி பொறுத்திருப்பது நோன்பு என்று சொன்னால் அது பாதகமில்லை.

குழப்பமாக இருக்கிறதே ..! கொஞ்சம் முன்னால்தான் பட்டினி நோன்பு அல்ல என்றீர்கள். இப்போது பசி பொறுத்திருப்பது நோன்பு என்றீர்கள். பசி பொறுத்திருப்பது பட்டினி அல்லாமல் வேறு என்ன என்கிறீர்களா?

நன்றாகக் கவனியுங்கள்.

பட்டினிக்கும் பசிபொறுத்திருப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. குழாய்த் தண்ணீரும் கிணற்றுத் தண்ணீரும் போல.

தேடித் தேடி அலைந்தும் உணவு எங்குமே கிடைக்காத பட்சத்தில் 'விதியே' என்று குடல் கொழுந்து விட்டெரியக் கிடப்பது 'பட்டினி குடங்கள்' அணிவகுத்துக் கிடந்தும் தண்ணீர் வராத நீர்க்குழாய் போல.

பசி பொறுத்திருப்பது அப்படி அல்ல. தேடத் தேவையில்லை. எதிரிலேயே கைக்கெட்டும் தொலைவில் உணவு இருக்கிறது..! அதனை உண்டு ஏப்பம் விடும் அளவுக்குப் பசியும் இருக்கிறது.

**- ரசூல்கான் -**

ஆனால் உண்பதில்லை. டசியை தாஜா செய்து கொண்டு பொறுத்திருப்பது, அதுதான் கிணறு நிறையத் தண்ணீர் கிடக்கிறது. குடங்களும் காலியாக அணிவகுத்துக் கிடக்கின்றன. ஆனாலும் குடத்தைத்தண்ணீரோ. தண்ணீரைக் குடமோ நெருங்குவதில்லை. குறிப்பிட்ட நேரம் வரும்வரை பொறுத்திருக்கின்றது.

பசி பொறுத்திருப்பதுதான் நோன்பு என்று தாராளமாகச் சொல்லலாம். ஏனென்றால், ஸஹர் வேளை தொடங்கி இஃப்தார் வேளை வரை நோன்பாளிகள் பொறுத்திருப்பது பசி மட்டுமல்ல, பல பசிகள்.

ஆக, அதிகாலையில் ஸஹர் வைப்பதில் தொடங்கி மாலையில் இஃப்தாருக்குள் இவர்களின் நோன்பு பலமுறை முறித்து, இவர்களின் பலவகைப் பசிகள்தான் மேலோங்கி நிற்கிறது.

ஆகவேதான் எல்லாவகைப் பசிகளையும் பொறுத்திருப்பதுதான் நோன்பு என்கிறோம். ★

# சொற்சிலம்பம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | | X | |
| 5 | | X | | X | X | 6 | |
| | X | 7 | | | | | X |
| 8 | | | | X | X | 9 | |
| | X | | X | 10 | | | X |
| X | 11 | | | | X | X | 12 |
| 13 | | | X | 14 | | 15 | |
| 16 | | X | 17 | | X | | X |

இங்கே வெட்டுக

சொற்சிலம்பம் இல: 111
சஞ்சீவி,
292/ 2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................
விலாசம் ..............................................
..............................................

## போட்டி இல: 111

**இடமிருந்து வலம்:**

1. கற்பனையில் கட்டப்படுவது 5. துப்பரவு செய் 6. கொடு 7. நாடகமேடை 8. ஊழல்களுக்குக் காரணமானது இது 9. உலகம் 10. துன்பம் 11. காற்று 13. ஆழமான கிடங்கு 14. புத்தமதத்தை அறிமுகப்படுத்தியவர் 16. மலை உருவாக உதவுகிறது 17. சனி.

**மேலிருந்து கீழ்:**

1. தேன் நிரம்பிய மலர் 2. தேன் கூட்டுக்கு முதல் எழுத்து இல்லை 3. கோயிலுக்குக் கம்பீரம் தருவது 4. தடி (கட்டத்தினுள் 4 இருப்பதாக எடுத்துக் கொள்க) 6. கடல் 7. அறியாமைப் பெருக்கம் 10. சந்திரன் 11. இரவென்றால் இதுவும் இருக்கும் 12. அரசன் 13. கடைசிச் சொல் சேர்த்தால் மயில் போடும் சத்தம் 15. வில்.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு திகதி: 11 - 04 - 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்க்கும் வாசிப்புப் பழக்கம்

## [ஆ]சிரியர் - மாணவர் மத்தியில் அருகி வருகிறது!

76 ஆண்டுகால சரித்திரத்தைக் கொண்ட ஒரு பாடசாலையில் தொடர்ச்சியாக 40 ஆண்டுகாலம் ஆசிரியர் பணிபுரிந்து ஒருவர் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

அவர்தான் திரு. எஸ். இராசதுரை.

1930 இல் பிறந்த இவர் 1950 இல் யாழ்ப்பாணம் வைத்திஸ்வரா வித்தியாலயத்தில் ஆசிரியராகச் சேர்ந்தார். இறுதியில் உபஅதிபராகப் பணிபுரிந்து 1990 ஆம் ஆண்டு பெப்ரவரியில் திரு. இராசதுரை ஓய்வு பெற்றார்.

ஒரே பாடசாலையில் ஏழு அதிபர்களின் கீழ் பணி புரியும் வாய்ப்பைப் பெற்ற திரு. இராசதுரை, கல்வி வளர்ச்சி பற்றிய தனது கருத்துக்களை சஞ்சீவி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

☐ இரண்டு தலைமுறை[களு]க்கு கற்பித்தல் தொழி[லி]ல் ஈடுபட்டிருக்கிறீர்கள். தலைமுறை இடைவெளி (generation gap) காரண[மாக] ஏற்படும் முரண்பாடு பற்றி என்ன கூறுகிறீர்கள்?

— இன்றைய தலைமுறையினரிடையே நிலவும் அமைதியின்மை தீர்க்கப்பட வேண்டும். அதற்கான காரணங்கள் களையப்பட வேண்டும்.

இன்றைய கல்வியியலாளர்கள் அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாக, 'அரசனின் புதிய ஆடை' மாதிரி செயல்படுவதும் இன்றைய அமைதியின்மைக்கு ஒரு காரணமாகும்.

☐ பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகள் பற்றி.........

— அன்று ஆசிரியர்கள் விருப்புடன் கற்பித்தலில் ஈடுபட்டனர். ஒரு பாடசாலைக்குத் தேவையான அனைத்தையும் தேடிக்கொள்ளும் அதிகாரம் அன்று அதிபருக்கு இருந்தது.

இன்றைய அதிபர்களின் பணி மிகமிகக் கடினமானது. பல வழிகளிலும் கல்வித் திணைக்களத்தால் அதிபர்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர். சுதந்திரமாக அதிபர் செயற்பட முடியாதுள்ளது.

பல காரணிகளால் ஆசிரியர்களும் ஏனோதானோ என்றுதான் செயல்படுகின்றனர். சம்பளம் அதிகரிக்கப்பட்டும் ஆசிரியர்கள் கடன் பட்டே வாழ்க்கையை நடத்த வேண்டியுள்ளது ஆசிரிய[ர்கள்] திருப்தியுடன் வாழ சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்.

☐ ஆசிரியத் தொழிலில் ஏன் சேர்ந்தேன் என்று என்றாவது நீங்கள் கவலைப்பட்டது உண்டா?

— மாணவப்பருவம் தான் ஆனந்தமயமான காலம் என்று சொல்வார்கள். என்னைப் பொறுத்தவரையில் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்ட காலமும் ஆனந்தமயமானது ஒன்றே. மாணவனாக இருக்கும் உணர்வு இத்தொழிலில் இருக்கிறது. ஆகவே ஆசிரியர் தொழிலில் சேர்ந்ததற்காக நான் கவலைப்படவில்லை.

☐ யாழ்ப்பாணப் பகுதியில் டியூட்டரி கல்வி முறையைப் புகுத்திய முன்னோடிகளில் ஒருவர் என்ற முறையில் அது பற்றிய உங்கள் கருத்துக்களைக் கூற முடியுமா?

— 1958 காலப்பகுதியில் தட்டெழுத்து சுருக்கெழுத்து



இராசதுரை

ஆகியவற்றைப் போதிக்கத்தான் 'அலெக்ஸாண்டிரா டியூட்டரி' என்ற பெயரில் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

அரசாங்க சேவைக்கு சுருக்கெழுத்து தட்டச்சு, வர்த்தகக் கணக்கியல் பாடங்கள் கற்றவர்கள் தேவைப்பட்டனர்.

அதனால் அக்காலப்பகுதியில் வர்த்தக-கணக்கியல் கல்லூரி என்ற பெயரில் என்னால் ஒரு டியூட்டரி ஆரம்பிக்கப்பட்டது.

விஞ்ஞானம் மற்றும் கலைப் பாடங்களுக்கு என்று டியூட்டரிகள் அப்போது இருக்கவில்லை.

அக்காலத்தில் சேவைமனப்பான்மையுடன் டியூட்டரிகள் தொடங்கப்பட்டன. பல மாணவர் கட்டணமின்றிப் படித்தனர்.

இன்று டியூட்டரிகள் அதிகமாக இயங்குகின்றன. இதற்கு தரப்படுத்தல் முறையும் பட்டதாரிகள் மத்தியில் நிலவும் வேலையின்மையுமே காரணமாக அமைந்துள்ளன.

☐ தற்கால மாணவருக்கும் ஆசிரியருக்கும் இன்று என்ன தேவைப்படுகிறது?

—எனது 40 ஆண்டுகால ஆசிரியப்பணியில் நான் மாணவர்களிடையே அவதானித்த முக்கிய குறைபாடு, வாசிப்புப் பழக்கம் அருகி வருவதே ஆகும்.

இது மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்றாகக் கருதப்பட வேண்டியுள்ளது.

மாணவரிடையே வாசிப்புப் பழக்கத்தை வளர்க்க அன்று ஆசிரியர்கள் தூண்டுகோலாக இருந்தார்கள். ஆசிரியர்களும் நிறைய வாசித்துத் தங்கள் அறிவை வளர்த்துக் கொண்டார்கள்.

இன்று தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களில் பெரும்பாலோர் தங்கள் பாடவிடயங்களிலே நிறைந்த அறிவு கொண்டவர்களாக இல்லை. இது எனது அனுபவத்தில் கண்ட உண்மை.

அறிவை வளர்க்கவும் இன்றைய ஆசிரியர்கள் முயற்சிப்பதும் இல்லை.

இன்று தமிழ்மொழியில் நிறையப் பாடப்புத்தகங்கள் வெளிவருகின்றன. அவற்றை ஆசிரிய சமுதாயம் சரியாகப் பயன்படுத்துவதாகவும் தெரியவில்லை.

☐ ஆசிரியராக நியமனம் பெற ஆயிரக்கணக்கானோர் இன்று முண்டியடித்துக் கொண்டு நிற்கின்றனரே! இது பற்றி உங்கள் கருத்து...

— இன்று ஆசிரியராக வர விரும்புபவர்களில் பெரும்பாலோர் ஆசிரியர் தொழிலில் கொண்ட பற்றினால் வரவில்லை. வேறு தொழில் வாய்ப்பு இல்லாததனால் தான் ஆசிரியர் தொழிலை அவர்கள் நாடுகின்றனர்.

எப்படியாயினும் இவர்கள் ஆசிரியர் தொழில் கிடைத்ததும் அதன் மீதான பற்றுதலை அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்; தொழிலின் கௌரவத்தைப் பேண வேண்டும். தாங்களும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு, மாணவரையும் தூண்டுவதில் புதிய ஆசிரியர்கள் ஈடுபட வேண்டும்.

☐ மாணவருக்கு நீங்கள் கூறும் முக்கிய செய்தி என்ன?

— நிறைய வாசியுங்கள். மகிழ்ச்சியாக இருங்கள். உலக அறிவைப் பெருக்குங்கள். விளையாட்டு மைதானத்தில் நிறைய நேரத்தைச் செலவிடுங்கள். ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றைக் கற்றுக் கொள்ளச் சிறந்த இடம் விளையாட்டு மைதானமாகும். ★

- பேட்டி: கே. செல்வதாஸன் -

# கோமாரி நோயைத் தடுக்க புதிய மருந்து!

கால்நடைகளுக்குக் 'கோமாரி' நோய் வராமல் தடுப்பதற்குத் திறன்மிக்க புதிய 'தடுப்பு மருந்து' (Vaccine) ஒன்றை அமெரிக்காவில் டப்ட்ஸ் பல்கலைக் கழகத்தின் கால்நடை மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சிப் பிரிவு கண்டுபிடித்துள்ளது.

டாக்டர் ஜெப்ரி மாரினர் என்பவர் இதனைக் கண்டு பிடித்தார்.

இந்தத் தடுப்பு மருந்து வெப்பத்தைத் தாக்குப்பிடிக்கக் கூடியதாகும்.

ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வரும் தடுப்பு மருந்தானது, வெப்பத்திற்குத் தாக்குப்பிடிக்காதது. இந்த மருந்தைக் குளிர்சாதனப்பெட்டியில் வைத்துப் பாதுகாத்தால் தான் பயன் கொடுக்கும்.

ஆனால் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய தடுப்பு மருந்தைக் குளிர்சாதனப் பெட்டியில் இருந்து வெளியே எடுக்கப்பட்ட ஏழு மாதங்களுக்குப் பிறகும் கூட பயன்படுத்தலாம்.

ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபனம் சர்வதேச அளவில் 'கோமாரி நோய்த் தடுப்பு இயக்கம்' ஒன்றை 1962 முதல் 1976 வரை வெற்றிகரமாக நடத்தியது. அப்போது கோமாரி நோய் அறவே ஒழிக்கப்பட்டுவிடும் என்றுதான் தோன்றியது.

எனினும், குறிப்பிட்ட சில இடங்களில் இது மீண்டும் மீண்டும் தலைகாட்டியது.

ஆபிரிக்கா போன்ற கடும் வெப்பமண்டலப் பகுதிகளில் போதுமான அளவுக்குக் குளிர்சாதன வசதி இல்லாததால் தற்போதுள்ள கோமாரி தடுப்பு ஊசியை திறன்மிக்க வழியில் பயன்படுத்த முடியாமல் போய்விட்டது என்று கண்டறியப்பட்டுள்ளது.

இதனை அடுத்தே புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இது மலிவானது. பயன்படுத்துவதற்கும் எளிதானது.


ஆபிரிக்காவின் தட்ப, வெட்ப நிலைக்கும் மட்டும் இது ஏற்றது என்று சொல்லி விடமுடியாது; ஆசிய நாடுகளுக்கும் இது உகந்ததாகும்.

சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க நிறுவனம், இந்தத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கியுள்ளது.

இத்தடுப்பு மருந்து பெருமளவில் தயாரிக்கப்படவுள்ளது. ★

காயகம்


# உங்கள் உடலில் இவ்வித தடங்களோ கட்டிகளோ உள்ளனவா? அவை குஷ்டரோகத்தின் அறிகுறியாக இருக்கலாம்.



குஷ்டரோகத்திற்குச் சிகிச்சை பெறாமல் அலட்சியமாக இருந்தால் அல்லது தவறான சிகிச்சையை அளித்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படக்கூடும்.

நோயின் அறிகுறிகளை வேளைக்கே இனங்கண்டு தாமதிக்காமல் சரியான சிகிச்சையைப் பெறத் தொடங்கினால் எவ்வித உடல் விகாரங்களும் ஏற்படாமல் குஷ்டரோகத்தை முற்றாகக் குணப்படுத்திவிடலாம். அலட்சியமாக இருந்தால் ....... சிகிச்சையைத் தாமதித்தால் ....... நிலைமை மோசமாகிவிடும். உடலுறுப்புகள் பழைய நிலைக்கு மீட்க முடியாதவாறு விகாரப்பட்டுவிடும்.

### குஷ்டரோகம் யாருக்கும் ஏற்படலாம்.

குஷ்டரோகத்திற்கு ஏழைகள்-செல்வர் என்றோ ஆண்-பெண்-குழந்தை என்றோ பேதமில்லை. இந்த நோய் எவருக்கும் ஏற்படலாம்.

தாமதிக்காதீர்கள். உங்கள் மேனியில் உணர்வற்ற தடமோ கட்டியோ காணப்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடுங்கள். நீங்கள் கவனயீனமாக இருந்தால் உங்கள் வாழ்வே பாழாகிவிடும் வகையில் உடலுறுப்புகள் விகாரப்படுவதைத் தவிர்க்க முடியாது போய்விடும்.

### நோயின் அறிகுறிகளை நீங்களே இனங்காண முடியும்.

உங்கள் சருமத்தில் சந்தேகத்திற்கிடமான தடம் ஒன்று காணப்பட்டால் ஒரு பஞ்சுத் துண்டினால் அல்லது நூலினால் அதனை மெதுவாகத் தட்டி உணர்வு தெரிகிறதா என்று பாருங்கள். வலி தெரிகிறதா என்று பார்க்க ஊசியினால் மெல்லக் குத்தலாம்.

### குஷ்டரோகத்தின் ஆரம்ப அறிகுறிகள்

- சருமத்தில் நமைச்சல் அளிக்காத, வெளிறிய அல்லது செந்நிறத் தடங்கள் தோன்றும்.
- இந்தத் தடங்களில் உணர்வோ வலியோ இருக்காது.
- கை கால்களில் விறைப்பு ஏற்படக்கூடும்.
- தடங்களுக்குப் பதிலாகக் கட்டிகள் அல்லது கழலைகள் தோன்றக்கூடும்.

சுகாதார, மகளிர் விவகார அமைச்சு

சிபா கெய்கி குஷ்டரோக நிதியம்

மேலதிக விபரங்களைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல மருத்துவ மாது, பொதுச் சுகாதாரத் தாதிமார் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியிடம் பெறலாம்.

CGL 3439

இப்பொழுது உடல் விகாரங்களின்றிக் குஷ்டரோகத்தை முற்றாகக் குணப்படுத்தலாம். இன்றே சிகிச்சை பெறுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தான்சன் கல்வி நிலையம்**
தெல்லிப்பழை.
ஆண்டு 11, 10, 9 புதிய பிரிவுகள்
நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு J. R. சூரி |
| கணிதம் | — | திரு. மகேந்திரன், மதி |
| தமிழ் | — | திரு. கணேஷ் |
| சமூகக்கல்வி | — | திரு. திருக்குமார் |
| வர்த்தகம் | — | திரு. வரதன் |
| ஆங்கிலம் | — | திரு. ஹரிதாஸ் |

சஞ்சீவி சஞ்சிகை

31 - 03 - 1990 சனிக்கிழமை

**தான்சன் கல்வி நிலைய**
தெல்லிப்பழை
A/L DAY CLASS
நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. சண் |
| வர்த்தகம் | — | திரு. சிவா |
| கணக்கியல் | — | திரு. யோகன் |
| | — | திரு. வாசன் |
| அளவையியல் | — | திரு. சயந்தன் |
| தமிழ் | — | திரு. கணேஷ் |
| இந்து நாகரீகம் | — | திரு. MR. |

# சோவியத் சமஷ்டி அமைப்பு உடைந்து போகும் நிலையில்

## பால்டிக் குடியரசுகளின் எழுச்சியை கோர்பச்சேவ் சமாளிப்பாரா?

சோவியத் யூனியன் தற்போது பெரும் நெருக்கடி ஒன்றை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அதுதான் பால்டிக்(Baltic) குடியரசுகளில் ஏற்பட்டுள்ள எழுச்சி. லித்து ஏனியா, லட்வியா, எஸ்ரோனியா ஆகியவையே பால்டிக் குடியரசுகள் ஆகும்.

சோவியத் யூனியனின் 15 குடியரசுகளில் இவையும் அடங்குகின்றன. பால்டிக் கடலை அண்டி இருப்பதால் பால்டிக் குடியரசுகள் என்று இவை அழைக்கப்படுகின்றன.

இந்த மூன்று குடியரசுகளும் லித்து ஏனிய கம்யூனிஸ்ட் கட்சி கடந்த டிசம்பர் மாதம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியுடனான தொடர்பைத் துண்டித்திருந்தது. இம்மாதம் 11 ஆம் திகதி சோவியத் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்ட நாடாக தன்னைச் சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டது.

லித்து ஏனியத் தலைவர்கள் தமது சுதந்திரப் பிரகடனத்தைக் கைவிட சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் மூன்று நாள் அவகாசம் கொடுத்திருந்தார். பயமுறுத்திப் பணியவைக்கும் முயற்சியாக லித்து ஏனியாவின் தலை நகருக்கு சோவியத் டாங்கிகள் கவச வாகனங்கள் அனுப்பப்பட்டன. மூன்று நாள் காலக்கெடு கழிந்துவிட்டது. சோவியத் யூனியன் இன்னும் பொறுமையாகவே இருந்து வருகிறது.

### பெரும் நெருக்கடி

சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவின் ஐந்து வருடகால ஆட்சியில் இந்த பால்டிக் நாடுகள் பிரச்சினை பெரும் நெருக்கடியாகக் கருதப்படுகிறது.

சோவியத் நாடாளுமன்றமான காங்கிரஸால் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் இந்தப் பிரச்சினையை எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்பதை முழு உலகமும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது 1924 ஆம் ஆண்டு சோவியத் யூனியனில் சமஷ்டி ஆட்சி அமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் இந்த அமைப்பில் ஏற்பட்ட முதலாவது வெடிப்பாக லித்து ஏனிய சுதந்திரப் பிரகடனம் கருதப்படுகிறது.

### 1940 இல் இணைப்பு

இரண்டாவது உலக மகா யுத்த ஆரம்பகாலத்தில் அதாவது 1940 ஆம் ஆண்டு லித்து ஏனியா, லட்வியா, எஸ்ரோனியா ஆகிய இந்த மூன்று பால்டிக் நாடுகளும் சோவியத் யூனியனுடன் இணைக்கப்பட்டன.

இது தொடர்பான ஒப்பந்தம் 1939 ஆம் ஆண்டு கைச்சாத்தானது. சோவியத் யூனியன்சார்பாக மொலொரோவ் (Molotov) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். ஜேர்மனி சார்பாக ரிப்பென்ரொப் (Ribbentrop) கையெழுத்திட்டார்.

அப்போதைய சோவியத் தலைவரான ஜோசப் ஸ்ராலினும் ஜேர்மன் தலைவர் அடோல்ப் ஹிட்லரும் இந்த மூன்று நாடுகளும் சோவியத் யூனியனின் செல்வாக்கு உட்பட்டவை என்பதில் இணக்கம் கண்டதை அடுத்து ஒப்பந்தம் கைச்சாத்தானது.

தற்போது லித்து ஏனியாவில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள பொப்பியூலர் புரொண்ட் (Lithuania Popular Front) 1939 ஒப்பந்தம் செல்லுபடியாக மாட்டாது என்று தெரிவிக்கிறது. இதன் தலைவர் வைராரஸ் லாண்ட்ஸ் பேர்கிஸ் (Vytautas Lands Bergis) சுதந்திரப் பிரகடனத்தை வாபஸ் பெறுவதற்கு மறுத்து வருகிறார்.

### கோர்பச்சேவுக்கு எதிர்ப்பு

சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை இந்த மூன்று பால்டிக் குடியரசுகளும் எதிர்க்கின்றன. தமது சுதந்திரக் கோரிக்கைகளை நசுக்கி இந்த அதிகாரங்கள் பயன்படுத்தப்படலாம் என்று இந்த நாடுகள் அஞ்சுகின்றன.

சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டது அவருக்குக் கிடைத்த பெரும் வெற்றி என்றே கருதப்படுகிறது.

சோவியத் அதிபருக்குக் கிடைத்த மற்றொரு வெற்றி பல தசாப்தகாலமாக இருந்து வந்த கம்யூனிஸ்ட் கட்சியின் ஏகபோகத்தை ஒழித்தது ஆகும்.

யுத்த பிரகடனம் செய்தல், இராணுவச் சட்டத்தைப் பிரகடனம் செய்தல், எந்த ஒரு குடியரசின் ஆட்சி மன்றத்தையும் கலைத்தல், நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றை மீள்பரிசீலனைக்காகத் திருப்பி அனுப்புதல் உட்பட பல உயர் அதிகாரங்கள் சோவியத் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன. அமெரிக்க — பிரெஞ்சு ஜனாதிபதிகளுக்குக் கூட இப்படியான அதிகாரங்கள் கிடையா.

அரசியல் - பொருளாதார சீர்திருத்தங்களைத் துரிதமாக அமுல் செய்வதற்கு இப்படியான அதிகாரங்கள் தமக்குத் தேவை என்று அதிபர் கோர்பச்சேவ் கருதுகிறார்.

அளவுக்கு மிஞ்சிய இந்த அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படலாம் என்று கோர்பச்சேவ் எதிர்ப்பாளர்கள் கருதுகிறார்கள்.

கோர்பச்சேவ் ஆட்சிக்குப் பிறகு மற்றொரு ஸ்ராலின் யுகம் உருவாக இந்த ஏகபோக அதிகாரங்கள் காரணமாகலாம் என்று இவர்கள் அஞ்சுகிறார்கள்.

ஜோசப் ஸ்ராலினின் நீண்ட ஆட்சிக்காலத்தில் சோவியத் யூனியன் கடுமையான அடக்குமுறையின் கீழ் இருந்துவந்தது. இரும்புத்திரை நாடு என்ற பெயர் சோவியத் யூனியனுக்கு ஏற்பட்டதும் ஸ்ராலினின் காலத்தில்தான். ஆனால் சோவியத்யூனியனின் பெரிய வல்லரசு நாடாக உருவெடுத்ததும் ஸ்ராலினின் காலத்தில்தான் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

59 வயது நிரம்பிய சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் பொருளாதாரப் பயமுறுத்தல் மூலமும் லித்து ஏனியாவை பணிய வைக்க முயற்சிக்கிறார்.

லித்துஏனியா மூலதன முதலீடு மூலம் 2700 கோடி டாலரையும் மற்றும் பொருள் கொள்வனவுமூலம் 600 கோடி டாலரையும் சோவியத் யூனியனுக்குத் தரவேண்டும் என்று கோர்பச்சேவ் மிரட்டி வருகிறார்.

அத்துடன் எரிபொருள் மற்றும் மூலப்பொருள்களுக்கான லித்து ஏனியாவுக்கான சோவியத் யூனியனின் மானியமும் நிறுத்தப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்ட் அமைப்பு தோல்வி கண்டுவரும் இந்த நேரத்தில் சோவியத் யூனியனின் சமஷ்டி அமைப்புக்குள்ளேயே இந்தநிலை ஏற்பட்டிருப்பது துரதிர்ஷ்டமானது ஆகும்.

லித்து ஏனியா மீதான எந்த ஒரு சோவியத் [illegible] னுவத் தலையீடு [illegible] அரங்கில் மட்டும் அல்ல சோவியத் குடியரசுகளுக்குள்ளேயே பெரும் எதிர்ப்பைக் கிளப்பலாம்.

தற்போதைய கால மாற்றத்தை அனுசரித்துசோவியத் அதிபர் பொறுமையைக் கடைப்பிடிப்பதற்கு இதுவே காரணம்.

5 ஆண்டுகளுக்கு முன்னர் சோவியத் அதிபராக மிக்கெய்ல் கோர்ப்பச்சேவ் பதவி ஏற்ற சமயம் சோவியத் யூனியனும் அதன் தோழமை நாடுகளான கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளும் மேற்கு நாடுகளுக்கு நிகராக பெரும் பலம் வாய்ந்த அமைப்பாக சர்வதேச அர[illegible] கருதப்பட்டுவந்தன.

தற்போது கிழக்கு ஐரோ[illegible]பிய கம்யூனிஸ்ட் நாடுக[illegible] சோவியத் யூனியனின் பிடி[illegible] இருந்து நழுவிவிட்டன.

சில சோவியத் குடியரசுகளும் சோவியத் பிடியில் இருந்து விடுபட விரும்புகின்றன.

இன்னும் சிறிது காலத்தில் சோவியத் யூனியன் எப்படி இருக்கப்போகிறது என்பது சோவியத் அதிபரின் நடவடிக்கையிலேயே தங்கியிருக்கிறது. ★

உலக உலா
என்.பி.சீலன்

## சோவியத் யூனியனின் 15 குடியரசுகள்

சோவியத் யூனியன் மொத்தம் 15 குடியரசுகளை உள்ளடக்கிய ஒரு சமஷ்டி அமைப்பு.

15 குடியரசுகளும் வருமாறு:-

1. ஆர்மேனியா (Armenia)
2. அசெர்பைஜான் (Azerbaijan)
3. பைலோரஷ்யா (Byelorussia)
4. எஸ்ரோனியா (Astonia)
5. ஜோர்ஜியா (Georgia)
6. கசாக்ஸ்ரான் (Kazakhstan)
7. கிர்கிசியா (Kirgizia)
8. லட்வியா (Latvia)
9. லித்து ஏனியா (Lithu Ania)
10. மோல்டாவியா (Moldavia)
11. ரஷ்யன் எஸ். எவ். எஸ். ஆர். (Russian S F.S.R.)
12. தட்சிகிஸ்ரான் (Tadzhikistan)
13. தேர்க்மெனிஸ்தான் (Turkmenistan)
14. உக்ரெய்ன் (Ukraine)
15. உஸ்பெகிஸ்ரான் (Uzbekistan)

இந்த 15 குடியரசுகளிலும் தற்போது 6 குடியரசுகள் சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்ப்பச்சேவுக்குத் தொல்லை கொடுக்கும் குடியரசுகளாக இருந்து வருகின்றன.

அவையாவன:-

1. லித்து ஏனியா 2. லட்வியா 3. எஸ்ரோனியா 4. ஜோர்ஜியா 5. மோல்டாவியா 6. அசெர்பைஜான்

### லித்து ஏனியா

இந்த 6 குடியரசுகளிலும் லித்து ஏனியாவே இன்று சோவியத் யூனியனுக்குத் தொல்லை கொடுக்கும் குடியரசுகளில் முன்னணியில் இருந்துவருகிறது.

### லட்வியா

லித்து ஏனியாவுக்கு அடுத்ததாக கம்யூனிஸ்ட் லாத கட்சிகளும் இயங்குவதற்கு சட்டபூர்வமாக அனுமதி அளித்த சோவியத் யூனியனின் இரண்டாவது குடியரசு லட்வியா ஆகும். இங்கு பொப்பியூளர் புரண்ட் (Popular Front) ஆட்சியில் இருந்துவருகிறது. லட்வியாவில் இருந்து சோவியத் நாடாளுமன்றமான காங்கிரஸில் அங்கம்வகிப்போரில் 75 சதவீதமானோர் பொப்பியூளர் புரண்டைச் சேர்ந்தவர்கள். லட்வியாவின் சுதந்திரத்துக்காக போராடப்போவதாக இந்தக் கட்சி அறிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் லட்வியாவின் தலைநகரான றிக்காவில் (Riga) நடந்த மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றில் சுமார் 6 லட்சம் மக்கள் கலந்து கொண்டு (லட்வியாவின் சனத்தொகையில் அரைப் பங்கு) தன்னாட்சிக் கோரிக்கை எழுப்பினர்.

### எஸ்ரோனியா

எஸ்ரோனியாவிலும் பொப்பியூளர் புரொண்ட் கட்சியே இன்று பெரும்பான்மைக்கட்சியாக இருந்து வருகிறது. சோவியத் யூனியனால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு நாடாகவே எஸ்ரோனியாவை இந்தக் கட்சி கருதுகிறது.

எஸ்ரோனியா சுதந்திர நாடாக்கப்படவேண்டும் என்றும் அதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்றும் இக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

### ஜோர்ஜியா

ஜோர்ஜியாவின் இறைமையில் சோவியத் யூனியன் தலையிடுவதாக பெரும்பாலான ஜோர்ஜிய மக்கள் கருதுகிறார்கள்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இங்கு நடந்த சோவியத் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது சோவியத் துருப்புக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 19 பேர் கொல்லப்பட்டனர்.

சோவியத் எதிர்ப்பு உணர்வுகள் இங்கு பெரும் அளவில் இருந்து வருகின்றன. வேலை நிறுத்தங்கள் அடிக்கடி இடம்பெற்றுவருகின்றன.

### மோல்டாவியா

மோல்டாவியாவின் மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் ருமேனியா வம்சாவழியினர். ருமேனியாவில் தற்போது கிசெஸ்குவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டிருப்பதால் பெரும்பாலான மோல்டாவியர்கள் ருமேனியாவுடன் நெருங்கிய உறவு வைக்கவே விரும்புகின்றனர்.

1940 இல் ஸ்ராலினால் சோவியத் யூனியனுடன் இணைக்கப்பட்ட பெஸ்ஸராபியா (Bessarabia) என்ற பகுதியே தற்போதைய மோல்டாவியா குடியரசு ஆகும்.

### அசெர்பைஜான்

அசெர்பைஜானில் பெரும்பான்மையானோர் ஷியா முஸ்லிம்கள். ஷியா முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஈரானிய எல்லையில் இக்குடியரசுகள் அமைந்துள்ளது. 1917 சோவியத் யூனியனில் லெனின் தலைமையில் போல்ஸ்விக் புரட்சி ஏற்பட்டதை அடுத்து மிகவும் சொற்பகாலம் அசெர்பைஜான் சுதந்திர நாடாக இருந்தது. பின்னர் 1920 ஆம் ஆண்டு சோவியத் யூனியனின் செஞ்சேனை (Red Army) இதனை மீண்டும் கைப்பற்றிக்கொண்டது. கடந்த புதுவருடநாட்களில் அசெர்பைஜானில் உள்ள ஷியா முஸ்லிம்கள் எல்லையைக் கடந்து வந்து ஈரானிய ஷியாம் முஸ்லிம்களுடனான தோழமையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர்.

# இந்திய அணியின் காப்டனாக ஸ்ரீகாந்த் மீண்டும் வருவாரா?

● நியூசிலாந்திலும் இந்திய அணி பெரும் தோல்விகளைச் சந்தித்து உள்ளதே!

— நியூசிலாந்து சென்ற இந்திய அணியில் இளைஞர்களே பங்குபெற்றுள்ளனர். அவர்கள் அனுபவத்தைப் பெறபோதிய கால அவகாசம் தரவேண்டும். எடுத்த உடனே நல்ல முடிவுகளை எதிர்பார்க்கமுடியாது. அனுபவத்தினால் அவர்கள் நன்கு பிரகாசிப்பார்கள் என்பது மட்டும் உண்மை.

● இந்திய அணியில் 'டீம் ஸ்பிரிட்' உடன் யாரும் விளையாடுவதில்லை என்ற குற்றச்சாட்டு நிலவிவருகிறதே!

— இந்தியா வெற்றிபெற்றால், ஆஹா அனைவரும் 'டீம் ஸ்பிரிட்' உடன் விளையாடி வெற்றிகண்டனர் என்று சொல்வார்கள். அதே நேரம் தோல்வி அடைந்தால் எல்லோரும் மோசமாக ஆடினர் என்று சொல்வார்கள்.

ஆனால் ஒரு கிரிக்கெட் அணி எப்போதும் எந்த சூழ்நிலையிலும் திறமையாக விளையாடும் என்று சொல்ல முடியாது.

அனைவரும் நன்கு விளையாடினாலும் எப்போதும் போல முடிவுகள் இருக்காது.

சிறந்தமுறையில் விளையாடும் அணி வெற்றியைப் பெறுகிறது.

போட்டி என்றால் வெற்றியும் தோல்வியும் உண்டு. ஆகையால் தோல்வி கிடைத்தால் டீம் ஸ்பிரிட் இல்லை என்று சொல்லிவிடக்கூடாது.

**பிஷன்சிங் பேடி பற்றி...**

● நியூசிலாந்து பயணத்தின்போது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா எதிர்பாராத தோல்வியை அடைந்தது. அச்சமயம் இந்திய அணியின் மனேஜர்

> இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் திரு. ஸ்ரீகாந்த் கடந்தவாரம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.
>
> இந்திய அணியின் கப்டன் பதவி மீண்டும் கிடைக்குமா? உட்பட பல கேள்விகளுக்கும் அவர் பதிலளித்திருக்கிறார்.

பிஷன்சிங்பேடி இந்திய வீரர்களைப் பார்த்து, 'கடலில் குதித்து தற்கொலை செய்து கொள்ளுங்கள்' — என்று கூறியது பற்றி...

— பிஷன் சிங் பேடி அவ்வாறு பேசியிருக்கக்கூடாது. வீரர்களின் ஆட்டத்தை விமரிசிப்பது நல்லதுதான்.

அந்த வீரர் இப்படி ஆடினார், இவ்வாறு ஆடியதால் தான் அவுட்ஆனார். இது அவர் செய்த தவறு என்று விமர்சனம் செய்தால், அதைப் படிக்கும் அந்த வீரர் தன் தவறை உணர்ந்து கொள்ளவும், அதே தவறை மறுமுறை செய்யாமல் தவிர்க்கவும் முடியும்.

விமர்சனங்கள் இவ்வாறு தான் இருக்கவேண்டுமே ஒழிய பேடி கூறியதைப்போல இருக்கக்கூடாது.

● இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் பதவி மீண்டும் உங்களுக்குக் கிடைக்குமா? கிடைத்தால் ஏற்றுக்கொள்வீர்களா?

— கிடைக்கலாம். கிடைத்த பின்னர் பார்க்கலாம்.

● மீண்டும் இந்திய அணியில் இடம்பெறுவீர்களா?

— நான் தினமும் கடுமையான பயிற்சி எடுத்துவருகிறேன். முதல்தர கிரிக்கெட் மற்றும் லீக் போட்டிகளில் எனது திறமையை வெளிப்படுத்துவேன்.

● வேறொரு கப்டன் கீழ் விளையாட சம்மதிப்பீர்களா?

— இதில் என்ன? இந்திய நாட்டுக்காக விளையாடுவது என்பது மரியாதை, கௌரவம் ஆகும்.

**மிக மோசமான போட்டி**

● தாங்கள் விளையாடிய போட்டிகளிலேயே மிகச் சிறந்ததாக எதனைக் கருதுகிறீர்கள்!



ஸ்ரீகாந்த்

— 1983ஆம் ஆண்டு நடந்த உலக கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் பெரிய அணியான மேற்கிந்தியத் தீவுகளையே வெற்றிகொண்டோம்.

ஆனால் 183 ரன்களுக்கு நாம் ஆட்டம் இழந்தவுடன் வெற்றி கிடைக்காது என்று எண்ணினாலும், விளையாடினோம், வெற்றிபெற்றோம். மறக்கமுடியாத போட்டி அது.

● நீங்கள் மறக்கமுடியாத மோசமான போட்டி எது?

— (சிரிப்புடன்) சிறப்பாக ஆடாதது எல்லாம் மோசமான ஆட்டம்தானே! ★

விளையாட்டுத் தளம்

## சொற்சிலம்பம் இல. 110
### பரிசு பெற்றவர் விபரம்

**முதலாவது பரிசு.**
ம. நிருபன், மே/பா வ. மயில்வாகனம்,
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

**இரண்டாவது பரிசு;**
திரு. கே. இராஜகோபால், 'பொன்மனை'
தொல்புரம், சுழிபுரம்.

**மூன்றாவது பரிசு:**
செல்வி எஸ். சர்மிளா,
மே/பா திரு. எம். சண்முகலிங்கம்,
புதுச் செம்மணி றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

**சொற்சிலம்பம் இல. 110, சரியான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. கமலம் 4. சகதி 6. பதம் 7. வரம் 8. புதினம் 10. அம் 12. திடம் 13. குருணை 16. அரவு 18 திருமகள் 20. மதுரை 23. இம்பு 24. அளி 25. உமி 26. தொல்.

**மேலிருந்து கீழ்**

1. கபடம் 2. மத 3. சிலம்பு 4. சரம் 5. கம் 7. வனம் 9. கடவு 11. அரு 12. திரள் 14. குதிரை 15. கருணை 16. அகதி 17. அமனி 19. மம்மி 21. துளி 23. அல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org